# தொடக்கக்கல்வி ஆசிரியப் பட்டயக் கல்வி
# DIPLOMA IN ELEMENTARY EDUCATION D.El.Ed.

பருவம் - 3

## தாள் - 303
## தமிழ் மொழிக் கற்பித்தல் -
## அணுகுமுறையும் - முறைகளும்


கேரள அரசு

பொதுக் கல்வித்துறை

**மாநிலக் கல்வியாராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் (SCERT), கேரளம்**

**2019**

**State Council of Educational Research and Training (SCERT)**
Poojappura, Thiruvananthapuram 695012, Kerala
*Website* : www.scertkerala.gov.in, *e-mail* : scertkerala@gmail.com
Phone : 0471 - 2341883, Fax : 0471 - 2341869
Typesetting and Layout : SCERT

©
Department of Education
Government of Kerala

# முகவுரை

# உள்ளடக்கம்

**பருவம் – 3**

**தாள்–303 தமிழ்மொழிக் கற்பித்தல் – அணுகுமுறையும் – முறைகளும்**

அலகு 1 - தமிழ்மொழியின் தனித்தன்மைகள்

அலகு 2 - தொடக்கநிலை வகுப்புப் பள்ளி அனுபவ நிகழ்ச்சி

அலகு 3 - மொழியும் தொழில்நுட்பமும்

## அலகு 1

# தமிழ்மொழியின் தனித்தன்மைகள்

### முன்னுரை

இரண்டு பருவங்களை வெற்றிகரமாக நிறைவு செய்து மூன்றாவது பருவத்திற்கு வந்துள்ளோம். மொழியிலுள்ள பல்வேறு இலக்கிய இயக்கங்கள், அவற்றின் தனித்தன்மைகள் முக்கியமான இலக்கியப் படைப்புகள், அவை கேரள சமூகத்தில் செலுத்திய தாக்கம் ஆகியவற்றை முந்தைய இரு பருவங்களில் மொழிக் கற்றலின் பகுதியாக நாம் விவாதித்தோம். இக்கால அளவில் அன்றாடப் பாடத்திட்டமிடலின் சில மாதிரிகள் தயாரித்தல், சில செயல்பாடுகளை வகுப்பில் சோதித்துப் பார்த்தல் ஆகியவையும் நடைபெற்றன. முதல் பருவத்தில் ஐந்து நாட்கள் தொடக்கநிலை வகுப்புகளில் பல்வேறு பாடங்களுடன் தொடர்புடைய ஏராளம் செயல்பாடுகளைச் செய்து முடித்தனர்.

பருவம் மூன்றில் முக்கியமாக நாற்பத்தைந்து நாளைய தொடக்கநிலை வகுப்புகளை மையப்படுத்திய பள்ளிக்கூட அனுபவ நிகழ்ச்சிகள் நடைபெற வேண்டும். இதனைச் சிறந்த முறையில் நிறைவு செய்ய வேண்டுமாயின் திட்டமிடும் வேளையிலேயே அதிக கவனம் செலுத்த வேண்டும். பாடப்பகுதியின் பகுப்பாய்வுத் திட்டங்கள் தயாரித்தல், தேவையான கற்றல் கருவிகளை உருவாக்குதல் போன்றவையும் இத்துடன் இணைந்தே நடைபெற வேண்டும்.

ஆசிரிய மாணவர் என்னும் நிலையில் வகுப்புகளைப் பயனுள்ள வகையில் நடைமுறைப்படுத்துவதற்கு உதவுகின்ற செயல்பாடுகளே இந்த அலகில் உட்படுத்தப்பட்டுள்ளன. குறிப்பாகத் தொடக்கநிலை வகுப்புகளுக்கு முக்கியத்துவம் அளிக்கும் அணுகுமுறையே பின்பற்றப்பட்டுள்ளது.

> *பத்தாவது வகுப்பில் உள்ள மாணவர்களுள் சிலருக்கு பிழையின்றி எழுதவும் வாசிக்கவும் இயலவில்லை. தொடக்கப் பள்ளி ஆசிரியர், குழந்தைகளுக்குப் பிழைத்திருத்தம் செய்து கொடுக்காததாலேயே இவ்விதம் நிகழ்கிறது. தொடக்கநிலை வகுப்பு மாணவர்களுக்கு ஏற்படும் எழுத்துப் பிழைகளை அவ்வப்போது திருத்திக் கொடுக்க வேண்டும். அப்போது தான் உயர்நிலைப் பள்ளி அளவில் நாம் எதிர்பார்க்கும் கற்பித்தல் நோக்கங்களைப் பெறுவதற்கான திறன்கள் மாணவர்களுக்கு உருவாகும்.*

இக்கூற்றிற்கான உங்கள் பதில் என்ன, ஏன்?

குழந்தைகளுக்கு எழுத்துப்பிழை ஏற்படுவதற்கான காரணம் என்ன?

தொடக்க நிலை வகுப்புகளில் மொழிக் கற்றல் எவ்வாறு அமைய வேண்டும்?

ஒன்று, இரண்டு வகுப்புப் பாடப்புத்தகம் ஆசிரியர் கையேடு ஆகியவற்றை மதிப்பிடுங்கள்.

முன் பருவத்தில் கலந்துரையாடிய கருத்துகளின் அடிப்படையில் கலந்துரையாடவும்.

கலந்துரையாடலுக்கு உதவும் வகையில் கீழே தரப்பட்டுள்ள பகுதியை வாசித்துப் பாருங்கள்.

### மொழிக் கற்றல் அணுகுமுறை

மொழியின் முக்கிய வேலை கருத்துப் பரிமாற்றமாகும், மனதிலுள்ள கருத்துகளை அச்சமின்றி பிறரை அறிவிக்கும் திறனை மாணவர்கள் பெற்றிருக்க வேண்டும். கருத்துகளைப் பரிமாற்றம் செய்ய வேண்டுமாயின் கருத்துகளை உட்கொள்ள வேண்டும். அதாவது சிறந்த முறையில் கருத்துப் பரிமாற்றம் செய்வதற்கு இரண்டு நிலைகள் உள்ளன. அவை கருத்துகளை உட்கொள்ளலும், கருத்து

களை வெளியிடுதலும் ஆகும். கேட்டலும், வாசித்தலும் கருத்துகளை வெளியிடுவதற்குப் பல்வேறு முறைகள் உள்ளன. பேசுதல், எழுதுதல், ஓவியம், நடிப்பு ஆகியவை இதனுள் அடங்கும்.

முதல் வகுப்பில் வருகின்ற மாணவர்களுக்குக் கேட்பதற்கும் பேசுவதற்கும் ஏராளம் வாய்ப்புகள் கிடைத்திருக்கும். ஆனால் மாணவர்களின் குடும்பம், சுற்றுப்புறம் இவைக் கேற்ப மாறுபாடுகள் காணப்படலாம். எனவே மாணவர்களுக்குக் கண்டிப்பாகக்கேட்பதற்கும் பேசுவதற்குமான ஏராளம் வாய்ப்புகளை உருவாக்க வேண்டும்.

வேறு பல்வேறு வழிமுறைகள் இருந்தாலும் கருத்து வெளியீட்டிற்கு எழுத்துச் செயல்பாடு கட்டாய மாக இருக்க வேண்டும். எனவே எழுதுவதற்கு முக்கியத்துவம் அளிக்கும் வாய்ப்புகளையும் மாண வர்களுக்கு அளிக்க வேண்டும். சுருங்கக் கூறின் முறைசார்ந்த, முறைசாராத பல வழிமுறைகளை ஒருங்கிணைத்துச் சிறந்த கருத்துப் பரிமாற்றத் திறனை வளரச் செய்வதற்கு முயற்சிக்க வேண்டும்.

கருத்து வெளியீட்டு முறை, பட வாசிப்பு, பட எழுத்து, எழுத்துகள், சொற்கள் ஆகியவற்றின் சுழல் முறை, கருத்தாக்க அணுகுமுறை ஆகியவை குறித்து இரண்டாம் பருவம் தொடர்பாகக் கொடுக் கப்பட்டுள்ள விளக்கத்தை வாசிக்கவும்.

■ கலந்துரையாடல், பகுப்பாய்வு ஆகியவற்றின் அடிப்படையில் ஒன்று, இரண்டு வகுப்புகளின் மொழி அணுகுமுறையைக் குறித்துக் குறிப்புத் தயாரிக்கவும்.

## ஒருங்கிணைந்த அணுகுமுறை

குழந்தை உலகைப் பார்ப்பது எவ்வாறு?

தண்ணீர் என்ற கருத்துத் தொடர்பாக முதல் வகுப்பிலுள்ள குழந்தை பெற்றுள்ள கருத்துகள் எவை?

- தண்ணீருக்கு ஏராளம் பயன்கள் உள்ளன. ( குடிப்பதற்கு, குளிப்பதற்கு, உணவு சமைப்பதற்கு, தாவரங்களுக்கு ஊற்றுவதற்கு )
- குடிப்பதற்கான தண்ணீர், கிணறு, குழாய்கள், பிற நீர்நிலைகளிலிருந்து கிடைக்கின்றன.
- எல்லா உறைவிடங்களிலுமுள்ள தண்ணீரைக் குடிக்க இயலாது.
- நீர்ப்பெருக்கு, (கூடுதல்), பற்றாக்குறை
- தண்ணீரை மையப் பொருளாகக் கொண்டு ஏராளம் பாடல்களும் கதைகளும் உள்ளன.

குழந்தையின் இந்த அறிவு எந்தெந்த பாடங்களுடன் தொடர்புடையவை.

தமிழ், கணிதம், அறிவியல், சமூக அறிவியல் போன்று பல்வேறு பாடங்கள் தொடர்பான பல்வேறு கருத்துகளைப் பாடத் தொடர்பின்றியே புரிந்துகொள்கிறார்கள். குழந்தைகள் அனுபவங்களையும் கருத்துகளையும் பெறுவதற்குக் கற்றல் அனுபவங்களையும் அளிக்கவேண்டுமல்லவா? இதற்காகப் பல்வேறு பாடங்களின் அனுபவங்களை மாணவர்களுக்கு முழுமையாக அளிக்கும் அணுகுமு றையே ஒருங்கிணைந்த அணுகுமுறையாகும்.

தற்போது ஒன்று , இரண்டு வகுப்புகளில் ஒருங்கிணைந்த முறை நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன.

மொழி, கணிதம், சூழ்நிலையியல் ஆகிய பாடங்கள் தொடர்பான அறிவினைக் குழந்தையின் அன் றாட வாழ்வுடன் தொடர்புடைய ஏதேனும் கருத்தின் அடிப்படையில் வெளியிடும் முறையே இது.

இதுபோன்று கருத்தில் கொள்ள இயலுகின்ற பிற கருத்துகள் எவை? கண்டுபிடிக்கவும்.

- உயிரினங்கள்

- வீடு
- வேளாண்மை
- விளையாட்டு
- ........................
- ........................

கண்டுபிடித்த கருத்துகள் குறித்துக் கலந்துரையாடுவதற்கான பாடங்களின் வாய்ப்புகளைப் பரிசோதிக்கவும்.

ஒன்று இரண்டு வகுப்புப் பாடப்புத்தகங்களைப் பகுப்பாய்வு செய்து அவற்றில் உள்ள கருத்துகளையும் அதன் வாயிலாக அடைய வேண்டிய அறிவினையும் கண்டுபிடித்து எழுதவும்.

இந்த முறையின் மேன்மைகள் எவை?

- மையக் கருத்துத் தொடர்பான கருத்துகள் கூடுதல் ஆழமாகக் கிடைக்கின்றன.
- கால அளவின் இலாபம்
- அறிவு அதன் இயல்பான முறையில் கிடைக்கிறது.
- ............................
- ............................

மேலும் சேர்க்கவும்

■ வகுப்பில் நடைபெறும் கலந்துரையாடல், வாசிப்பு இவற்றின் அடிப்படையில் 'ஒருங்கிணைந்த அணுகுமுறையின் முக்கியத்துவம் தொடக்கநிலை வகுப்புகளில்' என்னும் பொருளில் கட்டுரை தயாரிக்கவும்.

| |
|---|
| இலக்கணம் கற்கவேண்டும்; அதன் வாயிலாக மட்டுமே மொழியைக் கற்க இயலும். |

இந்தக் கருத்தின் எதிர் கருத்தினை வகுப்பில் கலந்துரையாட வேண்டும்.

கருத்துக்கு உடன்படுவோர் எத்தனை பேர்? ஏன்? உடன்படாதவரா? ஏன்?

நீங்கள் தாய்மொழியைக் கற்றது இலக்கணம் படித்த பின்னரா?

இலக்கணத்தை நன்றாகப் படித்த பின்பும் தாய்மொழி அல்லாத மொழிகளில் நம்பிக்கை கிடைக்காதது ஏன்?

சிறு குழந்தைகள் மொழியை எளிதில் கற்றுக் கொள்வது எவ்வாறு?

நான் இன்று அம்மாவுடன் பள்ளிக்கு வருவேன் இந்த வாக்கியத்தைக் கூறும் குழந்தையின் இலக்கண அறிவு என்ன?

குழந்தைக்கு இந்தப் புரிதல்கள் எவ்வாறு ஏற்பட்டன?

அவ்வாறாயின் இலக்கணம் பற்றிய நமது நிலைப்பாடுகள் எதுவாக இருக்க வேண்டும்?

வகுப்பில் கலந்துரையாடுங்கள்.

கலந்துரையாடலுக்கு முன்னர் கீழே தரப்பட்டுள்ள உரை நடைப் பகுதியை வாசிக்கவும்.

இலக்கண கல்வி எவ்வாறாக இருக்க வேண்டும் என்பது குறித்துப் பல்வேறு விவாதங்கள் நடந்துகொண்டிருக்கின்றன. இலக்கணத்தை நேரடியாகக் கற்பிக்க வேண்டுமெனவும் அது போன்ற கல்வியே மொழி வளர்ச்சிக்கு உதவுகிறது என்ற உறுதியான கருத்துகள் உள்ளன. ஆனால் மூன்று வயதான குழந்தை இலக்கணப் பிழையின்றி மொழியைப் பயன்படுத்துகிறது. குழந்தைக்கு இலக்கணம் கற்பித்தது யார்? வாக்கியங்களிலுள்ள இலக்கணத்தைச் சுயமாகப் புரிந்துகொண்டு பயன்படுத்தவும் மொழியிலுள்ள தவறுகளை சுயமாகக் கண்டுபிடிப்பதற்கு மான பயன்பாட்டு இலக்கணமே சிறந்தது என்னும் கருத்தும் நிலவுகிறது.

இலக்கணம் கற்பது எதற்கு?

மொழிப் பயன்பாட்டை மிகவும் மேம்படுத்துவதற்கும் சிறு எழுத்துப் பிழைகள் கூட பொரு ளில் பெரிய மாற்றத்தை ஏற்படுத்தும் சொற்கள் சேரும் போதும் சொற்களைப் பிரித்தெழுதும் போதும் இரு சொற்களுக்குக்கிடையே உள்ள தொடர்பினைக் கண்டுபிடிக்கும் போதும் — போன்ற மொழிப் பயன்பாட்டின் வெவ்வேறு சூழல்களில் ஒழுங்கும் நுட்பமும் கருத்தின் முழுமையும் இருக்க வேண்டும் என்பதைக் குழந்தைகள் அறிந்திருக்க வேண்டும்.

கீழே கொடுக்கப்பட்டுள்ள வாக்கியங்களைக் கவனிக்கவும்.

கோகுல் பந்து விளையாடினான்.

ராதா மஞ்சள் ஆடை அணிந்தாள்.

சோமன் வேகமாக ஓடினான்.

மேலே தரப்பட்டுள்ள வாக்கியங்களில் வேலை செய்பவர்கள் யார் யார்?

.........................................

அவர்கள் செய்யும் வேலையின் பயனை அனுபவிப்பவர்கள் யார், எவை?

மஞ்சள், வேகமாக ஆகிய சொற்களின் தனித்தன்மை என்ன?

கண்டடைந்த கருத்துகளுடன் கீழே தரப்பட்டிருக்கும் குறிப்புகளையும் பார்க்கவும்.

ஒரு வாக்கியத்தில் ஏதேனும் ஒரு செயலைச் செய்கின்றவரைக் குறிப்பிடும் சொல் அவ் வாக்கியத்தின் எழுவாய் எனப்படும். செய்கின்ற செயல் அல்லது வினையைக் குறிப்பிடு வது எதுவோ அது பயனிலை எனப்படும்.

ஒரு பெயரை அல்லது வினையை (செயலை) சிறப்பித்துக்கூறும் சொல் (பதம்) அடை எனப் படும். பெயரைச் சிறப்பிப்பது பெயரடை, வினையைச் சிறப்பிப்பது வினையடை

கண்டடைதலின் அடிப்படையில் மேலே தரப்பட்டிருக்கும் வாக்கியங்களில் அமைந்துள்ள எழு வாய், பயனிலை, செயப்படு பொருள் ஆகியவற்றை அறியவும் அறிந்தவற்றை வகுப்பில் வெளிப் படுத்துக.

- ஏழாம் வகுப்பில் பாடப்புத்தகத்தில் ஏதேனும் உரைநடைப் பகுதியிலிருந்து ஒரு பத்தியை வாசித்து, அவ்வாக்கியங்களில் அமைந்துள்ள எழுவாய், பயனிலை, செயப்படுபொருள், அடை ஆகியவற்றைக் கண்டடைந்து பட்டியலிடுக. அதனை வாசித்துக்காட்டி மேம்படுத்துக.

## புணர்ச்சி

புணர்ச்சி என்பதற்கு இணைதல் என்பது பொருள். எழுத்துகளோ, சொற்களோ ஒன்றோடொன்று இணையும் போது அவற்றினிடையே பல்வேறு மாற்றங்கள் உண்டாகின்றன. இத்தகைய மாற்றங் களை எடுத்துரைப்பதே புணரியல்.

புணர்ச்சி பொதுவாக இருவகைப்படும்.

1. இயல்புப் புணர்ச்சி, 2. விகாரப் புணர்ச்சி

## இயல்புப் புணர்ச்சி

எவ்வித மாற்றங்களுக்கும் உட்படாமல் ( இயல்பாக) இரு சொற்கள் ஒன்றோடொன்று இணைவது இயல்புப் புணர்ச்சி எனப்படும்.

எ.டு மலர் + விழி = மலர்விழி

பனை + மரம்= பனைமரம்

குடை+ நிழல்= குடைநிழல்

## விகாரப் புணர்ச்சி

விகாரம் என்றால் மாற்றம். ஒரு சொல் இன்னொரு சொல்லுடன் இணையும் போது ஏதேனும் மாற் றங்கள் ஏற்படுமானால் அதனை விகாரப் புணர்ச்சி என்பர்.

விகாரப் புணர்ச்சி தோன்றல், திரிதில், கெடுதல் என மூன்று வகைப்படும்.

## தோன்றல்

சொற்கள் இணையும் போது அவற்றினிடையே புதிதாக ஓர் எழுத்தோ எழுத்துகளோ தோன்றுமா னால் அது தோன்றல் புணர்ச்சி ஆகும்.

எ. டு: மலை + குகை= மலைக்குகை

வாழை + பழம் = வாழைப் பழம்

பனை + ஓலை = பனையோலை

## திரிதல்

புணர்ச்சியின் போது ஓரெழுத்து இன்னொரு எழுத்தாக மாறுவது ( திரிவது ) திரிதல் புணர்ச்சி எனப் படும்.

எ.டு: பல் + பொடி =பற்பொடி

மண் + குடம் = மட்குடம்

கல் + தாழை= கற்றாழை

## கெடுதல்

புணர்ச்சியின் போது ஓரெழுத்து விட்டுப் போகுமாயின் ( கெடுதல்) அது கெடுதல் புணர்ச்சி எனப்ப டும்.

எ. டு: வீரம் + வாள் = வீரவாள்

சட்டம் + திட்டம் = சட்டதிட்டம்

விரிவான கற்றலுக்கு நன்னூல் பார்க்கவும்

## சொல்

சொற்களைப் பொதுவாகப் பெயர்ச்சொல், வினைச்சொல் என இரண்டாகப் பாகுபடுத்துவர். ஏதே னும் பொருளின் அல்லது இடத்தைக் குறிப்பது பெயர்ச்சொல். ஏதேனும் ஒரு செயலைக் குறிப்பது வினைச்சொல்.

பெயர்ச்சொல்லுடன் வேற்றுமை உருபுகள் இணையும், வினைச்சொல் காலம் காட்டும்.

செய்வினை. செயப்பாட்டு வினை

தானாகச் செய்வது செய்வினை

(எ.டு) உண்டான், ஆடினாள், எழுதினார்

பிறரைக் கொண்டு செய்ய வைப்பது செயப்பாட்டு வினை

எ.டு கொடுப்பித்தான், எடுக்கச் செய்தாள், பிறப்பித்தார்.

## வினைமுற்று - எச்சவினை

ஒரு வினை முடிந்து வருமானால் அது வினைமுற்று எனப்படும்.

உண்டான், படித்தாள், பாடினர், வந்தார்கள்.

ஒரு வினை முடிவு பெறாமல் அதன்பின் இன்னொரு வினை அல்லது பெயர் எஞ்சி நிற்குமானால் அது எச்சவினை எனப்படும்.

எ. டு: வந்து, கண்டு, பேசிய, இருந்த

எச்ச வினைகளை பெயரெச்சம், வினையெச்சம் என இரு வகையாகப் பிரிக்கலாம்.

ஒரு வினை முற்றுப் பெறாமல் அதன்பின் ஒரு பெயர்ச்சொல் எஞ்சி நிற்குமானால் அது பெயரெச் சம்.

எ. டு: வந்த மனிதன், பாடிய குழந்தை

வரைந்த ஓவியம், மகிழ்ந்த மாணவன்

ஒரு வினை முற்றுப்பெறாமல் அதன்பின் ஒரு வினைச்சொல் எஞ்சி நிற்குமானால் அது வினை யெச்சம் எனப்படும்.

எ. டு: சென்று வந்தான், படித்து மகிழ்ந்தான், எடுத்து நின்றார், ஓடி விழுந்தார்.

**கீழ் வரும் வாக்கியங்களைப் படித்து மேம்படுத்துக.**

- ஆசிரியர் நேற்று வீட்டிற்கு வருவார்.
- நாளை ஜெர்மனி– அர்ஜன்டீனா கால்பந்து போட்டி நடைபெற்றது.
- இப்போது டென்னீஸ் விளையாட்டு நடைபெற்றது.

நேர, கால வேறுபாட்டைக் குறிப்பிட்ட வினைச் சொல்லில் ஏற்படுத்தும் மாற்றங்கள் என்னென்ன? கலந்துரையாடுக.

## அடை

பெயர் அல்லது வினையைச் சிறப்பிக்கும் சொல் அடை எனப்படும். பெயரை சிறப்பிப்பது பெயர

டை, வினையைச் சிறப்பிப்பது வினையடை

கீழ்வரும் வாக்கியங்களை வாசித்துப் பெயரடைகளையும் வினையடைகளையும் கண்டறிந்து தனித் தனியாகப் பட்டியலிடுக.

குழந்தை வேகமாக ஓடியது.

என்னிடம் ஒரு பெரிய பொம்மை உள்ளது.

அவள் இனிமையாகப் பாடினாள்.

உயர்ந்த மரத்தில் ஏறுவது கடினம்.

வளைவான பாதையில் கார் ஓட்டினார்.

அவன் சுறுசுறுப்பாக விளையாடினான்.

**கீழ்வரும் வாக்கியங்களைப் பொருத்தமான வேற்றுமை உருபுகள் இட்டு நிரப்புக.**

- அவள் ஆசிரியர் ––– பார்த்தாள்.
- மணி––– மாம்பழம் நன்றாகப் பிடிக்கும்.
- நான் கம்பு - பாம்பை அடித்தேன்.
- இராமன் –– சீதையும் வந்தாள்.
- அது இராமன் — வீடு
- கூடு — இரண்டு குஞ்சுகள் உள்ளன.

நீங்கள் நிரப்பிய வேற்றுமை உருபுகள் எவை?

தனித்து நின்று பொருள் தராமல் சொற்களுடன் இணைந்து நின்று பொருள் வேறுபாட்டைத் தரும் ஒலிக்கூறுகளே வேற்றுமை உருபுகள்.

நீங்கள் எவ்வகைச் சொற்களுடன் வேற்றுமை உருபுகளை இணைத்தீர்கள்?

வேற்றுமை உருபுகள் சேர்ந்து வரும் சொற்களுக்குப் பின் வரும் சொல்வகை எது?

பெயர்ச்சொல்லுக்கும் பெயர்ச்சொல்லுக்கும் இடையேயான தொடர்பைக் குறித்துவரும் வேற்றுமை உருபு எது?

இத்தகைய வேற்றுமை உருபுகள் சேர்க்கவில்லை எனில் என்ன ஏற்படும்.

உங்களுடைய கண்டடைதல்களை வெளிப்படுத்திக் கலந்துரையாடுக.

## வேற்றுமை உருபு

பிற சொற்களுடனான தொடர்பைக் குறிக்கப் பெயர்களுடன் சேர்ப்பவையே வேற்றுமை உருபு கள். பெயர்ச் சொற்கள் மட்டும் இத்தகைய உருபுகளை ஏற்கும். வினைச் சொற்கள் ஏற்காது. தமி ழில் வேற்றுமை உருபுகள் எட்டு என்பர். முதல் வேற்றுமை எழுவாய் வேற்றுமை. எட்டாம் வேற் றுமை விளிவேற்றுமை. இவ்விரு வேற்றுமைகளுக்கும் உருபுகள் இல்லை. பிற வேற்றுமைகள் வரு மாறு

ஐ - இரண்டாம் வேற்றுமை

ஒடு (ஆல்) - மூன்றாம் வேற்றுமை

கு- நான்காம் வேற்றுமை

இன்- ஐந்தாம் வேற்றுமை

அது- ஆறாம் வேற்றுமை

கண் - ஏழாம் வேற்றுமை

## தொகை

தொகை என்றால் என்ன?

தொகை என்றால் தொகுத்தல், அதாவது இணைத்தல் என்று பொருள்.

கீழ்வரும் சொல் இணைகளின் தனித்தன்மைகள் குறித்துக் கலந்துரையாடுக.

| | |
|---|---|
| கடலின் கரை | → கடற்கரை |
| பசுவின் கன்று | → பசுக்கன்று |
| மணியின் ஓசை | → மணியோசை |
| மனமாகிய கண் | → மனக்கண் |
| படுப்பதற்கான அறை | → படுக்கையறை |
| மனத்தின் உறுதி | → - |

இவ்வாறு சொற்களை இணைத்துச் சொல்வதால் உள்ள பயன் என்ன?

சொல்லழகு எதில் அதிகம்?

பொருள் தெளிவு துல்லியமாக இருப்பது எதில்?

வேற்றுமை உருபுகளின் உதவி இல்லாமல் ஒலிகளைச் சேர்த்து எழுதுவதே தொகை என லாம்.

வேற்றுமை உருபுகள் சேர்க்காமல் சொற்களை இணைத்து எழுதுவதே தொகை. இத்தகைய சொற்கள் தொகைச் சொற்கள் எனப்படும்.

தொகைச் சொற்களை வேற்றுமை உருபுகள் சேர்த்து விளக்கி எழுதும் போது அவை விரிச் சொற்கள் ஆகின்றன. இவ்வாறு சொற்களைத் தொகைச் சொற்களாகவும் விரி சொற்களாக வும் எழுதுவதன் நோக்கம் என்ன?

- சொற்களுக்கான பொருளில் மயக்கம் ஏற்படாமல் இருக்க .

எ. டு:கறுப்புப் பசுவின் கன்று. இவ்வாறு எழுதும் போது கறுப்பாக இருப்பது பசுவா, கன்றா என்ற ஐயம் எழலாம். இங்கு கறுப்பு பசுக்கன்று என்று சேர்த்துத் தொகைச் சொல்லாக எழுதினால் ஐயம் ஏற்படுவதில்லை.

- சொல்லுக்கு ஆற்றல் கிடைக்க

மணியின் ஓசை என்று எழுதுவதைவிட மணியோசை என எழுதும் போது அச்சொல் ஆற் றல் பெறுகின்றது.

தொகைச் சொற்களில் முதலில் வரும் சொல்லை நிலைமொழி என்றும் தொடர்ந்துவரும் சொல்லை வருமொழி என்றும் குறிப்பிடலாம்.

தொகைச் சொற்களை அவற்றின் அமைப்பிற்கேற்ப மூன்றாக வகைப்படுத்தலாம்.

வருமொழி முக்கியத்துவம் பெறுவது

எ. டு தலையின் வலி- தலைவலி

இங்கு வலி முக்கியத்துவம் பெறுகின்றது.

இன்னொன்று முக்கியத்துவம் பெறுவது

எ. டு. தாமரை போன்ற கண்களை உடையவன்- தாமரைக் கண்ணன்

இங்கு இவ் உவமைக்குரிய இன்னொருவர் ( கண்ணன்)

முக்கியத்துவம் பெறுகின்றான்.

இருமொழியும் முக்கியத்துவம் பெறுவது

எ. டு.

தாயும் தந்தையும் - தாய்தந்தை

இங்கு இருவருமே முக்கியத்துவம் பெறுகின்றனர்.

கட்டுரைகள் எழுதும் போது மாணவர்களுக்குப் பொதுவாக ஏற்படும் குறைபாடுகள் என்னென்ன? சுட்டிக் காட்டுங்கள்............

- எழுத்துப்பிழை
- வாக்கிய அமைப்பு சரியில்லை
- கருத்துத் தெளிவின்மை
- பத்தி அமைப்பதில் ஐயப்பாடு
- கருத்துகளைத் தெளிவுபடுத்துவதற்குத் தகுந்த நிறுத்தற் குறியீடுகள் இடுவதற்குத் தெரிய வில்லை
- ..........................................
- ..........................................
- ..........................................
- ..........................................

ஓர் ஆசிரியை என்ற நிலையில் இத்தகைய பிரச்சினைகளுக்கு எவ்வாறு தீர்வு காணலாம்.

இது குறித்து வகுப்பறையில் கலந்துரையாடுக.

## குறியீடுகள்

எழுதுவதன் பொருளும் கருத்தும் உணர்ச்சியும் வாசகர்களுக்கு சரியாகப் புரியும் பொருட்டுக் குறியீடுகள் பயன்படுத்தப்படுகின்றன.

**(.)** முற்றுப்புள்ளி: ஒரு வாக்கியமா முற்றுப்பெறும் போது இடப்படுவது.

**(;)** அரைப்புள்ளி: ஒரு வாக்கியத்தில் இரண்டு கருத்துகள் வரும்போது அக் கருத்துகளுக்கிடையே இடுவது.

| | |
|---|---|
| **(:)** | ஒரே போல் முக்கியத்துவம் பெறுகின்ற இரண்டு வாக்கியங்களுக்கு இடையே வரும். |
| **('....')** | மேற்கோள்: பிறருடைய கருத்துகளை அப்படியே எடுத்தெழுதும் போது இடப்படுவது. |
| **(,)** | ஒன்றிற்கு மேற்பட்ட பெயர்கள், பொருட்கள் வரும்போது சிறிய இடைவெளிக்காக இடுவது. |
| **(?)** | கேள்விக்குறி: கேள்வி ( வினா) களுக்குப் பின்னால் இடுவது. |
| **(!)** | ஆச்சரியக்குறி: நம்பமுடியாத, அற்புதகரமான கருத்துகளைக் கூறும் வாக்கியங்களுக்குப் பின்னால் வரும் |
| **(-)** | சொற்களைப் பிரித்து எழுதும்போது |
| **(-)** | சொன்னவற்றை விளக்கமாக எழுதும்போது |

பத்தி பிரித்து எழுதுவது எப்படி என்பது பலருக்கும் சரியாகத் தெரியாது. சிலர் தொடக்கம், முதல் முடிவு வரை ஒரே பத்தியாக எழுதி விடுவர். சிலர் ஐந்தோ ஆறோ வாக்கியங்கள் முடிந்த உடன் அடுத்த பத்தியை ஆரம்பித்துவிடுவர். இவை இரண்டும் சரியல்ல. ஒவ்வொரு பத்தியிலும் ஒரு குறிப்பிட்ட கருத்து விளக்கம் பெறுவதாக இருக்க வேண்டும். இதற்காக மாணவர்களுக்குச் சில பயிற்சிகள் அளிக்க வேண்டும். எடுத்துக்காட்டாக வாகன விபத்துக்கான காரணங்களும் தீர்வுகளும் என்ற தலைப்பில் கட்டுரை எழுத வேண்டும் என்று இருக்கட்டும். காரணங்களின் ஒரு பட்டியலை மனதுக்குள் திட்டமிடுக. அல்லது முன்னுரையில் சேர்க்கலாம்.

**காரணங்கள்**

கவனக் குறைவு

சாலைவிதிகள் பின்பற்றாதிருத்தல்

கால்நடைப் பயணிகள்

மது அருந்தி வாகனங்கள் ஓட்டுதல்

சட்டங்கள் பின்பற்றாது வாகனங்கள் ஓட்டுதல்

சாலைகளின் பழுதுபட்ட நிலை

தீர்வுகள்

இவ்வாறு குறிப்பிட்டபின் ஒவ்வொரு கருத்தும் முடிவு பெறுகின்ற நிலையில் அடுத்த பத்தியை ஆரம்பிக்கலாம். இதனடிப்படையில் பயிற்சி அளித்தால் பத்தி பிரித்து எழுதுவதில் ஏற்படும் ஐயப்பாடுகளை நீக்கலாம்.

## மேம்படுத்துதல்

சுய படைப்புகளாக இருந்தாலும் மாணவர்களின் படைப்புகளாக இருந்தாலும் சுயம் மேம்படுத்துவதற்கான திறனுடன் பிறரது படைப்புகளை மேம்படுத்துவதற்கான திறனும் ஒவ்வொருவரும் பெற்றிருக்க வேண்டும். மேம்படுத்தல் பலநிலைகளில் அமையும்.

**எழுத்து நிலை:** குழந்தைகளுக்கு ஏற்படும் எழுத்துப்பிழையே முதன்மையானது. வகுப்பில் பொதுவாக உண்டாகும் எழுத்துப் பிழைகளைக் கண்டறிந்து அச்சொற்களுக்கான சரியான வடிவங்களைக் கரும்பலகையில் எழுதலாம். பிற மாணவர்களின் உதவியுடனும் பிழைதிருத்தம் செய்யலாம். ஒரே பிழையை பல மாணவர்கள் செய்கிறார்களென்றால் அவற்றிற்கான காரணத்தை முதலில்

கண்டடைய வேண்டும். உச்சரிப்புப் பயிற்சி இன்மை, பேச்சு வழக்கு, பொருள் தடுமாற்றம் இவை பிழைகளுக்குக் காரணமாகலாம்.

**சொல்நிலை:** பொருத்தமான சொற்களைப் பயன்படுத்தும் மொழியாற்றல் இன்மை, பொருள் வேறு பாடுடைய சொற்களை பயன்படுத்தாதிருத்தல், வகுப்பில் பொதுவாகக் கலந்துரையாடியும் மாண வர்களுடன் நேரடியாக உரையாடியும் இப்பிரச்சினைக்குத் தீர்வு காணலாம்.

**வாக்கிய நிலை:** வாக்கிய அமைப்பு தெரியாமல் எழுதுதல், வாக்கிய அமைப்பை மட்டுமல்ல அதன் தன்மையையும் மேம்படுத்த வேண்டும். வாக்கியத்தில் அமைந்துள்ள சொற்களின் இடத்தைமாற்றலாம். தேவையானால் புதிய சொற்களைச் சேர்த்துக் கொள்ளலாம். சில சொற்களை நீக்கலாம். இவ்வாறாக வாக்கியங்களை ஒழுங்குபடுத்துவதே வாக்கியங்களின் மேம்பாடு.

## கருத்துநிலை

சொல்ல நினைக்கும் கருத்துகளைக் குறைவான வாக்கியங்கள் வழியாக எடுத்துச் சொல்ல வேண் டும் என்பது நோக்கமாக இருக்க வேண்டும். இதற்காக கருத்துகளை மேம்படுத்தியாக வேண்டும். வாக்கியங்களை இடமாற்றம் செய்தல், சில வாக்கியங்களை நீக்குதல், தேவையானால் புதிய வாக்கியங்களையும் சொற்களையும் இணைத்தல் போன்றவற்றின் வாயிலாகக் கருத்துகளை உறு திப்படுத்தவும் தெளிவுபடுத்தவும் செய்யலாம்.

ஓர் ஆசிரியை செய்த செயல்பாட்டைப் பாருங்கள். வகுப்பில் கலந்துரையாடல் நடத்திய பின் தனித்தனியே கவிதை எழுதுவதற்கான வாய்ப்பைக் கொடுக்கிறார் ஆசிரியை. கடலுடன் தொடர்பு டைய கவிதை எழுத வேண்டும். ஒரு மாணவி இவ்வாறு எழுதினாள்.

நான் நேற்று கடற்கரைக்குச் சென்றேன்

இளம்காற்று இதமாக வீசியது.

ஆசிரியை இக் கவிதை வரிகளைக் கீழ்வருமாறு மேம்படுத்தினார்.

சென்றேன் நான் கடற்கரைக்கு நேற்று

இதமாக வீசியது இளங்காற்று

இங்கே செய்யப்பட்ட மாற்றங்கள் என்ன? மேம்படுத்தப்பட்ட கவிதை வரிகள் சிறப்பாக உள்ள னவா? இவ்வாறு அவரவர் மனநிலைக்கும் மொழித்திறனுக்கும் ஏற்ப மேம்படுத்தலாம்.

ஒரு ஆசிரியையாகிய நீங்கள் மேம்படுத்துவதற்குப் பின்பற்றும் வழிமுறைகள் எவை? குறிப்பு எழுதவும். வகுப்பில் பொதுவாக நண்பர்களின் படைப்புகளை இந்த கண்ணோட்டத்திற்கு ஏற்பமேம்படுத்தி எழுதிப் பாருங்கள்.

## பிரதிபலிப்பும் புரிதல்களும்

இந்த அலகினை வாசித்துப் பகுப்பாய்வு செய்ததன் அடிப்படையில் கீழே கூறப்பட்டுள்ள வினாக்களுக்குப் பதிலளிக்கவும்.

1. கருத்துப்பரிமாற்ற முறையைப் பின்பற்றியதன் முறையை விளக்கும்.
2. இரண்டாம் வகுப்பிற்குப் பொருத்தமான ஒரு தலைப்பினை எடுத்துரைத்து, அதன் வாயிலாக சுற்றுப்புறக்கல்வி, மொழி ஆகியவற்றில் எந்தெந்த கருத்துகளை மாணவர்களுக்கு அளிக்க இயலுமென விளக்கவும்.

3. மூன்று வயதான ஒரு குழந்தை கூறுகின்ற வாக்கியங்களில் இறந்த காலமும் நிகழ்காலமும் எதிர்காலமும் சரியாகவே உள்ளன. இது இலக்கணம் கற்றதனால் நிகழ்வதல்ல. இலக்கணம் கற்றலின் எந்தக் குறிப்பினை இதற்கு சான்றாக அளிக்கலாம்.

4. ஆசிரியரின் பதிவுகளைத் தயாரிக்க வேண்டுமெனக் கூறக் காரணம் என்ன?

5. தொடக்க நிலை வகுப்பில் உள்ள கேரளப் பாடநூலைப் பரிசோதித்து அவற்றில் உள்ள இலக்கணங்களை அறிமுகம் செய்வதற்கு எந்தெந்த செயல்பாடுகள் அளிக்கப்பட்டுள்ளன என்பதைப் பட்டியலிட்டு, இதை அலகு அந்தச் செயல்பாட்டை நடத்துவதற்கு உங்களுக்கு உதவியாக இருக்குமா என்பதை மதிப்பிட்டுக் கூறவும்.

## இந்த அலகிலிருந்து எனக்குக் கிடைத்த கருத்துகளும் புரிதல்களும்

## சுய மதிப்பீட்டுக் குறிப்பு

| எண் | குறிப்பு/கூற்றுகள் | முழுமையாக | பகுதியாக | மேலும் மேம்படுத்த வேண்டும் |
|---|---|---|---|---|
| 1. | ஒன்று, இரண்டு வகுப்புகளிலுள்ள தாய் மொழிக் கற்றலைக் குறித்தான கருத்துகள் எனக்குக் கிடைத்துள்ளன. | | | |
| 2. | ஒருங்கிணைந்த அணுகுமுறை என்னும் கருத்தின் முக்கியத்துவம் புரிந்தது. | | | |
| 3. | ஒருங்கிணைந்த முறையில் செயல்பாடுகளை உருவாக்கும் திறன் கிடைத்தது. | | | |
| 4. | இலக்கணம் கற்பித்தலில் பின்பற்றியுள்ள நவீன முறைகளைக் குறித்த அறிவு உண்டு. | | | |
| 5. | குழந்தை மொழியில் ஏற்படுத்தும் தவறுகளைக் குறித்தான அணுகுமுறையும் அவற்றைத் திருத்தம் செய்யும் முறையையும் புரிந்து கொள்ள முடிந்தது. | | | |
| 6. | படைப்பாக்கக் கட்டுரைகளின் திருத்தம், மேம்படுத்தல் ஆகியவையும் புரிந்து கொள்ள முடிந்தது. | | | |

மேலே அளித்துள்ள குறிப்புகளுக்கு ஏற்ப உங்களது கருத்துகளுக்கான தரம் அளிக்கவும். பெரும்பான்மையோரும் மேலும் தெளிவுபடுத்த வேண்டுமென்று கூறுவதாக இருந்தால் அந்தப் பகுதிகளை மீண்டும் கலந்துரையாடலுக்கு உட்படுத்தவும்.

## அலகு 2

# தொடக்கநிலை வகுப்புப் பள்ளி அனுபவ நிகழ்ச்சி

## முன்னுரை

மேலான தரமுடைய கல்வி கிடைப்பது என்பது ஒவ்வொரு குழந்தையினுடையவும் உரிமையாகும். ஒவ்வொரு குழந்தையினிடமும் உள்ளார்ந்த திறன்கள் உள்ளன. இந்த வாய்ப்புகளைக் கண்டு பிடித்து குழந்தைக்கு முன்னோக்கிச் செல்ல உதவுவதாக கல்வி அமைய வேண்டும். குழந்தையின் பன்முக வளர்ச்சியையே ஆசிரியர் நோக்கமாகக் கொள்ள வேண்டும்.

சிறந்த முறையில் கருத்துப் பரிமாற்றம் நடத்துவதற்கான திறனைப் பெறுவது என்பது மொழிக் கற்றலின் முக்கிய நோக்கமாகும். கருத்துப் பரிமாற்றத்திற்கு அசைவுகள், வண்ணம், படம், குறியீடுகள் ஆகியவற்றைப் பயன்படுத்தலாமென்றாலும் வாய்மொழியாகவும், எழுத்து வடிவத்திலும் மாணவர்களுக்கு இந்த திறனைப் பெறுவதே கற்பித்தலின் முக்கிய நோக்கம் என்பதை ஆசிரியர் புரிந்து கொள்ள வேண்டும். சரளமாகவும், ஒழுங்காகவும் பொருத்தமாகவும் கருத்துப் பரிமாற்றம் செய்வதையே சிறந்த முறையிலான கருத்துப் பரிமாற்றம் எனலாம். ஐயமும் பயமின்றி மொழியைப் பயன்படுத்தும் போதுதான் அது சரளமான பேச்சாக மாறுகிறது. இலக்கண வரம்புகளை உட்கொள்ள இயலும் போது மொழிக்கு ஒழுங்கமைவு ஏற்படும். சூழலுக்கு ஏற்ப மொழியைப் பயன்படுத்துவதையே மொழியின் பொருத்தமானப் பயன்பாடு எனலாம்.

எந்த ஒரு மொழியும் அறிவின் பழமையையே முக்கியப்படுத்துகிறது. குறிப்பிட்ட ஒரு மொழியைப் பயன்படுத்தி வருகின்ற மக்களின் சிறப்பான சிந்தனைகளும் சடங்குகளும் பழக்கவழக்கங்களும் நம்பிக்கைகளும் அந்தப் பழமையை உட்கொள்வதாக இருக்க வேண்டும். சமூகத்துடன் மொழியும் மொழியுடன் சமூகமும் வளருகிறது என்று கூறுவதன் பொருளானது பழமையுடன் இணைந்திருப்பதே ஆகும். இந்நிலையிலேயே நாம் காண்போமாயின் மொழி கற்பவர்கள் மொழியுடன் பண்பாட்டையும் கற்கிறார்கள். உயிரூட்டமுடையவையும் வளமுடையவையுமான மொழிகள் உயிரூட்டமான வளமான பண்பாட்டையும் உள்ளடக்கியவையாகும்.

மொழிக் கற்றலில் புறக்கணிக்க இயலாத ஒரு கூறே ரசித்தல் ஆகும். மாணவர்களின் அழகுணர்ச்சியையும் முருகியல் மதிப்புகளையும் வளப்படுத்துவதில் மொழிக்கு முக்கிய பங்குண்டு. இலக்கியப் படைப்புகளை முழுமையாகப் பொருளுணர்ந்து வாசிக்கும் வேளையில் தான் ரசிக்க இயலுகிறது. கதைகள், கவிதைகள், நாவல்கள், நாடகங்கள் ஆகியவற்றை வாசிப்பதன் வழியாகவே எவரொருவரது மொழியும் கற்பனை வளர்ச்சி, மொழி வளர்ச்சி ஆகியவற்றின் பல்வேறு தலங்களைப் பெற்று முன்னோக்கிச் செல்கிறது எனலாம். ஆதலால் மொழி ஆசிரியர்கள் தங்கள் மாணவர்களுக்கு படைப்புகளை ரசிப்பதற்கான வாய்ப்புகளை அளிப்பதற்குத் தவறக்கூடாது. இலக்கியக் கற்றலானது பண்பாட்டுப் பரிமாற்றத்திற்கும் கற்பனை வளர்ச்சிக்கும் தனிநபர் வளர்ச்சிக்கும் காரணமாகிறது. சிறந்த படைப்புகள் மனிதநேயப் பண்புகளை மாணவன் அறியாமலேயே வளரச்செய்யும். மொழிக் கற்பித்தலின் அணுகுமுறையும் கற்பித்தல் முறைகளும்,செய்முறைப் பயிற்சிகளும் இந்த அலகிலிருந்து கிடைக்கும்.

## அலகினைப் பார்வையிடும் போது

2.1 ஆசிரியர்களும் திறன்களும்

2.2 கற்பித்தல் தொழில் சார்ந்த கடமையாகும்

2.3 கற்பித்தல் கலை

2.4 கற்பித்தல் திறன்கள்

2.5 தமிழ்மொழி கற்பித்தல்

2.6 பள்ளி அனுபவ நிகழ்ச்சிகள்

2.7 கற்பித்தல் முறை குறித்த பகுப்பாய்வு

2.8 நுண்ணிலைப் பாடத் திட்டமிடலின் மாதிரி

2.9 மதிப்பீடு என்ன? எதற்கு? எவ்வாறு?

மதிப்பீட்டு முறைகள்

மதிப்பெண் வழங்கும் முறைகள்

படைப்புத் திறன்களின் மதிப்பீடு

2.10 பிரதிபலிப்புச் சிந்தனைக் குறிப்புகள்

2.11 பள்ளி அனுபவ நிகழ்வுக்கான ஆயத்தம்

பகுப்பாய்வு மதிப்பீடு

நிபுணர்களின் வகுப்புகள்

ஆசிரியர் பயிற்றாளர்களின் வகுப்புகள்

சக ஆசிரியரின் வகுப்பு

2.12 மொழி வகுப்புக்கான கற்றல் கருவிகள்

2.13 ஐசிடி வாய்ப்பினைப் பயன்படுத்துதல்

2.14 கொண்டாட்டங்களும் மொழியை உட்கொள்ளலும்

2.15 பள்ளி அனுபவ நிகழ்ச்சிகள் - ஆசிரியர்

2.16 பள்ளி அனுபவ நிகழ்ச்சியின் மதிப்பீடு

மேலே கூறப்பட்டுள்ளவைக் குறித்த அறிவினைப் பெறுவதற்கான செயல்பாடுகள் இந்த அலகில் உட்படுத்தப்பட்டுள்ளன.

## 2.1. ஆசிரிய நெறிமுறை

ஆசிரியர்கள் நாம் ஆதரவுடன் காண்கின்ற மரபு உடையவர்கள். பிற தொழில்களிலிருந்து வேறு பட்டு காணப்படும் ஆசிரியரின் இந்த நிலையானது அவர்களுக்குப் பெரிய பொறுப்பினை உரு வாக்குகின்றது. எனவே நெறிமுறைக்குட்பட்டு தனது தொழில் தொடர்பான பழக்க வழக்கங்களில் சில ஒழுங்குகளை அவர்கள் கடைபிடிக்க வேண்டும். மாணவர்களின் வளர்ச்சிக்குத் தேவைகள், மனித உரிமைகள் ஆகியவற்றைப் பின்பற்றுவதுடன் இதனைப் பொதுக் கண்ணோட்டத்தின் அடிப் படையிலேயே ஆலோசிக்கவும் வேண்டும்.

- உங்கள் பள்ளிப் பருவகாலத்தில் உங்களைக் கவர்ந்த ஆசிரியர்/ ஆசிரியை யார் அதற்கான காரணம் என்ன?
- ஆசிரியர் தொழில் பிற தொழில்களிலிருந்து வேறுபட்டதாகும். ஆசிரியருக்குச் சமூகத்தில்

மேலான இடம் அளிக்கப்பட்டுள்ளது. காரணம் என்ன?

- ஆசிரியர் மாணவர்களுக்கு மாதிரியாகத் திகழவேண்டியவர்கள் எவ்வாறு?
- தோக்கினைப் பிடித்த கையிலும்

  சாக்குக் கட்டி பிடித்த ஒரு கையுண்டு. இக் கவிதை வரிகள் தரும் செய்தி என்ன?

  இந்த வினாக்கள் குறித்த உங்கள் பதில்களை வகுப்பில் கலந்துரையாடவும். தொகுப்புகளைக் குறிப்பு வடிவில் எனது தமிழ் நாட்குறிப்பில் எழுதுங்கள்.

## 2. 2. கற்பித்தல் தொழில் ரீதியான தார்மீகப் பண்பு

எந்த ஒரு மனிதனின் வளர்ச்சிக்குக் காரணமாக இருப்பவர் அவருக்கு முதன்முதலாகக் கல்வி கற்பித்த ஒரு ஆசிரியரோ ஆசிரியையோ ஆவார். சமூக நன்மைக்காகச் செயல்படும் சிறந்த மனிதர்களை உருவாக்குவதே கல்வியின் நோக்கமாக இருக்க வேண்டும். எனவே தான் ஆசிரியர் சமூக உருவாக்கத்தின் வடிவமைப்பாளர்கள் (சமூகப் பொறியாளர்கள்) என அழைக்கப்படுகின்றனர். மேன்மையான இத்தொழிலை நிர்வகிக்கும் ஆசிரியர்கள் கடைபிடிக்க வேண்டிய சில கடமைகளும் சட்டங்களும் உள்ளன. இரண்டாம் பருவத்தில் பாட ஏற்பாடு என்னும் தாளில் (பாட ஏற்பாடும் ஜனநாயகக் கல்வியும்) இரண்டாவது அலகு பாட ஏற்பாடும் ஆசிரியரும் என்றல்லவா இருந்தது. அதனைப் பார்வை நூலாகப் பயன்படுத்தி குறிப்புகள் தயாரித்து கீழே கூறப்படும் கூற்றுகளை வகுப்பில் கலந்துரையாடுங்கள்.

ஜனநாயகக் கல்வியில் ஆசிரியரின் பங்கு

மாணவர்களுடனான பொறுப்பு

பெற்றோர் சமூகம் ஆகியோரிடமுள்ள பொறுப்பு

ஆசிரியரின் தொழில் சார்ந்த கடமைகள்

ஆசிரியர்களின் திறன்கள்.

கலந்துரையாடலில் உருவான கருத்துகள் எவை? ஜனநாயகக் கல்வியில் ஆசிரியரின் பங்கு என்ன? ஆசிரியருக்குப் பொதுமக்களுடன் உள்ள பொறுப்புகள் எவை? இவற்றைத் தொகுத்து குறிப்பேட்டில் சிறு குறிப்பாக எழுதவும். கீழே தரப்பட்டுள்ள கருத்துகள் நீங்கள் தொகுத்துள்ளவற்றுள் அடங்கியுள்ளனவா?

### ஆசிரியருக்கு மாணவர்களிடம் இருக்க வேண்டிய பொறுப்புகள்

- எல்லா மாணவர்களுடனும் அன்புடன் பழக வேண்டும்.
- ஜாதி, மதம், குலம், நிறம், பொருளாதார நிலை, மொழி, பாலினம், பிறப்பிடம் ஆகியவற்றைக் கருத்தில் கொள்ளாத நீதி பாகுபாடின்மை ஆகிய மதிப்புகளை மதிக்க வேண்டும்.
- பள்ளி வாழ்க்கையின் எல்லா நிலைகளிலும் மாணவர்களின் ஆளுமையை மதிக்க வேண்டும்.
- ஒவ்வொரு மாணவரின் உள்ளார்ந்த திறன்களையும் அறிவையும் செயல்படுத்துவதற்குத் திட்டமிட்டு ஒழுங்குபடுத்திய செயல்பாடுகளை வடிவமைக்க வேண்டும்.
- அரசியல் அமைப்பு எடுத்துரைக்கும் மதிப்புகள், மனநிலைகள், ஆகியவற்றை உட்கொள்ளும் வகையில் பாட ஏற்பாட்டைப் பரிமாற்றம் செய்ய வேண்டும்.
- மாணவர்களின் தேவைக்கு ஏற்ப கற்பித்தல் முறையைப் புனரமைக்க வேண்டும்.

- மாணவர்கள் அளிக்கும் தனிநபர் தகவல்களின் ரகசியத்தைப் பாதுகாப்பதுடன் அந்தந்த தகவல்களை அதிகாரபூர்வமாக ஒப்படைக்க வேண்டியவர்களிடம் மட்டுமே அளிக்க வேண்டும்.
- மாணவர்களை அச்சுறுத்துதல், கவலைக்குள்ளாக்குதல், உடல் தண்டனை வழங்குதல், உள, உணர்வு பூர்வமாக தண்டித்தல் ஆகியவற்றைத் தவிர்க்க வேண்டும்.
- எல்லாவிதச் சுரண்டல்களிலிருந்தும் மாணவர்களைப் பாதுகாக்க வேண்டும்.
- சக பெற்றோராக இருக்க வேண்டும்.

### ஆசிரியர்கள் பெற்றோரிடம் காட்ட வேண்டிய கடமைகள்

- தாய், தந்தையர், பெற்றோர் ஆகியோருடன் தாழ்மையுடன் பழகுவதை உறுதிசெய்யவும்.
- மக்கள் பிரிவினருக்கிடையேயுள்ள எதிர்வினைகள் பகை ஆகியவை வளரும் வகையிலான செயல்களைத் தவிர்க்க வேண்டும்.
- பள்ளியின் வளர்ச்சிச் செயல்பாடுகளில் சமூகத்தையும் ஈடுபடுத்த வேண்டும்.
- பெற்றோரின் திறன்களை மதிக்க வேண்டும். வட்டார வளங்கள், மனித வளங்கள் ஆகியவற்றைப் பாட ஏற்பாட்டுப் பரிமாற்றத்திற்குப் பயன்படுத்த வேண்டும். செயல்பாடுகளில் பங்களிக்க வேண்டும்.
- பள்ளி அனுபவ நிகழ்ச்சிக்கு முன்னரே இவற்றைக் கருத்தில் கொள்ள வேண்டும்.

## 2. 3 கற்பித்தல் கலை

பல்வேறு படைப்பாளர்களின் நூல்களிலிருந்து தொகுத்த சொற்கள், வாக்கியங்கள், கருத்துகள் ஆகியவற்றைக் குழந்தைகளின் மூளையில் அளவுக்கு அதிகமாக திணிப்பது அல்ல கல்வி. மாறாக மாணவர்கள் தெரிந்து கொள்ள வேண்டிய அறிவினை வெளியுலகுக்குக் கொணர்தலாகும். அவ்வாறு செய்வது ஒரு மரத்தின் குருத்திலிருந்து இலை, பூ, காய் தோன்றுவது போல அவர்களின் மனதிலிருந்து உயிருள்ள ஒரு நீரோட்டம் வெளியேற்றப்படும்

- கொமேனியஸ்

- கற்பித்தல் என்றால் என்ன? ஆசிரியர் யார்? மேலே தரப்பட்ட சான்றுகளின் அடிப்படையில் கருத்துகளைக் குறிக்கவும்.
- கற்பித்தல் கலையா? அறிவியலா? உங்கள் கருத்துகளைக் குறிப்பிடவும். அதன் காரணத்தையும் விளக்க வேண்டும்.

ஒவ்வொரு குழந்தையின் திறன்களும் கற்றல் முறைகளும் கற்றல் வேகமும் வேறுபட்டதாகும். அதனைப் புரிந்து பொருத்தமான கற்றல் உத்திகளைப் பயன்படுத்தி ஒவ்வொரு குழந்தைக்கும் தரமான கல்வியை அளிக்கும் வேலையை ஆசிரியர்/ ஆசிரியை செய்ய வேண்டும். மொழி ஆசிரியருக்குக் குழந்தையின் படைப்புத் திறன்களைப் புரிந்துகொள்ளவும் அவற்றை ஊக்குவித்துக் குழந்தைக்கு நம்பிக்கை அளிக்கவும் இயலவேண்டும். குழந்தைகளின் பல்வேறு நிகழ்த்துதல்கள், படைப்புகள் ஆகியவற்றை மதிப்பிட்டு அவர்களை முன்னோக்கி வழி நடத்துவதற்கு அறிவுடைய ஆசிரியருக்கு மட்டுமே இயலும்.

- எல்லாக் கலைகளுக்கும் அறிவியல்பூர்வமான ஒழுங்கமைப்பு உள்ளதா? உங்கள் கருத்துகளை பகிர்ந்துகொள்ளுங்கள்
- கலைகளுக்கு மனித நேயப் பண்புகளை வளரச் செய்வதில் பங்கு உள்ளதா? அது போன்றே

கற்பித்தல் கலைக்கும் இது பொருந்துமா?

- சர்வதேச அளவிலான தரமிக்க கல்வியை ஒவ்வொரு மாணவருக்கும் அளிக்க வேண்டும் என்னும் நோக்குடன் கேரளத்தில் நடைபெற்று வருகின்ற பொதுக்கல்விப் பாதுகாப்பு இயக்கம் என்ற திட்டத்தின் நோக்கங்களுள் மொழி தொடர்பான செயல்பாடுகளையும் வகுப்பில் கலந்துரையாடுங்கள்.

**கற்பித்தல் கலையும் அறிவியலும்**

தத்துவங்களிலும் கற்பித்தல் அணுகுமுறையிலும் நிகழ்கின்ற விரைவான மாற்றங்களுக்கு ஏற்ப நிரந்தரமான தேடல்களை நடத்தவும் பொருத்தமான கற்பித்தல் வளங்களைச் சுயமாக வளரச் செய்யவுமான ஆய்வு மனப்பான்மை தற்கால ஆசிரியர்களிடம் உருவாக வேண்டும். இவ்வாறு கூறுவதாக இருந்தால் கற்பித்தல் அறிவியலாகும். தேடல்கள், ஆய்வுகள் ஆகியவை வழியாக அறிவினைப் பெற்று சுயமாக நவீனப்படுத்துவது என்பது ஆசிரியரின் இன்றியமையாத தொழில் சார்ந்த திறனாகும்.

வெவ்வேறு நாட்டங்களில் ஆர்வமுடைய குழந்தைகளுடன் உணர்வுபூர்வமாக உரையாடுவது என்பது ஒரு படைப்புச் செயலாகும். கற்பனையான சூழல்களைக் கண்டுபிடித்துப் பயன்படுத்துவதற்கான படைப்புத் திறன் ஆசிரியர்களுக்குத் தேவையாகும். இசை, ஓவியம், நடிப்பு, உருவாக்கம் ஆகிய துறைகளில் மாணவர்களின் படைப்புத் திறன்களும் ரசிப்பதற்கான பழக்கங்களையும் அறிந்து தனது கற்பித்தல் செயல்களை ஆசிரியருக்கு ஆக்கபூர்வமாக அமைப்பதற்கு இயலவேண்டும்.

- டாலன்ட் லேப் என்ற செயல்நிகழ்வின் வாயிலாக நாம் எதிர்பார்க்கும் நோக்கம் என்ன?
- டி எல் எட் பாட ஏற்பாட்டின் கருத்தினை வாசித்தீர்களல்லவா? கற்பித்தல் கலையா அறிவியலா என்னும் பொருளில் விவாதம் நிகழ்த்துங்கள்.

## 2. 4 ஆசிரியர் திறன்கள்

இரண்டாம் பருவ பாடஏற்பாடு என்னும் தாளில் ஆசிரியத் திறன்கள் குறிப்பிடப்பட்டுள்ளதல்லவா? ஜனநாயக முறையிலான வகுப்பறையைச் செயல்படுத்துவதற்குத் தேவையான திறன்கள் அந்த அலகில் கலந்துரையாடப்பட்டிருந்தது. அறிவு, சமூகம், மேலாண்மை ஆகிய நிலைகளில் பல்வேறு திறன்களை ஆசிரியர்கள் அடைந்திருக்க வேண்டும் என்பதை இந்த அலகின் கருத்துகளைத் தொகுக்கும் வேளையில் புரிந்து கொள்ளலாம்.

? அறிவாற்றல் திறன்கள் எவை?

ஆசிரியர் சமூகத்தில் ஈடுபடுவதற்குத் தேவையான திறன்கள் எவை?

சிறந்த ஆசிரியராகத் திகழ்வதற்கு எந்தெந்த காரணிகள் அமைந்திருக்க வேண்டும்? உங்கள் கருத்துகளைக் குறிப்பிடுங்கள். மேலும் ஒரு முறை கூட இந்த அலகினை குழுவில் கலந்துரையாடி உங்கள் குறிப்புகளுடன் ஒப்பிட்டுப் பார்க்கவும்.

அறிவாக்க முறையிலான வகுப்பில்

- விளையாட்டுகள், நடிப்பு அரங்குகள், பிரச்சினைத் தீர்வுச் செயல்பாடுகள், படைப்புச் செயல்பாடுகள் ஆகிய வளங்களைப் பயன்படுத்த வேண்டும். எனவே இதுபோன்ற உத்திகள் அணுகுமுறையிலுள்ள கருத்துகள் அதனை நடைமுறைப்படுத்துவதற்கான திறன்கள் ஆகியவற்றை ஆசிரியர் வளரச் செய்ய வேண்டும்.

- மொழியில் வாசித்தல், எழுதுதல் ஆகியவற்றை மையப்படுத்திய படைப்புப் பணிமனைகளை நடைமுறைப்படுத்த வேண்டும்.
- ஒரு பாடத்தை/ நிகழ்வை மையப்படுத்தி பன்முகத் திறன்களைப் பெறுகின்ற முறையினை வகுப்பில் நடைமுறைப்படுத்த வேண்டும்.

இவை மட்டுமன்றி ஆசிரியருக்கு வேறு என்னென்ன திறன்கள் தேவை? டி எல் எட் பாட ஏற்பாட்டில் ஆசிரியத் திறன்களும் மனப்பாங்கும் என்னும் பகுதியில் கீழ்வரும் கருத்துகளைப் பகிர்ந்து கொள்ளலாம்.

### சுதந்திரமான ஆசிரிய நடத்தையின் வளர்ச்சி

- தற்போது பின்பற்றுகின்ற உளவியல், தத்துவக் கண்ணோட்டங்களின் அடிப்படையில் நவீன ஆய்வுச் செய்முறை அனுபவங்கள் வழியாகக் கடந்து சென்று சுதந்திரமான ஆசிரிய நடத்தையினை வளரச் செய்யலாம்.

### தொழில்களின் மேன்மைகளை வெளியிடுதலும் பரவச் செய்தலும்

- எல்லாக் குழந்தைகளுடையவும் ஒருங்கிணைந்த வளர்ச்சிக்கு முக்கியத்துவம் அளிக்கவும் திறன்களை வெளியிடவும் கற்றல் செயல் முறையில் வாய்ப்பளிக்க வேண்டும்.
- உதவி அமைப்புகளைக் குறித்த அறிவு இருக்க வேண்டும்.
- சுயமாகச் செயல்பாடுகளை மதிப்பிடவும் மேம்படுத்துவதற்குமான மனப்பான்மை இருக்க வேண்டும்.
- வாழ்க்கை முழுவதும் கற்பதும் தொழில் வளர்ச்சியை அடைவதும் சுய பொறுப்பாகும் என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும்.
- தேவைக்கேற்ப பார்வை நூல்களைத் தொகுப்பதற்கான திறனையும் மனப்பான்மையினையும் பெற்றிருக்க வேண்டும்.

### அறிவைப் பெறுதலும் செய்முறை மாதிரிகளின் உருவாக்கமும்

- பள்ளி அளவிலான எல்லாப் பாடங்களின் அறிவும், செயல்பாடுகளைத் திட்டமிடுவதற்கான திறனும் முக்கியமானதாகும். இத்துடன் பாட அணுகுமுறை கற்பித்தல் கோட்பாடுகள் கற்றல் கருவிகளை உருவாக்குவதற்கான அறிவு தகவல் தொழில் நுட்பத்திறன், சிறந்த முறையில் கருத்துப் பரிமாற்றம் செய்வதற்கான மொழித்திறன் ஆகியவற்றை அடைந்திருக்க வேண்டும்.

### கற்பித்தல் முறைக்கு ஏற்ற திறன்களும் மனப்பாங்குகளும்

- பாட ஏற்பாட்டின் பரிமாற்றத்திற்குப் பொருத்தமான கற்றல் கருவிகள், கற்றல் அனுபவங்கள் ஆகியவை குறித்த அறிவும் அவற்றைத் தயாரிப்பதற்கான திறன்களும்.
- பல்வேறு பாடங்களின் கற்பித்தல் முறைகளைக் குறித்த ஒருங்கிணைந்த அறிவு.
- பாடப்பகுதிகளைத் திட்டமிடுவதற்கும் நடைமுறைப்படுத்துவதற்கும் சிறந்த முறைகளை உருவாக்குவதற்குமான திறன்.
- குறிப்பிட்ட நேரத்திற்குள் செயல்பாடுகளைத் திட்டமிட்டு நடைமுறைப்படுத்தும் திறன்.
- மாணவர்களின் வெவ்வேறு தரங்களை மனதில் கொண்டு கற்றல் செயல்பாடுகளை உருவாக்கி நடைமுறைப்படுத்துகின்ற திறன்.

- கற்றல் நோக்கங்கள், கற்றல் அடைவுகள் ஆகியவற்றைக் குறித்துள்ள தெளிவான அறிவு.

### மதிப்பீட்டுத் திறன்கள்

- தொடர்ச்சியானதும் ஒருங்கிணைந்ததுமான மதிப்பீடு, அதனை நடைமுறைப்படுத்துவதற்கான வளங்களைக் குறித்த அறிவு, செயல்கள் படைப்புகள் இவற்றைப் பகுப்பாய்வு செய்து சிறந்த முறையில் குறிப்புகளைத் தயாரிக்கவும் கற்றல் இடைவெளிகளைக் கண்டுபிடித்துத் தீர்வு செய்வதற்குமான திறன்கள்.

– கல்வி உரிமைச் சட்டம்

பொதுவாக எல்லாப் பாடங்களுக்கும் பொருந்துகின்ற திறன்களையே இதுவரையிலும் கலந்துரையாடினோம். இது மட்டுமன்றி ஒவ்வொரு பாடத்திற்கும் அதற்கே உரிய செயல்பாடுகளை நடைமுறைப்படுத்துவதற்கு அந்தப் பாடம் தொடர்பான வேறு திறன்களும் இருக்கலாம். மொழி, ஆசிரியைக்குத் தேவையான திறன்கள் எவை?

## 2.5 தமிழ் மொழிக் கற்பித்தல்

மொழி கற்பித்தல் என்னும் இரண்டாம் பருவத்தில் உள்ள அலகில் மொழியின் அடிப்படைத் திறன்கள், அவற்றை மாணவன் அடைவதற்கான கற்றல் உத்திகள் ஆகியவற்றைக் கலந்துரையாடினோம். இப்போது நாம் பின்பற்றுவது கருத்து வெளியீட்டு முறையாகும். சமூகம், வீடு, பொது இடங்கள், என்றிவ்வாறு குழந்தைகள் ஈடுபடுகின்ற துறையிலிருந்தும் ஏராளம் அறிவினை உருவாக்கிய பின்னரே குழந்தைகள் தொடக்க நிலைப் பள்ளிக்கு வருகின்றனர். அவர்கள் பெற்ற அறிவின் தொடர்ச்சியாகவே பள்ளி அனுபவங்களும் அமைய வேண்டும் என்னும் கண்ணோட்டமே கருத்து உருவாக்க முறையின் அடிப்படை ஆகும். இவற்றுள் அறிமுகமான கருத்துகளை கதை, பாட்டு, விளக்கம் ஆகிய வடிவங்களை வகுப்பில் வெளியிட்டு அவற்றுள் அறிமுகமான வாக்கியங்கள், சொற்கள், அதிலுள்ள எழுத்துக்கள் என்னும் வரிசையில் எழுத்துக்களை உறுதி செய்ய வேண்டும். குழந்தை மொழியை உருவாக்குவதற்குமான வாய்ப்பினை மொழி வகுப்பில் உருவாக்க வேண்டும். பிழை ஏற்படுமோ என்ற அச்சத்தை இல்லாமல் செய்து நம்பிக்கையுடன் சரி என்பதற்கு நேராக வழிநடத்த வேண்டும். நாம் அன்றாட வாழ்வில் ஈடுபடும் ஒவ்வொரு செயல்பாடுகளிலும் கணிதம், மொழி, சூழ்நிலையியல் ஆகியவை இயல்பாகவே காணப்படும். நாம் கணிதம் செய்கிறோம் என்றோ மொழியைப் படிக்கின்றோம் என்றோ அறியாமலேயே இவை இரண்டையும் நாம் பயன்படுத்தி வருகிறோம். ஒரு பாடமும் தனியாக நிற்பதில்லை. எல்லா பாடங்களும் இயல்பாகவே இணைந்து வருகின்றன. இந்தக் கருத்தினையே ஒருங்கிணைந்த அணுகுமுறை எடுத்துரைக்கிறது. நம்பிக்கையுடன் குழந்தைகள் வகுப்பில் பழகும் வேளையில் கற்றல் ஆர்வம் பெருகுகிறது. வகுப்பில் வெவ்வேறு தரமு

> கருத்துப்பரிமாற்ற ஊடகம் என்பது மட்டுமின்றி மொழியானது மனித குலத்தின் ஆளுமை, உணர்வு, பண்பாடு ஆகியவற்றைப் பிரதிபலிக்கிறது. சமூக வாழ்க்கையில் ஆக்க பூர்வமாக ஈடுபடவும் உலகின் போக்கினைப் புரிந்துகொள்ளவும் மனிதனைத் திறன்படுத்துவது மொழியாகும். அறிவை அடையும் ஊடகமும் பரிமாற்றத்தின் ஊடகமும் வேறுவேறல்ல. மனிதகுலத்திற்கு மட்டுமே உள்ள விலை மதிக்க முடியாத செல்வமான மொழியைப் புரிந்து கொள்வதற்கு ஒவ்வொரு நபரும் பிறப்பு முதலே ஆரம்பிக்கின்றனர். வாழ்க்கைச் சூழலிலிருந்து பெற்றுக் கொள்ளும் கருத்துகளையும் பாவனைகளையும் வலிமையுடனும் சுய நம்பிக்கையுடனும் சூழலருக்கு ஏற்பப் பரிமாற்றம் செய்வதற்கு இயல வேண்டும். இயல்பானசூழல்களிலிருந்து பெற்றுக்கொள்ளும் மொழித்திறன்களைக் குறிப்பிட்ட இடத்தில் ஒழுங்குபடுத்துவது பள்ளிக்கூடங்களில் நடைபெறும் முறைசார்ந்த கல்வி வாயிலாகவே ஆகும். மொழிக்கற்றலை இதற்கு அனுகூலமான முறையில் ஒழுங்குபடுத்த வேண்டும்.
>
> –ஆசிரியர் கையேடு

டைய மாணவர்கள் இருப்பார்கள். எல்லோருக்கும் ஒரே செயல்பாட்டை செய்ய இயலாது. எனவே செயல்முறைகளில் தொடர்ந்து மாற்றம் தேவைப்படும். ஒவ்வொரு செயல்பாடும் நடைபெறும் போது குழந்தையின் பிரதிபலிப்பு எவ்வாறு உள்ளது? எழுத்து முறையின் நிலை எவ்வாறு அமைகிறது. குழந்தையின் நிகழ்த்துத் திறன்கள் எந்த அளவு உள்ளது? என்றிவ்வாறு தொடர்ந்து உற்றுநோக்க வேண்டும். இதனைப் பகுப்பாய்வுக்கு உட்படுத்தும் வேளையில் குழந்தையின் கற்றல் தடைகளை யும் கற்றல் இடைவெளியையும் புரிந்து கொள்ள இயலும். அதனைத் தீர்வு செய்வதற்கான செயல் பாடுகளையும் உட்படுத்தி அடுத்த நாள் வகுப்பிலேயே திட்டமிட வேண்டும். இவ்வாறு தொடர்ந்து நவீனப்படுத்தும் ஆசிரியரையே நாம் எதிர்பார்க்கிறோம்.

### மொழி வகுப்பு ஆசிரியை

• ஏராளம் வாசிப்பவராக இருக்க வேண்டும். • குழந்தைகளுடன் பழகுவதற்கு விருப்பமா னவரும் நல்ல மேடை பேச்சிற்கும் சொற்பொழிவாற்றவும் திறனுடையவராக இருக்க வேண் டும். • குழந்தைகளின் சந்தேகங்களை நீக்குபவராகவும் அவர்களை தேடலுக்கு வழிகாட் டும் திறனுடையவராகவும் இருக்க வேண்டும். • நடிப்பு, ஓவியம், கவிதை மொழிதல் போன் றவற்றில் திறன் உடையவராகவும் இருத்தல் வேண்டும். • குழந்தைகள் எழுதித் தயாரித்த வற்றை மேம்படுத்துவதற்கான வழிமுறைகளை அளிக்கவும் சுயமாகப் படைப்புகளைத் தயா ரிக்கவுமான திறன் படைத்திருக்க வேண்டும்.

**KCF 2007**

குழந்தையின் மொழி வளர்ச்சி அறிவாற்றல் வளர்ச்சியுடனும் சிந்தனைத் திறனுடனும் தொடர்பு கொண்டுள்ளது. ஊகித்தல், கற்பனையில் காணுதல், முன்னறிவித்தல், விளக்குதல், வருணனை செய் தல் போன்ற குழந்தையின் சிந்தனைத் திறனைச் சுறுசுறுப்புடனும் படைப்பாற்றலுடனும் பயன்படுத் துவதற்கு வாய்ப்புக் கிடைக்கின்ற செயல்பாடுகளில் ஈடுபடுவதற்குக் குழந்தைகளால் இயலவேண் டும். இதற்குத் தேவையான செயல்பாடுகளை ஆக்கபூர்வமாக வெளியிடும் சுதந்திரம் ஆசிரியைக்கு இருக்க வேண்டும்.

- பிறர் புரிந்து கொள்ளும் வகையில் தெளிவாகவும் நல்ல உச்சரிப்புடனும் பார்த்து வாசித்தல்.
- கேட்டுப் புரிந்து கொள்ளுதல்
- வாசித்துக் கருத்துக்களைப் புரிதல்
- இரசித்தல்
- கருத்து வெளியீட்டினைச் சிறப்பாகச் செய்வதற்காக எழுதும் முறைகளை அறிமுகம் செய்தல்
- படைப்புகளின் பொருளை (கருத்தினை) விளக்குதல்
- கருத்துகள், அனுபவங்களை வெவ்வேறு ஊடகங்களில் வெளியிடுதல்.
- படைப்புச் செயல்பாடுகளைச் செய்தல் ( நிர்வகித்தல்)
- சொற்களஞ்சியம் உருவாக்குதல்.
- சொற்கள் குறித்த அறிவு
- இலக்கிய வடிவங்கள், கலை வடிவங்களை மதிப்பிடுதல்.
- தகவல் தொழில் நுட்பமும் அது தொடர்பான வாய்ப்புகளைப் பயன்படுத்தித் தகவல்களைச் சேகரித்தல்.

குழந்தைகளுக்கு மேற்கூறிய பகுதிகள் தொடர்பான கற்றல் அடைவுகளை மொழிக் கற்றல் வாயி லாக உருவாக்க இயலவேண்டும்.

### மொழிக் கற்றல் தொடக்க நிலை வகுப்புகளில்

> *மொழியின் அழகு, நடை ஆகியவற்றைப் புரிந்து சுதந்திரமான வெளியீடுகளுக்கு வாய்ப்ப ளிக்க இயலுகின்ற வகையில் மொழிக் கற்றலுக்கான சூழலால் தொடக்க நிலை வகுப்புகள் அமைதல் வேண்டும். தினசரி நாளிதழ்கள் முதலாக பல்வகையிலான இலக்கிய நூல்கள் வரையிலும் கிடைக்கப்பெறுவதும் அச்சிடப்பட்ட நூல்களால் வளம் பெற்றுள்ள சூழல் பள் ளிகளில் இருக்க வேண்டும். எளிமையான மொழி வெளியீட்டு வடிவங்களும், கதைகள், கவி தைகள், கட்டுரைகள் முதலான இலக்கிய வடிவங்களையும் அறிந்து சுயபடைப்புகளை உரு வாக்கவும் வேண்டும். எழுத்துகள், குறியீடுகள், சொற்கள், வாக்கியங்கள், மரபுத் தொடர்கள் போன்றவற்றைத் தேவைக்கேற்ப ஒழுங்காகவும் (முறையாகவும்) நுட்பமாகவும் பயன்படுத் தும் திறன்களும் அறிவும் இப்பருவத்தில் வளரவேண்டும்.*
>
> **– ஆசிரியர் கையேடு**

- ஆசிரியர் கையேடு, பிற வாசிப்பு நூல்களைப் பரிசோதித்துப் பெரும்பான்மையான கற்றல் உத்திகளைப் பட்டியலிடுங்கள். அவற்றுள் மொழி வகுப்பில் பயன்படுத்த இயலுகின்ற வகுப் பில் சிமுலேட் செய்து பார்க்கவும் பொருத்தமான பாடங்களைத் தேர்ந்தெடுக்கலாம். (கற் றல் உத்திகளுக்கு  எ. டு. கல்விச்சுற்றுலா, கருத்தரங்கம், விவாதம், செயல்திட்டம், திரை அரங்கம், திரைப்படம்/ காணொளிப் பகுப்பாய்வு)
- வகுப்பு பரிமாற்றத்தின் சிறப்பான மாதிரிகளின் காணொளிகளைத் தொகுத்து வகுப்பில் காட்சிப்படுத்துதல், கற்றலை நடைமுறைப்படுத்துதல் (பிரச்சினையை வெளியிடுதல் ) தேடல் (தகவல் தொகுப்பு) பகுப்பாய்வு, கற்றல் படைப்புகளின் உருவாக்கம், பகிர்தல், மேம்படுத் தல் ஆகிய நிலைகளில் கற்றல் நடைபெறுவதன் பல்வேறு சூழல்களில் ஆசிரியையின் ஈடுபாட்டையும் உதவியையும் கலந்துரையாடவும்.
- தமிழ் வகுப்புக்கு எந்தெந்த கற்றல் கருவிகளைப் பயன்படுத்தலாம்? கலந்துரையாடவும்
- வகுப்பு நூலகத்திற்கு உதவுகின்ற சில வாசிப்பு அட்டைகளை உருவாக்கவும். மாதிரியாக தமிழ் ஒளி போன்ற நிகழ்ச்சிகளில் பயன்படுத்தியவற்றை அறிந்துகொள்ளவும்.

## 2.6 பள்ளி அனுபவ நிகழ்வு

மொழி கற்பித்தல் தொடர்பாக பள்ளியில் நடைபெறும் முக்கியச் செயல்பாடுகள் எவை? ஜூலை மாதத்தில் ஒரு பள்ளி தயாரித்த செயல்பாட்டு நாட்காட்டியின் ஒரு பகுதியைப் பரிசோதிக்கவும்.

| | |
|---|---|
| ஜூலை 1 திங்கள் | வகுப்பு 1 வீடு நல்ல வீடு செயல்பாடுகள்<br>வகுப்பு 2 எனது கேரளம் கற்றல் செயல்பாடுகள்<br>வகுப்பு 3<br>வகுப்பு 4 |
| ஜூலை 2 செவ்வாய் | வித்யாரங்கம் துவக்கவிழா |
| செப்டம்பர் 11 | பாரதிவிழா சுவரொட்டி உருவாக்கம். |

| | |
|---|---|
| செப்டம்பர் 11 | பாரதியார் மறைந்த நாளின் கொண்டாட்டம்<br>காலைக்கூட்டத்தில் நினைவுநாள்<br>பாடல்கள் அறிமுகம்<br>பாரதியின் குறும்படக் காட்சி<br>பாரதியார் நூல்களின் கண்காட்சி<br>SRT Meeting |
| செப்டம்பர் 12 | திறனாய்வக ஓவியப் பயிற்சிக் கூடம் |
| செப்டம்பர் 13 | PTA,SMC பொதுமக்கள் கூட்டம் |

- ஒரு பள்ளியில் நடைபெறும் எந்தெந்தச் செயல்பாடுகளைக் குறித்துள்ள குறிப்புகள் இவற்றிலிருந்து கிடைக்கிறது? இதனுடன் வேறு எந்தெந்தச் செயல்பாடுகளைச் சேர்க்க இயலும்?
- மொழி ஆசிரியை என்னும் நிலையில் எந்தெந்தச் செயல்பாடுகளுக்கு நீங்கள் தலைமை தாங்க வேண்டியதாக இருக்கும்?

மூன்றாம் பருவத்தில் 45 நாளையும் பள்ளி அனுபவ நிகழ்வினைத் திட்டமிட வேண்டும். இதனுள் பள்ளியுடன் தொடர்புடைய எல்லாச் செயல்பாடுகளிலும் ஆசிரிய மாணவர்கள் பங்காளியாக வேண்டும். மூன்று நான்கு வகுப்புகளில் 15 பிரிவேளை வகுப்பு நடத்த வேண்டும். ஒன்று, இரண்டு வகுப்புகளில் பத்து பிரிவேளை ஒருங்கிணைந்த வகுப்பு உட்பட 25 பிரிவேளை வகுப்பு நடத்த வேண்டும். அந்த வகுப்பின் அடிப்படையில் தர நிர்ணயம் செய்து வகுப்பு வாரியான பெற்றோர் கூட்டத்தில் அந்த வகுப்பிலுள்ள ஒவ்வொரு மாணவரின் கற்றல் தர அறிக்கையை எடுத்துரைத்து தொடர்ந்து அளிக்க வேண்டிய உதிவியைக் குறித்தும் கூறவேண்டும். இக்கால அளவில் நடைபெறும் முக்கியமான மொழிசார்ந்த நாளின் கொண்டாட்டத்தைக் குறித்து அறிந்து புதுமையான செயல்பாடுகளைக் குழந்தைகளுக்காகத் திட்டமிட்டு நடைமுறைப்படுத்த வேண்டும். இவற்றின் படைப்புச் சான்றாக இடைவேளைகளில் அவரவர் ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களில் கருத்தரங்கம்/ பணிமனை போன்றவற்றை நடத்தி கண்டுபிடிப்புகளைப் பகிர்ந்து கொள்ள வேண்டும். இந்த முறையிலேயே பள்ளி அனுபவ நிகழ்ச்சி முன்னோக்கிச் செல்கிறது.

— பாட ஏற்பாட்டின் கீழே கொடுக்கப்பட்டுள்ள பக்கங்களின் பள்ளி அனுபவ நிகழ்வின் விளக்கங்களை விளக்குகிறது.

## பள்ளி அனுபவ நிகழ்ச்சி

ஆசிரிய மாணவரின் நம்பிக்கையை வளரச் செய்யவும் பிறவியிலேயே உள்ள திறன்களை வடிவமைத்து எடுக்கும் மிக முக்கியமான செயல்பாடே பள்ளி அனுபவ நிகழ்ச்சியாகும். (Internship), பள்ளி, குழந்தைகள், பெற்றோர், சமூகம் இவற்றுடன் தொடர்புடைய ஒரு சமூகச் செயலே பள்ளிகளில் நடைபெறுகிறது. ஆசிரிய மாணவர் என்னும் நிலையில் அடைந்த கருத்துகள், கற்பித்தல் முறையிலான கண்ணோட்டங்கள் ஆகியவற்றைப் பயன்படுத்திப் பார்க்கவும் மதிப்பீடு செய்து சுயமாக மேம்படுத்தவும் இந்த வாய்ப்பு பயன்படுகின்றது. ஆசிரிய மாணவர், வழிகாட்டியும் நெறியாளருமான பள்ளியில் முதியவரான ஆசிரியர், தலைமை ஆசிரியர் ஆகியோரின் அறிவுரைகளுக்கு ஏற்ப இச் சூழலில் செயல்பட வேண்டும். பள்ளியிலுள்ள பிற ஆசிரியர்களைப் போன்றே அங்கு நடைபெறும் எல்லாச் செயல்பாடுகளிலும்

பங்கு பெறுவதற்கான வாய்ப்பு 100 நாட்கள் கொண்ட பள்ளி அனுபவ நிகழ்ச்சியின் வாயிலாகக் கிடைக்கிறது. ஆசிரியப் பயிற்சி நிறுவனங்களுக்கும் பள்ளி உள்ளிடைப் பயிற்சிகளுக்காகத் தேர்ந்தெடுக்கும் பள்ளிகளுக்கும் இடையே புரிதல்களும் கூட்டுறவும் தேவையாகும். இரு நிறுவனங்களுக்கும் ஒன்றிற்கொன்று பயனுள்ள நிகழ்ச்சியும்

உள்ளிடைப் பயிற்சியாகும். இதன் வழியாகப் புதுமையான கற்றல் அனுபவங்கள், செயல்பாட்டு நிகழ்வுகள் ஆகியவை பள்ளிகளுக்குக் கிடைக்க வேண்டும். பள்ளியில் நடைபெறுகின்ற நவீனச் செயல்பாடுகள் ஆசிரியப் பயிற்சி நிறுவனங்களுக்கு கிடைக்க வேண்டும்.

### உள்ளிடைப் பயிற்சிக்கான பிரிவேளை, மதிப்பெண் பங்கீட்டு முறை

| வரிசை எண் | பாடம் | பிரிவேளைகளின் எண்ணிக்கை | மதிப்பெண் |
|---|---|---|---|
| 1 | தமிழ் | 15 | 20 |
| 2 | ஆங்கிலம் | 15 | 20 |
| 3 | கணிதம் | 15 | 20 |
| 4 | சூழ்நிலையியல் | 15 | 20 |
| 5 | இன்டகிரேஷன் (வகுப்பு 1,2) | 10 | 20 |
| 6 | கலைக் கல்வி | 5 | 10 |
| 7 | செயல்வழிக் கல்வி | 5 | 10 |
| 8 | உடல் நலம் உடற்பயிற்சிக் கல்வி | 5 | 10 |
| | **மொத்தம்** | **85** | **130** |

**குறிப்பு:** இன்டகிரேஷன் (வகுப்பு 1,2) மதிப்பெண் ஒருங்கிணைப்பு படிவத்தில் தாள் 303 தமிழுக்கான மதிப்பெண்களுடன் கூட்டி மொத்தம் 40 ஆக மாற்றி அளிக்க வேண்டும்.

### 2.7 கற்பித்தல் முறையிலான பகுப்பாய்வும் நுண்ணியத் திட்டமிடலும் தமிழ்மொழியில்

பாடநூலிலுள்ள ஒவ்வொரு பாடப்பகுதியையும் கற்பித்தல் முறையின் பகுப்பாய்விற்கு உட்படுத்திய பின் பாடத்திட்டத்தைத் தயாரிக்க வேண்டும். பாடப்பகுதியிலுள்ள உள்ளடக்கம், மையக் கருத்து திறன்கள் ஆகியவற்றைப் புரிந்துகொள்ளவும் அவற்றிலுள்ள மொழிக்கூறுகளின் சிறப்புத்தன்மைகளை உட்கொள்ளவும் கற்பித்தல் முறையிலான பகுப்பாய்வு துணைபுரியும். இவ்வாறு பாடப்பகுதியைக் குறித்து ஒருங்கிணைந்த அறிவினைப் பெற்ற பின் மட்டுமே பாடத்திட்டமிடலை சிறந்த முறையிலும் நுட்பமாகவும் தயாரிக்க இயலும். குழந்தை சுயமாக அறிவை உருவாக்கி முன்னேறுகின்ற ஒரு வகுப்பிற்கான திட்டமிடலையே நாம் தயாரிக்கின்றோம். செயல்முறைக்குட்பட்டவையும், தொடர் மதிப்பீட்டின் வாய்ப்புகளைப் பயன்படுத்துகின்ற எல்லா மாணவர்களின் பங்களிப்பையும் உறுதிசெய்கின்ற முறையில் ஒவ்வொரு செயல்முறையையும் தயாரிக்க வேண்டும். எதிர்கால ஆசிரியை/ ஆசிரியரைப் பொறுத்தவரையில் பாடத்திட்டமிடலைப் போன்று முக்கியமான மற்றொரு திறன் இப்பயிற்சிக் கால அளவில் பெறுவதற்கில்லை.

நுண்ணிலைச் செயல்முறையை உட்கொள்ளும் பாடத்திட்டமிடலைத் தயாரிப்பதில் அறிவும் புரிதல்களும் மனப்பாங்கும் திறன்களும் இக்கால அளவிலேயே பெற்றுக்கொள்வதற்கான அனுபவம்

வாய்ப்பு ஆகியவற்றை உருவாக்கிக் கொடுக்க வேண்டும். எதிர்கால கேரளத்தை உருவாக்குவதற்கு இது துணைசெய்யும்.

## கற்பித்தல் முறைக்கான பகுப்பாய்வு (படிவம்)

**பகுதி. அ. அடிப்படையான தகவல்கள்**

- **ஆசிரிய மாணவரின் பெயர் :**
- **நிறுவனம் :**
- **வகுப்பு :**
- **பாடம் :**
- **அலகு, பாடம் :**

**பகுதி. ஆ. பாடப்பகுப்பாய்வு**

1. அலகு/ அலகின் பெயர்

2. கற்றல் அடைவுகள்

3 உள்ளடக்கப் பகுப்பாய்வு

3.1 கருத்துகள் ( உள்ளடக்கம், மொழி சார்ந்தவை) புரிதல்கள்.

3.2 கற்றல் திறன்கள், வாழ்க்கைத் திறன்கள்

3.3 மனப்பாங்குகள்

3.4 மதிப்புகள்

3.5 மொழி வெளியீட்டு வடிவங்கள்

4. எதிர்பார்க்கும் நேரம் (மொத்தச் செயல்பாடுகளைப் பரிமாற்றம் செய்வதற்கான நேரம்)

## பகுதி. ஸி. செயல்பாட்டுப் பகுப்பாய்வு

1 அலகு/ பாடத்தின் பெயர் :

| வரிசை எண் | கற்றல் செயல்பாடுகளும் கற்றல் செயல்முறையும் | கற்றல் அடைவு | கற்றல் உத்திகள் | கற்றல் அடைவு | கற்றல் கருவிகள் | படைப்புகள் மதிப்பீடு |
|---|---|---|---|---|---|---|
| | | | | | | |

## கற்பித்தல் முறை பற்றிய பகுப்பாய்வு - தமிழ் (எல்.பி) மாதிரி

**பகுதி. A. அடிப்படைத் தகவல்கள்**

**ஆசிரிய மாணவரின் பெயர்:** **நிறுவனம் :**

**வகுப்பு : 4, பாடம் : தமிழ் அலகு :**

**முன்னுரை:** மண்ணில் பொழியும் மாமழையே என்னும் கவிதையில் மழைக்காலத்தை நோக்கி நம்மை அழைத்துச் செல்கிறார் ஆசிரியர்.

### கற்றல் அடைவு

1. புதிய சொற்கள், வாக்கியங்கள், பழமொழிகள், மரபுத்தொடர்கள் ஆகியவற்றைப் பொருத்த மான சூழல்களில் பயன்படுத்துகிறார்கள்.
2. கவிதையைத் தாளத்தோடும் இசையோடும் கூறுகிறார்கள்.
3. பிழையின்றி ரசனைக் குறிப்பு எழுதுகிறார்கள்.
4. ஒப்புமையுடைய கவிதைகளைத் தொகுக்கிறார்கள், மொழிகிறார்கள்.
5. பாடப்பகுதியிலுள்ள கருத்துகளை சித்தரிக்கிறார்கள்

### கருத்துகள்

1. உயிரினங்களுடன் இரக்கமுடன் பழகுவதன் வழியாக நாம் வாழும் உலகினை எழிலுடைய தாக்க இயலும்.
2. அன்பின் மகத்துவத்தை விளக்குகின்ற பல்வேறு இலக்கியப் படைப்புகள் உள்ளன.
3. அன்பின் வெளிப்பாட்டினால் நமது சுற்றுப்புறத்தையே மாற்றி அமைக்க இயலும்.
4. கவிதையில் பயன்படுத்தும் சிறந்த வாக்கிய அமைப்புகளின் அழகு கவிதையினை சிறப்பிக்கும்.

### திறன்கள்

1. கவிதைகளைத் தாளத்துடன் மொழியும் திறன்
2. கவிதையின் கருத்துகள், அழகு ஆகியவற்றை உட்கொண்டு ரசிக்கும் திறன்.

### திறன்கள்

1. கவிதைகளுக்குப் பொருத்தமான ஓசையைக் கண்டுபிடிப்பதற்கான திறன்.

### மதிப்புகள் மனப்பாங்குகள்

1. உயிரினங்களுடன் கருணை காட்டுதல். துன்பப்படுகின்றவர்களிடம் ஆதரவு காட்டுதல். உத விபுரிவதற்கான மனப்பாங்கு

**மொழி வெளியீட்டு வடிவங்கள்:** கவிதை, ஒப்பீடு, அனுபவக் குறிப்பு, ரசனைக் குறிப்பு

**எதிர்பார்க்கும் கால அளவு:** 15 பிரிவேளை

**தொடர் வாசிப்பிற்கு:**

**படைப்பாக்க நேரம்:** கவிதை மொழிதல், ரசனைக் குறிப்பு வாசித்தல், வெளியீடு, மழைகுறித்த இதழ் வெளியீடு

**ஸி.பி.டி.எ :** கவிதை மொழிதல், ரசனைக் குறிப்பு மழையனுபவம், வெளியீடு

| வரிசை எண் | கற்றல் செயல்பாடுகளும் செயல்முறையும் | கற்றல் அடைவு | கற்றல் உத்தி | கற்றல் கருவிகள் | படைப்புகள் | மதிப்பீடு |
|---|---|---|---|---|---|---|
| 1 | **கவிதையை நோக்கி:** குழந்தைகள் கவிதையைச் சுயமாக வாசிக்கத் தூண்டும் செயல்பாடு. முதன் முதலில் பள்ளிக்குச் சென்ற அனுபவம் கலந்துரையாடல். மழைக் காலத்தில் பள்ளிக்குச் செல்லும் குழந்தைகளின் காணொளிப் பகுதி- கவிதையின் பகுதி - கலந்துரையாடல் - கவிஞரின் நினைவுகளை தனித்தனியே கூறுதல் ஊகம் சரியானதா என்பதை அறிந்து கொள்வதற்கான அறிவுரை வழங்கல். | | காணொளிக் காட்சி - கலந்துரையாடல் அனுபவப் பகுப்பாய்வு கலந்துரையாடல் | காணொளி கவிதை எழுதிய அட்டைத் தாள் | கற்றல் ஆர்வம் | எல்லோருக்கும் கவிதைய வாசிப்பதற்கான ஆர்வம் எழுந்ததா என்னும் மதிப்பீடு |
| 2 | **கவிதை வாசித்தல்:** தனித் தனியாகக் கவிதையை வாசிக்கிறார்கள். கவிதையின் கருத்துகளைப் புரிந்து கொள்கிறார்கள். எல்லோருக்கும் அவ்வாறு செய்ய இயலாத தன் காரணத்தைக் கண்டுபிடிக்கிறார்கள். மீண்டும் வாசித்தல், அறிந்தவை அறியா தவற்றையும் கண்டுபிடித்து தெளிவுபடுத்துகிறார்கள். ஒருவருக்கொருவர் வெளியிட்டு மதிப்பிடுகிறார்கள். மீண்டும் வாசித்தல், மீண்டும் தெளிவுபடுத்துதல். | புதிய சொற்கள், வாக்கியங்கள் சொற்றொடர்களைப் பொருத்தமான இடங்களில் பயன்படுத்துகிறார்கள். | தனிநபர் செயல்பாடு ஒருவருக்கொருவர் மதிப்பிடுதல் | பாடநூல் | கருத்துகளைப் புரிந்து கொள்ளுதல். | கருத்துகளைப் புரிந்து கொள்வதன் அடிப்படையிலான மதிப்பீடு |
| 3 | **கண்டுபிடிக்கலாம்:** கருத்துகளைப் புரிந்து கொள்ளும் வினாக்களுக்கான விடைகளைச் சுயமாகக் கண்டுபிடித்தல் | புதிய சொற்கள் வாக்கியங்கள் தொடர்களை ஏற்றசூழலில் பயன்படுத்துகிறார்கள். | தனிநபர் செயல்பாடு குழுச் செயல்பாடு ஒருவருக்கொருவர் மதிப்பிடுதல் | வினாக்கள் எழுதிய அட்டைத் தாள் | நோட்டுப் புத்தகத்தில் எழுதித் தயாரித்த விடைகள் | எல்லோருக்கும் கருத்துகளைப் புரிந்து எழுதுவதற்கு இயலுகிறதா என்று மதிப்பிடுதல் |

| வரிசை எண் | கற்றல் செயல்பாடுகளும் செயல்முறையும் | கற்றல் அடைவு | கற்றல் உத்தி | கற்றல் கருவிகள் | படைப்புகள் | மதிப்பீடு |
|---|---|---|---|---|---|---|
| 4 | **கண்டுபிடிப்போம் எழுதுவோம் பகுப்பாய்வு:** வினாக்கள் வாசித்து விடைகளைத் தெளிவாகக் கண்டுபிடித்து மூன்றாவது குழுவில் வெளியீடு- கலந்துரையாடல் - பொதுவாக சமர்ப்பித்தல் - ஆசிரியர் பிரதியை மேம்படுத்துதல். | | தனிநபர் முயற்சி குழுச் செயல்பாடு பொதுவாக சமர்பித்தல் . | பகுப்பாய்வு வினா அட்டைத் தாள் பாடப்புத்தகம் | நோட்டுப் புத்தகத்தில் எழுதிய விடைகள் | பகுப்பாய்வு வினாக்களுக்கு எல்லோரும் விடை எழுதியுள்ளார்கள். |
| 5 | **கவிதை மொழிதல்** : கவிதைக்கு தனித் தனியே தாளம் அமைத்தல், மூன்றுபேர் சமர்ப்பித்தல் மேம்படுத்துவதற்கான காரணத்தைக் கண்டுபிடித்தல். மொழிதல் குறிப்புகளின் அடிப்படையில் மதிப்பிடுதல்- சிறந்தவற்றைக் கண்டுபிடித்தல்- பொதுவாக வெளியிடுதல் ஆசிரியரின்/ ஐசிடி வெளியீடு இருவர் சேர்ந்து பாடுதல் | கவிதையை ஓசை நயத்துடனும் தாளத்துடனும் மொழிதல் | தனியாக தாளம் அமைத்தல். மேலும் கலந்துரையாடல் வாயிலாக மதிப்பீட்டுக் குறிப்புகளை எழுதுதல் குழுவில் வெளியிடுதல் | பாடப்புத்தகம் குறிப்புகள் அட்டைத்தாள் | மொழிதல் திறன் | மொழிதல் திறனை மதிப்பிடுதல். |
| 6 | **கவிதையின் அழகினைக் கண்டுபிடித்தல்:** தனிநபர் - பொதுவாக வெளியிடுதல், கலந்துரையாடல், பயிற்சித்தாள் தனியாக எழுதுதல் குழுவில் சமர்பித்தல், கலந்துரையாடல்- மேம்படுத்தல் -பொதுவாக வெளியிடுதல் ஆசிரியையின் ஈடுபாடு தொகுத்தல். | புதிய சொற்கள் வாக்கியங்கள், பழமொழிகள், தொடர்கள் ஆகியவற்றை பொருத்தமான சூழல்களில் பயன்படுத்துகிறார்கள். | தனிநபர் முயற்சி குழுவாக முயற்சி செய்தல் பயிற்சித் தாள் | பயிற்சித்தாள். — — | நிறைவு செய்த பயிற்சித்தாள் | சிறந்த முறையில் வாக்கியங்களின் அழகினைக் கண்டுபிடித்து எழுத முடிந்ததா? குழந்தைகள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள். |

| வரிசை எண் | கற்றல் செயல்பாடுகளும் செயல்முறையும் | கற்றல் அடைவு | கற்றல் உத்தி | கற்றல் கருவிகள் | படைப்புகள் | மதிப்பீடு |
|---|---|---|---|---|---|---|
| 7 | **வினாப் போர்:** கவிதையுடன் தொடர்புடைய ஏராளம் வினாக்களைத் தயாரித்தல் தனிநபர் மூன்று நபர் அடங்கிய குழுவில் வாசித்துத் தொகுத்தல் குழுக்களுக்கு இடையே வினாக்கள் கேட்டல் வெற்றி பெற்றவர்களைப் பாராட்டுதல். | | தனிநபர் முயற்சி வினாப்போர் | பாடப்புத்தக வினாக்கள் | கருத்துகளைப் புரிந்து விடை அளித்தல் | கவிதையிலுள்ள கருத்துகள் எல்லோருக்கும் புரிந்ததா? |
| 8 | **கண்டவையும் கேட்டவையும்** : கவிதையில் கவிதைக்கான புலன் அனுபவங்களை தனித்தனியாகக் குறிப்பு எடுத்தல். பயிற்சித்தாள் நிறைவு செய்தல்- குழு வெளியீடு- கலந்துரையாடல் | தவறின்றி ரசனைக் குறிப்பு தயாரித்தல் | பயிற்சித்தாள் தனிநபர் முயற்சி பொதுக் கலந்துரையாடல் டீச்சர் வேர்ஷன் | பயிற்சித்தாள் டீச்சர் வேர்ஷன் | ரசனை புலன் அனுபவங்களைப் புரிந்து கொள்ளுதல் | புலன் அனுபவங்களைக் கண்டறிய இயலுமா. |
| 9 | **மறக்க இயலாத மழைக்காலம்:** மழையனுபவம் தனிநபர் படைப்பு- கருத்துப் படம் தயாரித்தல் அனுபவம் மேம்படுத்தி தனிநபர் படைப்பு. குழுவில் வாசித்தல் மேம்படுத்தல், டீச்சர் வேர்ஷன்- மேம்படுத்தல்- மழைகுறித்த இதழ் தயாரித்தல் . | தவறின்றி ரசனைக் குறிப்பு தயாரிக்கிறார்கள் | தனிநபர் படைப்பு கருத்துப் படம் குழுவாக முயற்சி செய்தல் டீச்சர் வேர்ஷன் ( ஆசிரியர் பதிவு செய்தவை) மேம்படுத்தல் | மழை அனுபவம் | மழை குறித்த இதழ் | எல்லோருடைய மழை அனுபவம் சிறந்ததாக இருந்ததா? |

| வரிசை எண் | கற்றல் செயல்பாடுகளும் செயல்முறையும் | கற்றல் அடைவு | கற்றல் உத்தி | கற்றல் கருவிகள் | படைப்புகள் | மதிப்பீடு |
|---|---|---|---|---|---|---|
| 10 | **ஓவியம் வரைவோம்**: கவிதையிலுள்ள காட்சிகளை அட்டவணையிடுகிறார்கள். எல்லோரும் அவர்களுக்கு விருப்பமான படங்களை வரைகிறார்கள். வரைந்த படங்களை வண்ணம் தீட்டவேண்டும். குழுவாக வெளியிடுகிறார்கள். ஒருவருக் கொருவர் மதிப்பிடுகிறார்கள். பொதுவா கக் காட்சிபடுத்துதல் சிறந்த படைப்புக ளைக் கண்டுபிடித்துப் பாராட்டுகிறார்கள். | பாடப்பகுதியின் கருத்துகளை ஓவியமாக்குதல் | படம் வரைதல் | வண்ணங்கள் வண்ணப் பென்சில்கள் தாள் | படங்கள் | எல்லோரும் படம் வரைந்தார்களா |
| 11 | **ஒப்பீடு**: குடையில்லாதவர் என்னும் கவி தையினை மற்றொரு கவிதையுடன் ஒப் பீடு செய்தல்- குறிப்புகளை வைத்து குழு வில் பகுப்பாய்வு செய்தல் பொதுவாகக் காட்சிப்படுத்துதல்- ஆசிரியர் பதிவு- வெளியீடு- கலந்துரையாடல் – மேம்படுத் தல் | ரசனைக் குறிப்பு தயாரிக்கிறார்கள் | கவிதைகளின் ஒப் பீடு | கவிதை எழு திய அட்டைத் தாள் | ஒப்பீட்டுக் குறிப்பு | ஒப்பீட்டுக் குறிப் பினை மதிப்பிடுகி றார்கள். |
| 12 | **தொகுப்பு**: சகோதர பாசத்தின் கதை கூறும் கவிதைகளை ஒவ்வொருவரும் தனித்தனியாக சேகரிக்கிறார்கள். காட்சிப் படுத்தல். கவிதை மொழிதல் சிறந்த வற்றை ஒருவருக்கொருவர் மதிப்பிடுதல். சிறந்த கவிதைகளைக் கற்பிக்கிறார்கள். | ஒப்புமையுடைய கவிதைகளை சேகரித்து மொழி கிறார்கள். | கவிதைகளைத் தொகுத்தலும் மொழிதலும் | கவிதைக ளைத் தொகுத் தல் | கவிதை மொழி தலில் உள்ள சிறப்பு கவிதை டீலர் | மொழிதலின் சிறப் பினையும் கவிதை மலரையும் மதிப் பீடு செய்தல். |

| வரிசை எண் | கற்றல் செயல்பாடுகளும் செயல்முறையும் | கற்றல் அடைவு | கற்றல் உத்தி | கற்றல் கருவிகள் | படைப்புகள் | மதிப்பீடு |
|---|---|---|---|---|---|---|
| 13 | **ரசனைக் குறிப்பு** : ரசனைக் குறிப்பினை ஒவ்வொருவரும் தனித்தனியாக எழுதுதல். குழுவில் வெளியிடுதல். குறிப்புகளை விரிவாக எழுதி மதிப்பிடுதல் சிறந்தவைகளை பொதுவாக வாசித்தல். கலந்துரையாடல் ஆசிரியர் பதிப்பினை வாசித்தல் - கலந்துரையாடல்- நிறை குறைகளைக் கண்டுபிடிக்கிறார்கள். குறைகளைத் தீர்வு செய்கிறார்கள். | பிழையின்றி ரசனைக் குறிப்பு தயாரிக்கிறார்கள். | ஒவ்வொருவரின் படைப்புகளைக் குழு கலந்துரையாடல் வழியாக மேம்படுத்துதல் ஆசிரியர் பதிப்பு வாசித்தல். | குறிப்புகள் ஆசிரியர் பதிப்பு | ரசனைக் குறிப்பு | சிறந்த குறிப்புகள். |
| 14 | **மேம்படுத்தல்** : ஒரு குழுவின் ரசனைக் குறிப்பின் பல்வேறு தலங்களை ( கருத்து, வாக்கிய அமைப்பு, சொல், எழுத்து, வெளியீட்டு வடிவம்) மேம்படுத்துகிறார்கள். ஒவ்வொருவரும் தனித்தனியே மேம்படுத்துகிறார்கள். | பிழையின்றி ரசனைக் குறிப்பு எழுதுகிறார்கள். | மேம்படுத்துதல் | வினாக்கள் எழுதிய அட்டைத் தாள் | சிறந்த ரசனைக் குறிப்பு | மதிப்பீட்டுக் குறிப்புகளுக்கு ஏற்ப மதிப்பிடப் பட்டுள்ளது. |

## 2.8 நுண்ணிலைப் பாடத்திட்டமிடல் படிவம்

**பார்ட் ஏ : அடிப்படைத் தகவல்கள்**

- ஆசிரிய மாணவரின் பெயர் :
- பள்ளிக்கூடம் :
- வகுப்பு, பிரிவு :
- பாடம் :
- அலகு, பாடத்தின் பெயர் :

**பார்ட். பி**

- கற்றல் அடைவுகள்:
- கருத்துகள் :
- வாழ்க்கைத் திறன்கள் :
- மதிப்புகள் :
- மனப்பாங்குகள் :
- மொழி வெளியீட்டு வடிவங்கள் :
- கற்றல் கருவிகள் :
- மொத்தநேரம் :
- படைப்பாக்க வேளையில் வெளியிடுபவை :
- அறிவிப்பு பலகையில் வெளியிடுதல் :

**பார்ட். சி**

- கற்றல் செயல்பாடுளின் நுண்ணிலைத் திட்டமிடல் (செயல்பாட்டின் பெயர், நேரம், வகுப்பில் பரி மாற்றம் செய்யும் செயல் முறை, கற்றல் கருவிகளின் வெளியீட்டு நிலை, மதிப்பீடு பிரதிபலிப்பு பக்கத்தில் உட்படுத்த வேண்டியவை ஆசிரியர் பதிப்பு ஆகியவற்றை உட்படுத்த வேண்டும்.
- பாடப்பகுதியுடன் தொடர்புடைய கற்றல் கருவிகள் (பயிற்சித்தாள், வாசிப்புக் கருவி, ஐசிடி பிற கருவிகள்) தயாரித்துப் பிற்சேர்க்கையில் வெளியிட வேண்டும்)

| கற்றல் செயல்பாடுகள் | மதிப்பீடு |
|---|---|
| | |

## நுண்ணிலைப் பாடத்திட்ட மாதிரி

### பார்ட். எ அடிப்படைத் தகவல்கள்

கற்பிக்கும் ஆசிரியரின் பெயர் : வகுப்பு : நான்கு :

பள்ளியின் பெயர் : பாடம் :

அலகு : பாடம்:

நாள் : 11 07 2019

அலகு/பாடம் :

### பார்ட் பி

### கற்றல் அடைவு

1. புதிய சொற்கள், வாக்கியங்கள், பழமொழிகள், தொடர்கள் ஆகியவற்றைப் பொருத்தமான சூழலில் பன்படுத்துகிறார்கள்.
2. கவிதையை ஓசை நயத்தோடும் தாளத்துடனும் மொழிகிறார்கள்.
3. பிழையின்றி ரசனைக் குறிப்பு தயாரிக்கிறார்கள்.
4. ஒப்புமையுடைய கவிதைகளைத் தொகுக்கிறார்கள்.
5. பாடப்பகுதியிலுள்ள கருத்துகளை ஓவியமாக்குகிறார்கள்.
6. ஏழைகளுக்கும் துன்பமுடையவர்களுக்கும் உதவி புரிய வேண்டும் என்ற மனப்பாங்கினை வளரச் செய்கிறது.

### கருத்துகள்

1. உயிரினங்களுடன் கருணையுடன் பழகுவதன் வாயிலாக நாம் வாழும் உலகினை எழில் மிக்கதாக மாற்ற இயலும்.
2. அன்பின் வெளிப்பாட்டிற்கு நமது சுற்றுப்புறத்தையே மாற்றும் திறன் உண்டு.
3. அன்பின் மகத்துவத்தை வெளிப்படுத்தும் பல்வேறு இலக்கியப் படைப்புகள் உள்ளன.
4. கவிதையில் பயன்படுத்தும் தொடர்களின் அழகைப் பொறுத்துக் கவிதை சிறப்பாக அமையும்.

### திறன்கள்

1. கவிதைகளை ஓசை நயத்துடன் மொழியும் திறன்.
2. கவிதையின் கருத்து அழகு ஆகியவற்றை ரசிக்கும் திறன்

### வாழ்க்கைத் திறன்கள்

1. கவிதைகளுக்குப் பொருத்தமான தாளத்தைக் கண்டுபிடிக்கும் திறன்.

### மதிப்புகள் :

உயிரினங்களிடத்தில் கருணை, துன்பம் அனுபவிப்பவர்களிடம் ஆதரவு, உதவுவதற்கான மனப்பாங்கு.

### மொழி வெளியீட்டு வடிவங்கள்

கவிதை ஒப்பீட்டுக் குறிப்பு, அனுபவக் குறிப்பு, ரசனைக் குறிப்பு

**கற்றல் கருவிகள்:**

காணொளி, மழை அனுபவம், வினாக்கள் எழுதிய அட்டைத்தாள், ஆசிரியர் பதிவுகள், மழை அனுபவம் ரசனைக் குறிப்பு. பயிற்சித்தாள்கள், வாசிப்பு நூல்கள், பாடம், மதிப்பீட்டுக் குறிப்புகளின் அட்டவணை ஒப்புமையான கவிதைகளின் தொகுப்பு, கவிஞரைக் குறித்துள்ள குறிப்பு பாடப்புத்த கம். கிரயோன்ஸ் பாடலின் ஒலிப்பதிவு ஒப்புமையுடைய கவிதைகள்

**கற்றல் செயல்பாடுகள்**

1. கவிதையின் உள்ளே
2. கவிதை வாசித்தல்
3. கண்டுபிடிப்போம்
4. கண்டுபிடிப்போம் எழுதுவோம்
5. கவிதை மொழிதல்
6. தொடர்களின் அழகு
7. வினாப்போர்
8. கண்டவையும் கேட்டவையும்
9. மறக்க இயலாத மழைக்காலம்
10. படம் வரைவோம்
11. ஒப்பீடு செய்வோம்
12. தொகுப்பு
13. ரசனைக் குறிப்பு
14. மேம்படுத்துதல்

| | | |
|---|---|---|
| நேரம் | : | 15 பிரிவேளை |
| படைப்பாக்க வேளை | : | கவிதை மொழிதல், ரசனைக் குறிப்பு வாசித்தல், வெளியீடு. மழை அனுபவத்தை வெளியிடுதல் |
| சி பி டி எ | : | கவிதை மொழிதல், ரசனைக் குறிப்பினை வாசித்தல் |

பார்ட். சி

## கற்றல் செயல்பாடுகள்- நுண்ணிலைத் திட்டம்

### I கவிதையின் உள்ளே ( 20 நிமிடம்)

**ஆசிரியை குழந்தைகளிடம்** முதல் வகுப்பிற்கு அம்மா/ அப்பாவின் கையைப் பிடித்துக் கொண்டு வந்தது நினை விருக்கிறதா? அன்று மழை இருந்ததா? பள்ளியில் நடந் தவை எவை குழந்தைகள் பதில் அளிக்கிறார்கள். சேர்க்கை விழா, புதிய நண்பர்கள், மிட்டாய், புதிய புத்த கம், கதை, பாடல், புதிய ஆசிரியை

- தொடர்ந்து ஆசிரியை காணொளியைக் காண்பிக்கிறார். குழந்தைகள் பள்ளிக்கு வரும்போதுள்ள காணொளியின் ஒலிக் காட்சி. இப்போது பார்த்த காணொளியில் உள்ளது என்ன? குழந்தைகள் பதிலளிக்கிறார்கள். மழை அனுப வத்தைக் குறித்துக் கலந்துரையாடுகிறார்கள் ( 3 நிமிடம்)

ஆசிரியை அட்டைத் தாளினைக் காட்சிப்படுத்துகிறார்.

மண்ணில் பொழியும் மாமழையே
மகிழ் புனல் நீந்திடச் செய்வாயே
பாடப்புத்தகம் வகுப்பு ஆறு

- குழந்தைகள் அட்டைத் தாளினைப் பார்த்து வாசிக்கிறார் கள். ஆசிரியையும் குழந்தைகளும் சேர்ந்து பாடுகிறார் கள். (எல்லோரும் பாடுகிறார்கள் என்பதை உறுதி செய் கிறார்கள்)
- இவ்வரிகள் எதனைக் குறிப்பிடுகின்றது. குழந்தைகள் பதி லளிக்கிறார்கள்.
- குழந்தை பருவத்திலுள்ள எந்தெந்த நிகழ்வுகளை நினைவு கூர்ந்திருப்பார்கள்.
- குழந்தைகள் ஒவ்வொருவரும் பதிலளிக்கிறார்கள்.
- ஆசிரியை கரும்பலகையில் எழுதுகிறார். கவிஞர் கவி தையில் குறிப்பிடுவது என்ன என்பதை எவ்வாறு அறிந் துகொள்ளலாம். பாட வாசிப்பிற்கு நேராக கலந்துரையா டல் நடைபெறுகிறது.

### II கவிதையின் உள்ளே ( 40 நிமிடம்)

- ஒவ்வொருவரும் கவிதையினை வாசித்துக் கவிஞரின் கருத்தினைக் கண்டுபிடிக்கிறார்கள். ( 5 நிமிடம்)
- வாசித்துக் கண்டுபிடித்தவர்கள் கூறுகிறார்கள். ஆசிரியை கரும்பலகையில் எழுதுகிறார் (5 நிமிடம்)
- முதலில் ஊகித்துக் கூறியவற்றுடன் ஒப்பிட்டுப் பார்க் கிறார்கள். கருத்துகளைக் கண்டுபிடித்தவர்களைப் பாராட்டுகிறார்கள்.

- எல்லோருக்கும் கவிதையின் மையக்கருத்தினைக் கண்டு பிடிக்க முடிந்ததா? எதனால் முடியவில்லை (பொருள் தெரியவில்லை வாசிப்பது கடினம்/) எல்லோருக்கும் பொருள் தெரிய வேண்டாமா? எவ்வாறு உறுதி செய்யலாம்?
- மீண்டும் வாசித்தல் வாசிக்கும் போது விருப்பமானவை, தெரிந்தவை, தெரியாதவை முறையே (—, ✓, X) ஆகிய குறியீடுகளைப் பயன்படுத்திப் பதிவு செய்யவும் தனித்தனியாக ( 5 நிமிடம்)
- மூன்று பேர் அடங்கிய குழுவில் ஒவ்வொன்றையும் வாசித்து வெளியிடுகிறார்கள். ( 10 நிமிடம்) விருப்பமானவை, தெரிந்தவை, தெரியாதவை என்னும் வரிசையில் வெளியிடுதல் கலந்துரையாடுதல், வெளியிடும் போது பின் தங்கிய மாணவர்களுக்கு முதலாவதாக வாய்ப்பளிக்க வேண்டும். தெரியாத சொற்களின் பொருளை நோட்டுப் புத்தகத்தில் எழுதுகிறார்கள் என்பதை உறுதி செய்ய வேண்டும்.
- பொதுவாக வகுப்பில் வெளியிடுதல், திரும்பச் செய்தலைத் தவிர்க்க வேண்டும் (20 நிமிடம்) பிற குழுக்கள் எதிர்வினையாற்றுகிறார்கள். ஆசிரியை மேலும் தேவையான கருத்துகளை சேர்க்கிறார், மாணவர்கள் நோட்டுப்புத்தகத்தில் மேம்படுத்தி எழுதுகிறார்கள்.
- கவிதையினை ஒரு முறை கூடத் தனித்தனியாக வாசிக்கிறார்கள். ( 5 நிமிடம்) முதலில் வாசித்தவற்றிலிருந்து என்ன மாற்றம் ஏற்பட்டது. மாற்றம் ஏற்பட்டது எவ்வாறு? கலந்துரையாடல்

| |
|---|
| சொற்கள், தொடர்கள் ஆகியவற்றின் மையக் கருத்தினை அறிந்து கொண்டதே கவிதையைப் புரிந்து கொள்ள உதவியது. |

## III கண்டுபிடிப்போம் எழுதுவோம் ( 40 நிமிடம்)

பாடப்புத்தகத்திலுள்ள செயல்பாடுகளை வாசிக்கிறார்கள், என்ன செய்ய வேண்டும்? குழந்தைகளே கண்டுபிடிக்கிறார்கள். கீழ்த் தரப்பட்டுள்ள வினாக்களையும் அட்டைத்தாளில் எழுதிக் காட்சிப்படுத்துகிறார்கள். விடைகளைக் கண்டுபிடித்து ஒவ்வொருவரும் தனித்தனியாக எழுதுகிறார்கள். (10 நிமிடம்)

- மழையில் பள்ளிக்குச் செல்லும் காட்சியைஆசிரியர் எவ்வாறு விளக்குகிறார்?
- 
- கண்டுபிடித்து எழுதியவர்கள் கூறுகிறார்கள் பின்தங்கிய குழந்தைகளுக்கு முதல் வாய்ப்பு

- வினாக்களைத் தனியாக வாசித்துப் புரிந்து கொள்ள இயலுகிறதா?
- எல்லோருக்கும் விடை கண்டுபிடிக்க முடிந்ததா?
- குழந்தைகள் வாசிப்பிலும் எழுதுவதிலும் எதிர்கொள்கின்ற பிரச்சினைகள் எவை?
- அடுத்த நாளில் அவற்றை எவ்வாறு தீர்வு செய்யலாம்?

- மூன்று பேர் அடங்கிய குழுவில் ஒவ்வொரு வினாவிற்கும் உரிய விடைகளை வாசித்துக் கலந்துரையாடி மேம்படுத்தி எழுதுகிறார்கள் ( 10 நிமிடம்)
-

## IV. கண்டுபிடிப்போம் எழுதுவோம் ( 40 நிமிடம்)

பாடநூலிலுள்ள கண்டுபிடிப்போம் எழுதுவோம் என்ற செயல்பாட்டை தனித்தனியாக வாசிக்கிறார்கள். கீழே தரப்பட்டுள்ள பகுப்பாய்வு வினாக்களை அட்டைத் தாளில் எழுதி காட்சிப்படுத்துகிறார்கள்.

### பகுப்பாய்வு வினாக்கள்

1. கவிதையில் விருப்பமான வரி எது? ஏன்?
2. கவிதையை வாசிக்கும் வேளையில் மனதில் தோன்றும் காட்சிகள் எவை?
3. கவிஞரின் எந்த எண்ணங்கள் சிதைந்து விட்டன?
4. கவிஞர் இக்கவிதையில் இவ்வாறு கூறக் காரணம் என்ன?

- தனித்தனியாக வினாக்களை வாசித்துக் கவிதையினை மீண்டும் வாசித்து விடை கண்டுபிடித்து எழுதவும்.
- மூன்று பேர் அடங்கிய குழுவின் முதல் வினாவின் விடையை வெளியிடுதல். எல்லோரும் முதல் வினாவின் விடையை வாசித்துக் கலந்துரையாடி தேவையான மாற்றங்கள் செய்து நோட்டுப்புத்தகத்தில் பதிவு செய்த பின் பிற வினாக்களையும் மதிப்பிட்டு மேம்படுத்தி எழுதுகிறார்கள். 15 நிமிடம்) பிற குழுக்களும் மதிப்பிட்டு மேம்படுத்துகிறார்கள்.
- ஆசிரியர் பதிவு (15 நிமிடம்) அட்டைத் தாளினைக் காட்சிப்படுத்துகிறார்கள்)

1. எனக்குப் பிடித்த வரிகள்: மழையானது மனிதனின் அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்கிறது. உணவின்றி உயிரினங்களால் வாழ முடியாது என்பதை இந்த வரிகள் உணர்த்துகின்றன. எனவே இந்த வரிகள் மிகவும் பிடித்தது. குழந்தைகள் ஒவ்வொரு விடைகளையும் பொதுவாக வெளியிடும் போது வினாவிற்கான ஆசிரியரின் பதில்களையும் வெளியிட்ட பின் அடுத்த வினாவிற்குச் செல்வது நல்லது.
2. இக்கவிதை பல்வேறு காட்சிகளை மனதில் கொண்டு வருகிறது. மனிதன் தாகம் தணிவதும் தாரணி வாழ்வதும் மழையாலே. விதைகளை விதைத்து மகிழ்ந்திடுவார்

பகுப்பாய்வு வினாக்கள் ஆழமான வாசிப்பிற்கு வழிகாட்டியதா? எல்லோருக்கும் விடை எழுத முடிந்ததா? எத்தனைபேருக்கு ரசிப்பதற்கு முடிந்தது. குழந்தைகள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் எவை? ஆசிரியரின் புரிதல்கள் எவை?

இத்தரையில் வாழ்பவர் இன்பமெலாம் மழையின் ஈடில்லா வன்மையின் தன்மையாகும்.

3. உண்ணும் உணவும் மழையன்றோ? அதனை உண்ணத்துணையும் நீயன்றோ,
மண்ணில் பொழியும் மாமழையியே மகிழ்புனல் நீள்திடச் செய்யலாயே
என ஆசிரியர் மழையை சிறிப்பிக்கின்றார்.

4. ஒத்த ஒசைதரும் சொற்களை எழுதி விளக்குங்கள்,
மேதினி, மீதினில்
கங்கை, பொங்கிடும்.
சித்திரை, இத்தரை.
சற்று, பற்று.
உண்ணும் மண்ணில் இவற்றில் இரண்டாவது எழுத்து ஒன்று போல் வந்து எதுகையாக அமைந்துள்ளன.

- குழந்தைகள் ஒவ்வொரு விடையையும் பொதுவாக வெளியிடும் வேளையில் ஆசிரியர் ஒரு வினாவின் விடையையும் பதிலினையும் வெளியிட்ட பிறகு அடுத்த வினாவை விளக்கலாம்.

## V கவிதை மொழிதல் (40 நிமிடம்)

குழந்தைகள் கவிதையினைப் பலமுறை வாசித்தார்கள், கருத்துகளைப் புரிந்து கொண்டார்கள், சொற்களை அறிந்து கொண்டனர். மேலும் கவிதைக்கு தாளம் அளிக்க வேண்டும். (5 நிமிடம்) இரண்டு அல்லது 3 பேர் மொழிதலின் சிறப்பினை பிற குழந்தைகள் கூறுகிறார்கள். (கருத்திற்குப் பொருத்தமானது, மொழிதலின் தெளிவு, கேட்பதற்குச் சுவையாக உள்ளது. அதன் தன்மையைப் புரிந்து கொள்கிறார்கள். இதன் அடிப்படையில் மதிப்பீட்டுக் குறிப்புகளை உருவாக்குகிறார்கள். குறிப்புகளை அட்டைத் தாளில் எழுதிக் காட்சிப்படுத்துகிறார்கள். மூன்று பேர் அடங்கிய குழுவில் ஒவ்வொருவரும் கவிதையை மொழிகிறார்கள். பிற குழந்தைகள் குறிப்பின் அடிப்படையில் மதிப்பிடுகிறார்கள். வெளியிடுதல், கலந்துரையாடல். ஆசிரியையின் மொழிதலை மாணவர்கள் மதிப்பிடுகிறார்கள். ஐசிடி யின் உதவியுடன் கவிதையை வெளியிடுகிறார்கள், தொடர்ந்து இருவர் சேர்ந்து மொழிகிறார்கள். மதிப்பிடுகிறார்கள்

எல்லோரும் தனித்தனியாக தாளம் கண்டுபிடித்தார்களா? குழுவாக மதிப்பிட்ட முறை சிறந்ததா? ஆசிரியையின் மதிப்பீடு என்ன? பொருத்தமான தாளமும் இசையையும் கண்டுபிடித்தார்களா? சிறந்த முறையில் மொழிந்தவர்கள் எத்தனை சதவிகிதம்? புரிதல்கள் எவை?

## VI. தொடர்களின் அழகைக் கண்டுபிடிப்போம் (40 நிமிடம்)

கவிதையிலுள்ள சுவையான தொடர்களைக் கண்டுபிடிக்கிறார்கள். பொதுவாக வெளியிடுதல்.

- தொடர்களைக் கண்டுபிடிக்கிறார்கள்.
- ஆசிரியை கரும்பலகையில் எழுதுகிறார்.
- இவற்றின் தனித்தன்மைகள் என்ன கலந்துரையாடல்

எல்லோருக்கும் தொடர்களைக் கண்டுபிடிக்க முடிந்ததா? கடினமாகத் தோன்றியது ஏன்? கலந்துரையாடல் சிறப்பாக அமைந்ததா? புரிதல்கள் எவை?

- பயிற்சித்தாள்- தொடர்கள்
- ஒவ்வொருவரும் தனித்தனியாக எழுதுகிறார்கள்.
- மூன்று பேர் அடங்கிய குழுவில் வாசித்து மேம்படுத்தி எழுதுகிறார்கள். அதன் பிறகு அடுத்த தொடர் என்ற வரிசையில் முறையாக வெளியிட்டுக் கலந்துரையாடுகிறார்கள்.
- ஆசிரியர் பதிவுகளை வாசிக்கிறார்கள், கலந்துரையாடி மேம்படுத்தி எழுதுகிறார்கள்.

### VII. வினாப் போர் (40 நிமிடம்)

- குழந்தைகள் தனிநபராக ஏராளம் வினாக்களைத் தயாரிக்கிறார்கள். (5 நிமிடம்)
- ஐந்து பேர் அடங்கிய குழுவில் திரும்பத் திரும்ப வராத வகையில் தொகுக்கிறார்கள்.
- குழுக்களுக்கிடையே வினாக்கள் கேட்கிறார்கள். விடையைக் கூறுகிறார்கள். சரியான விடைக்குப் புள்ளிகள் அளிக்கிறார்கள்.
- சிறந்த குழுவினரைப் பாராட்டுகிறார்கள்.

எல்லோரும் வினாக்கள் தயாரித்தார்களா? குழுக்களின் தொகுப்புரை சிறப்பாக இருந்ததா வினாப் போர் முறையாக நடத்த முடிந்ததா? புரிதல்கள் எவை?

### VIII. கண்டதும் கேட்டதும் (40 நிமிடம்)

- கவிதை வாயிலாக ஏராளம் அனுபவங்கள் கிடைத்தன. கவிஞருக்குக் காட்சி, கேள்வி, மணம், தொடு உணர்வு, நினைவுகள் என பல்வேறு அனுபவங்கள் இருந்தன.
- தனித்தனியாகக் குறிப்பிடவும் ( 10 நிமிடம்) ஒன்றிரண்டு பேர் வெளியிடுதல் சிறு கலந்துரையாடல்
- பயிற்சித்தாள், ஐம்புலன்களின் அனுபவங்கள். எல்லோருக்கும் அளிக்கப்படுகிறது. நிறைவு செய்கிறார்கள். மூன்று பேர் அடங்கிய குழுவில் வெளியிடுதல். பொதுவாக வாசித்தல். ஆசிரியர் பதிவினை வெளியிட்டுக் கலந்துரையாடி மேம்படுத்துதல்.

கவிதையை ரசிக்கும்படி குழந்தைகளுக்கு ஏற்பட்ட எந்த மாற்றத்தைப் புரிந்து கொண்டோம். எத்தனை பேர் பயிற்சித்தாளைச் சுயமாகச் செய்தார்கள். படைப்பின் வேற்றுமைகள் எவை?

### IX. மறக்க இயலாத மழைக்காலம் (40 நிமிடம்)

- பாடநூலிலுள்ள செயல்பாட்டினைக் குழந்தைகள் வாசிக்கிறார்கள். என்ன புரிந்தது? சராசரியான குழந்தைகளிடம் ஆசிரியர் கேட்கிறார். குழந்தைகள் பதிலளிக்கட்டும். தேவையெனில் விளக்கலாம்.
- குழந்தைகள் தனித்தனியாக மழை அனுபவத்தை எழுதட்டும்.
- வகுப்பின் தரத்திற்கு ஏற்ப (Concept map) அனுபவம் கூறும் கருத்து விளக்கப்படம் (Mind maping) போன்றவற்றைச் செய்யலாம்.

- மூன்று பேரின் குழுவில் ஒவ்வொருவரும் எழுதிய அனு பவத்தை வாசித்து வெளியிட வேண்டும்.
- வெளியிடுவதைப் பிற மாணவர்கள் மதிப்பிட வேண்டும்.
- மதிப்பீட்டுக் குறிப்புகளைக் கலந்துரையாடல் வழியாக மேம்படுத்த வேண்டும்.

குழந்தைகளின் பங்களிப்பு படைப்பின் மேன்மைகள் எவை? ஆசிரியையின் புரிதல்கள் எவை?

## குறிப்புகள்

- அனுபவத்தைக் கருத்துத் தெளிவுடன் எழுத வேண்டும்.
- பொருத்தமான சொற்களின் பயன்பாடு
- மனதைத் தொடும் மொழி
- பிழையின்றி எழுத்து, சொல் ஆகியவற்றை இடைவெளி யிட்டு எழுதுகிறார்கள்.
- குழு உறுப்பினர்கள் இந்தக் குறிப்பின் அடைப்படையில் மதிப்பிடுகிறார்கள். அறிவுரைகளுக்கு ஏற்ப மேம்படுத்தி எழுதுகிறார்கள். தொடர்ந்து குழுவில் சிறந்தவற்றை வாசித் தல்– கலந்துரையாடல் ஆசிரியர் பதிவினை வாசித்தல்– குழந்தைகள் மதிப்பிடுகிறார்கள். அவரவர் குழுவிலுள்ள படைப்புகளை ஒப்பிடுகிறார்கள். கலந்துரையாடல் ஆசி ரியர் தொகுத்து வழங்குகிறார்.

## மழை அனுபவம்

மழை அனுபவத்தை அட்டைத்தாளில் எழுதிக் காட்சிப்படுத் துகிறார்கள், குழந்தைகள் வாசிக்கிறார்கள். கலந்துரையாடல். ஆசிரியர் தொகுத்துக் கூறுகிறார்.

### X. படம் வரைவோம் (40 நிமிடம்)

- பாடநூலிலுள்ள படம் வரைவோம் என்ற செயல்பாட்டி னைக் குழந்தைகள் வாசிக்கட்டும். என்ன செய்ய வேண் டுமென்பதை குழந்தைகளே விளக்கட்டும். தேவையா னால் விளக்கிக் கூற வேண்டும்.

  கவிதை வரிகளை வாசிக்கும் வேளையில் மனதில் தோன் றும் காட்சிகள் எவை?

- குழந்தைகள் பதிலளிக்கிறார்கள். ஆசிரியைக் கரும்பல கையில் எழுதுகிறார்.

  மழை அழகு
  மழையில் நனைவது அழகு
  மழையின் ஊடே வெயில் அழகு
  மழையில் குழந்தையின் காகிதக் கப்பல்
  மழைக்குப் பின் மண்வாசனை அழகு
  மழை இரவின் குளிர் அழகு

- எல்லோருக்கும் கருத்தினை ஓவியமாக்க முடிந்ததா?
- ஆசிரியர் பதிவினைத் தயா ரிப்பதில் பிரச்சினை இருந் ததா?
- ஓவியம் சிறப்பாக வரைந்த வர்களுக்குத் தொடர் செயல் பாடாக எதை வழங்கலாம்.

- இது போன்று கவிதையை வாசிக்கும் வேளையிலும் குழந்தைகள் பள்ளிக்கு வரும் வழியிலும் வேறென்னென்ன காட்சிகள் மனதில் தோன்றுகிறது. குழந்தைகள் கூறுகிறார்கள். ஆசிரியைக் கரும்பலகையில் எழுதுகிறார்.
- மழையில் பல்வேறு வண்ணங்கள் உடைய குடையைப் பிடித்து வருகின்ற குழந்தைகள்.
- வயல் வரப்புகள் வழியாக மழையில் வாழை இலையைப் பிடித்துக்கொண்டு வருகின்ற குழந்தைகள்.
- தம்பிக்குக் குடைபிடித்துக் கூட்டிக் கொண்டு வரும் அக்கா.
- வேனிற்கால நினைவுகளாகத் தோன்றும் பூரம், விஷு
- பல்வேறு வண்ணங்களில் மலர்ந்துள்ள ஆம்பல் நிறைந்த குளம்.
- ஒவ்வொருவரும் வரைவதற்கு விருப்பமான ஒரு படத்தைத் தேர்ந்தெடுக்க வேண்டும்.
- ஒவ்வொருவரும் வரைகிறார்கள். 10 நிமிடம்
- ஒரே படத்தைத் தேர்ந்தெடுத்தவர்கள் என்ற அடிப்படையில் குழுவாக மாறுகிறார்கள். படங்களை ஒருவருக்கொருவர் மதிப்பிடுகிறார்கள். மதிப்பிடுவதற்கான குறிப்புகளை உருவாக்குகிறார்கள். அறிவுரைகளைப் பகிர்ந்துகொண்டு மேம்படுத்துகிறார்கள். படத்தின் பெயரும் அடிக்குறிப்பினையும் பதிவு செய்கிறார்கள். ஆசிரியர் பதிப்பு வெளியிடப்படுகிறது. ஓவியமலர் தயாரிக்கிறார்கள்.

## XI. ஒப்பீடு செய்வோம் (40 நிமிடம்)

- பாடபுத்தகத்திலுள்ள செயல்பாட்டை வாசிக்கட்டும். என்ன செய்ய வேண்டும். குழந்தைகள் கண்டுபிடிக்கிறார்கள், விளக்குகிறார்கள்.
- குழந்தைகள் பாடப்பகுதியிலுள்ளவற்றை வாசிக்கிறார்கள். புரிந்துகொண்டவை எவை? குழந்தைகள் பதிலளிக்கிறார்கள்.
- கவிதையிலுள்ள அன்பின் மகத்துவத்தை ஒப்பிட்டு எழுதுக.
- தனித்தனியாக எழுதுகிறார்கள்.
- மூன்று பேரின் குழுவில் வெளியிட்டு கலந்துரையாடுதல். மதிப்பீட்டுக் குறிப்புகளைக் கரும்பலகையில் எழுதுகிறார்கள்.
- கவிதையிலுள்ள கதை மாந்தர்களின் பண்பு நலன்களைக் கலந்துரையாடவும்.

இரண்டு கவிதையின் பகுதிகளை ஒப்பீடு செய்தீர்களா? கலந்துரையாடல் பயனுள்ளதாக அமைந்ததா? கலந்துரையாடலின் போது குழந்தைகள் எதிர்கொண்ட பிரச்சினைகள் எவை? ஆசிரியர் பதிலினை வெளிட்டது குழந்தைகளின் படைப்பிற்கு எந்த அளவு துணைபுரிந்தது?

- மேம்படுத்தி எழுதி பொதுவாக வெளியிடுதல்.
- கலந்துரையாடல் ஆசிரியர் பதிவினை வெளியிடுதல்.
- கலந்துரையாடல் - மேம்படுத்துதல் (ஆசிரியர் பதிவுடன் ஒப்பீடு)

### XII. தொகுப்போம். 20 நிமிடம் (வீட்டுப்பாடம்)

- சகோதர பாசத்தை வெளியிடும் கதைகளை உள்ளடக்கிய கவிதைகளைக் குழந்தைகள் தொகுக்கிறார்கள். (மழைக் கவிதைகள்)
- எங்கிருந்து தொகுக்கலாம். ( குழந்தை இலக்கிய மலர்கள், முதியவர்களிடம் கேட்டு, பாடநூல்களிலிருந்தும்)
- தொகுத்தவற்றை ஏ4 தாளில் எழுதிப்பொருத்தமான படம் வரைந்து அடுத்த நாள் வகுப்பில் காட்சிப்படுத்துகிறார் கள். (மழைக் கவிதைகள்)
- குழந்தைகளும் ஆசிரியையும் மதிப்பிடுகிறார்கள்.

### XIII ரசனைக் குறிப்பு (60 நிமிடம்)

கவிதையுடன் தொடர்பாக நாம் செய்த செயல்பாடுகள் எவை? குழந்தைகள் கூறுகிறார்கள். ஆசிரியைக் கரும்பலகையில் எழுதுகிறார். இவற்றின் வாயிலாகப் புரிந்துகொண்ட கருத்துகள் எவை? கலந்துரையாடல். ஆசிரியை குழந்தைகள் கூறும் கருத்தினைக் கற்பனையாகக் கரும்பலகையில் எழுதுகிறார்கள்.

கவிதையின் ரசனைக் குறிப்பு எழுதுகிறார்கள். ( 10 நிமிடம்)

மூன்று பேரின் குழுவில் வாசிக்கிறார்கள். ஒருவருக்கொருவர் மதிப்பிடுகிறார்கள். ( 10 நிமிடம்) குறிப்புகளைக் கலந்துரையாடித் தயாரிக்க வேண்டும்.

- கருத்து முழுமை, வெளிப்படுத்தும் அழகு, ஓசை நயம், கருத்துகள், எளிமையான தெளிவான நடை.

ஒருவருக்கொருவர் மதிப்பிடுகிறார்கள், சிறந்தவற்றைப் பொதுவாக வாசித்தல்- கலந்துரையாடல்- மதிப்பீடு- ஆசிரியர் பதிவினை வாசித்தல் கலந்துரையாடல் - சுய படைப்புகளுடன் ஒப்பிடுதல்- மேம்படுத்துதல்.

- கருத்துகள் முழுமையாக வந்துள்ளதா?
- பங்களிப்பு, குழுச்செயல்பாட்டின் மேன்மை, ஆசிரியர் பதிவு பயன்படுத்திய முறை.

### XIV. மேம்படுத்துதல் 40 நிமிடம்

- ரசனைக் குறிப்பினை சரியாக மேம்படுத்த வேண்டும். இதற்கு ஒரு குழுவின் படைப்பினை மேம்படுத்தித் தேர்ந்தெடுத்துப் பொதுவாக மேம்படுத்த வேண்டும்.

  ஒரு குழுவின் படைப்பினை அட்டைத்தாளில் வெளியிடுகிறார்கள். ஆசிரியை பல்வேறு தலங்களிலுள்ள வினாக்களைப் பொதுவாக வாசித்து மேம்படுத்துகிறார்கள்.

- மேம்படுத்துவதில் எல்லோரும் பங்கு பெற்றனரா?
- படைப்பினை எவ்வாறு மேம்படுத்தலாமென்ற புரிதல் கிடைத்ததா?

**மையக் கருத்து**

- எல்லாக் கருத்துகளும் வந்துள்ளதா?
- கருத்துகளுடன் தொடர்பில்லாத வாக்கியங்களுண்டா?
- மேலும் சேர்க்க வேண்டியவை தவிர்க்க வேண்டியவை எவை?

**வாக்கிய அமைப்பு**

- வாக்கியங்கள் முறையின்றி எழுதப்பட்டுள்ளதா?
- சொற்கள் விடுபட்டுள்ளனவா?
- தேவையில்லாத சொற்கள் உள்ளனவா?

**சொற்கள்**

- பொருத்தமான சொற்கள் உள்ளனவா?
- பொருள் வேறுபாடுள்ள சொற்கள் உள்ளனவா?

**எழுத்து**

- எழுத்து, சொல், வாக்கியம் ஆகியவை குறிப்பிட்ட இடை வெளியிட்டு எழுதப்பட்டுள்ளனவா?
- எழுத்து, குறியீடு ஆகியவை முறையாக எழுதப்பட்டுள் ளனவா?
- எழுத்துப் பிழையின்றி எழுதப்பட்டுள்ளதா

**வெளியீட்டுத்தலம்**

- கருத்து முழுமையாக உள்ளது.
- சுய உற்றுநோக்கல்களை எழுதியுள்ளனர்.
- வெளியீட்டுத் தன்மை, ஓசைநயம் ஆகியவை விளக்கப் பட்டுள்ளன.
- விருப்பமான வரிகளை விளக்கியுள்ளனர்.
- பொதுவாக வினாக்களை வாசித்து அட்டைத்தாளில் மாற் றங்கள் செய்கிறார்கள். ஒவ்வொருவரும் அவரவர் படைப் புகளை மேம்படுத்துகிறார்கள்.
- ஒருவருக்கொருவர் படைப்புகளை மதிப்பிடுகிறார்கள்.
- ரசனைக் குறிப்பினை ஏ4 ல் நன்றாக எழுதியுள்ளனர்.
- பொருத்தமான படங்கள் வரைகிறார்கள்.
- இதழ் தயாரிக்கிறார்கள்.

- சுய படைப்பினை மேம்ப டுத்துவதற்கு எல்லோரும் முயற்சித்தார்களா?
- மேம்படுத்தும் வேளையில் ஆசிரியர் எதிர்கொண்ட பிரச்சினைகள் எவை?
- சுய உற்றுநோக்கல்கள் எவை?

## பிரதிபலிப்புக் குறிப்பு

- கவிதையை வாசித்துப் புரிந்துகொள்ளும் அனுபவம் குழந்தைகளுக்குக் குறைவாகவே உள்ளது.
- விடைகள் தருகின்ற வினாக்களைக் கேட்கும் அனுபவம் குறைவு.
- பயிற்சித்தாளினை நிறைவு செய்வதில் ஆர்வத்துடன் ஈடுபட்டனர்.
- எல்லோருக்கும் பங்களிப்பு கிடைத்ததுடன் கற்றல் அடைவினையும் பெற்றுள்ளனர்.

| அலகு 1 மண்ணில் பொழியும் மாமழையே |
|---|
| **பயிற்சித்தாள் வகுப்பு 6 தமிழ்**<br><br>**புலன் அனுபவங்கள் செயல்பாடு மண்ணில் பொழியும் மாமழையே தரும் அனுபவங்கள்** |
| 1. பார்க்க இயல்பவை |
| 2. கேட்க இயல்பவை |
| 3. முகர்ந்து பார்த்தல் |
| 4. நினைவுகூர இயல்பவை |

| அலகு - 1 மண்ணில் பொழியும் மாமழையே - பயிற்சித்தாள் வகுப்பு - 6 தமிழ் |
|---|
| **புலன் அனுபவங்கள் - செயல்பாடு**<br>**மண்ணில் பொழியும் மாமழையே கவிதை தரும் புலன் அனுபவங்கள்** |
| 1. பார்க்க இயல்பவை |
| 2. கேட்க இயல்பவை |
| 3. முகர்ந்து பார்க்க இயல்பவை |
| 4. நினைவுகூர இயல்பவை |

## மண்ணில் பொழியும் மாமழையே

*மேகமாய் விண்ணதில் மேவிடுவாய் - என்றும்*
*மேதினி மீதினில் பொழிந்திடுவாய்*
*தாகம் தணிவதும் உன்துணையால் - இந்தத்*
*தாரணி வாழ்வதும் உன்னருளால்*
*கங்கை ஒழுகுவது உன்னாலே - எங்கள்*
*காவிரி பாய்வதும் உன்னாலே*
*பொங்கிடும் தாமிர வருணியென்போம் - உன்னைப்*
*போற்றிப் புகழ்ந்து வணங்கிடுவோம்*
*சித்திரைப் பத்தினில் வித்திடவே*
*சீருடன் உன்னளி எண்ணுவரே*
*இத்தரை வாழ்பவர் இன்பமெலாம் - உன்றன்*
*ஈடில்லா வன்மையம்மா.*
*சற்று நீ கோபமே கொள்வாயெனில் - இந்தச்*
*சகத்தினில் துன்பங்கள் விளைந்திடுமே*
*பற்றுடன் நீ செய்யும் பணிகளினால் - இந்தப்*
*பாரினில் இன்பங்கள் பொங்குமம்மா*
*உண்ணும் உணவும் நீயன்றோ அதை*
*உண்ணத்துணையும் நீயன்றோ*
*மண்ணில் பொழியும் மாமழையே*
*மகழ்புனல் நீந்திடச் செய்வாயே*

***- இ. குற்றாலம் பிள்ளை***

## நீ எங்கே

*மேகத்துள் உறைபவளே!*
*மின்னல் மழை பொழிபவளே*
*இடி முழக்கம் செய்பவளே !*
*இன்னும் ஏன் வரவில்லை.*

*வாய் பேசா எருதுகளும்*
*வாழ வழி இல்லாமல்*
*வாய் திறந்து உன்னைத்தான்*
*அம்மா என்றழைக்கிறது.*

*அழுகுரலும் வாழவில்லையோ?*
*அன்புமனம் உனக்கில்லையே?*
*இறங்கிவந்து பொழிவதற்கு*
*இன்னும் மனம் வரவில்லையோ?*

*எப்பொழுது செவிடானாய்?*
*ஏதுபிழை நானறியேன்*
*இடி முழக்கம் கேட்கலையே!*
*ஊமையாய்ப் போனாயோ!*

*கடல் நீரைக் குடித்தும் நீ*
*கருவுறவே காணோமே!*
*மனம் மாறிப் போனாயோ!*
*மழையேதும் பிறக்கலையே !*

**- குழ. கதிரேசன்**

செயல்பாடு - 11

## நீ எங்கே

*மழைக்காக ஏங்கும் மனிதரையும் விலங்குகளையும் ஆசிரியர் இக் கவிதையில் காட்சிப்படுத்துகிறார். கடல் நீரைக் குடித்தும் கருவுற்று மழையாகப் பொழியவில்லையே எனக்கூறுகிறார். வாய்ப்பேசாத எருதுகளும் வாழ வழி இல்லாமல் வாய் திறந்து அம்மா என்றழைக்கிறது என்று கூறுகிறார்.*

செயல்பாடு 13

## மண்ணில் பொழியும் மாமழையே

*மேகமாக விண்ணில் மேவுகின்ற நீரானது மேதினியில் பொழிகிறது. தாகம் தணிவதும் உலகம் வாழ்வதும் மழையினாலேயே ஆகும். நதிகள் ஒழுகுவதும் உன்னாலே எனவே உன்னைப் போற்றுகிறோம். வித்துகளை விதைப்பதும் சிறந்த பயிர்களைப் பெறுவதும் உன்னாலே. இவ்வுலகில் வாழும் எல்லோரும் மழையினால் மட்டுமே இன்பமாக வாழ்கிறார்கள். அதனால் சிறிது கோபம் கொண்டுவிட்டால் பல்வேறு துன்பங்களைத் தருவதும் மழையாகும். உன் கருணை இல்லையேல் இத்தரணியில் யாருமே உணிவினை உண்ண முடியாது. இக்கவிதையினை வாசித்தவர் ஒரு போதும் மழையினை மறந்து விடுவதில்லை. இக் கவிதை மழையின் புது அனுபவத்தையே அளிக்கிறது.*

## 2.9 மதிப்பீடு என்ன? எவ்வாறு?

மதிப்பீட்டு அணுகுமுறை எல்லா பாடங்களிலும் விவாதிக்கப்படுகிறது. பல ஆசிரியர் கையேடுகள், படிகள் போன்ற மதிப்பீட்டு அணுகுமுறை வரைவிலும் மதிப்பீட்டுச் செயல்பாட்டு விளக்கமாக எடுத்துரைக்கப்பட்டுள்ளது. கற்றல் செயல்முறையில் குழந்தைகள் எதிரிடும் பிரச்சினைகளை ஒவ்வொரு நிலையிலும் ஆசிரியை மதிப்பிட்டிருப்பார். குழந்தைக்குத் தேவையான கற்றல் உதவியினை உறுதிசெய்யும் முயற்சியே இது. ஆசிரியர் கையேடு, படிகள் ஆகியவற்றைப் பார்வையிட்டு கீழே குறிப்பிடும் கருத்துகளை தெளிவுபடுத்தவும். கீழே தரப்பட்டுள்ள மதிப்பீட்டுக் குறிப்புகளின் அடிப்படையில் குறிப்புகள் தயாரித்துப் பொதுக் கலந்துரையாடல் நடத்தவும்.

மதிப்பீட்டுக் அணுகுமுறை

வினா உருவாக்கம்

மதிப்பெண் வழங்கும் முறைகள்

மதிப்பீட்டு உத்திகள்

மதிப்பீட்டுப் படிவம்

கற்றல் முன்னேற்ற வரைவு

படைப்புத் திறன்களின் மதிப்பீடு

கலந்துரையாடலுக்காக ஆசிரியர் கையேட்டின் முக்கிய பகுதிகளைப் பயன்படுத்த வேண்டும்.

கற்றல் என்பது குழந்தைகளிடம் இயல்பாகவும் தொடர்ந்தும் நடைபெறும் ஒரு செயல்முறையாகும். கற்றல் சிறப்பாக நடைபெற வேண்டுமாயின் அனுபவங்கள் எனது நோக்கம், கற்றல் அடைவுகள் ஆகியவற்றை மையப்படுத்தியதாக இருக்க வேண்டும். குழந்தை அடைய வேண்டிய திறன்கள், அறிவு ஆகியவை குறித்துத் தெளிவான புரிதல் ஆசிரியருக்கு இருக்க வேண்டும். ஒவ்வொரு பாடப்பகுதியின் வாயிலாக அடைய வேண்டிய **கற்றல் அடைவுகள் (Learning outcomes)** முன்னரே தீர்மானித்து அதற்கேற்ப கற்றல் செயல்பாடுகளைத் திட்டமிட வேண்டும். இச்செயல்பாடுகளை வாழ்க்கை அனுபவங்களுடன் தொடர்புபடுத்திக் கற்பிக்கவும் வேண்டும்.

இவ்வாறு அடைந்த திறன்கள், அறிவு ஆகியவை கற்றல் அடைவுகளை உறுதிசெய்வதற்கு எந்த அளவு போதுமானது. கற்றல் அடைவுகளைப் பெற்றுக்கொள்ளாதவர்கள் யார் யார்? அளிக்க வேண்டிய தொடர் அனுபவங்கள் எவை? அவற்றை எவ்வாறு அளிக்க வேண்டும்? இதுபோன்ற சிந்தனைகள் மதிப்பீட்டின் பகுதியாக ஆசிரியர்களிடம் உருவாக வேண்டும்.

ஒரு பாடப்பகுதியின்/ அலகின் பரிமாற்றத்திற்குப் பின் என்னென்ன கற்றீர்கள் என மதிப்பிடும் செயல்முறையைக் **கற்றலை மதிப்பிடுதல் (Assessment of learning)** எனக் கூறலாம். பாடப்பகுதியினைக் கற்ற பிறகு கற்போரின் முன்னேற்றம், கற்றல் தரம் ஆகியவை இங்கு மதிப்பிடப்படுகின்றன. இது மதிப்பீட்டின் ஒரு பகுதி மட்டுமே ஆகும்.

ஆனால் கற்றலை உறுதி செய்வதற்கான மதிப்பீட்டிற்காக அதிக முக்கியத்துவம் அளிக்க வேண்டும். கற்றல் நடைபெறும் வேளையில் அதனைச் சிறப்பாக நடத்தும் பொருட்டு ஆசிரியரோ சக மாணவர்களோ ஈடுபடுவதுமுண்டு. கற்றலுடனான இந்த மதிப்பீடும், பின்னூட்டம் அளித்தலும் மதிப்பீட்டின் மற்றொரு தலமாகும். இதனைக் கற்றலுக்கான மதிப்பீடு என்று கூறலாம்.

இதனைக் கற்றல் முன்னேற்றத்தின் பொருட்டு தொடர்ந்து செய்யவேண்டியதுடன் இது கற்றல் செயல்பாட்டுடன் இணைந்து நிற்பதுமாகும்.

இத்துடன் கற்றல் வழியாகப் பெற்ற கருத்துகள் அறிவு இவற்றைச் சுய விமர்சனத்துடன் பரிசோதித்து மாற்றங்களைப் புரிந்துகொண்டு திருத்தம் செய்வதும் உண்டு. இதனைச் சுய மதிப்பிடலாகக் கருதலாம். இது சுய **மதிப்பீடே கற்றல் (Assessment as learning)** எனப்படும்.

கற்றல் சிறந்த முறையில் நடைபெற வேண்டுமாயின் கற்றலுக்கான மதிப்பீடும், மதிப்பீடே கற்றல் ஆகியவற்றிற்கு முக்கியத்துவம் அளிக்க வேண்டும். அவ்வாறு கற்றலை பயனுள்ளதாக்குவதற்கு மதிப்பீட்டுச் செயல்முறைகளுக்கு முக்கியத்துவம் அளிக்கும் அணுகுமுறையை நாம் பின்பற்றவும் வேண்டும்.

கற்றல் அடைவினை உறுதிசெய்யும் விதத்திலான கற்றல் அணுகுமுறையைப் பின்பற்றும் போது அதற்குத் துணைசெய்யும் வகையிலான மதிப்பீட்டுச் செயல்பாட்டையும் பின்பற்ற வேண்டும். எனவே கற்றல் அடைவிற்கும் செயல்முறைக்கும் முக்கியத்துவம் அளிக்கும் மதிப்பீட்டு அணுகுமுறையைக் கடைபிடிக்க வேண்டும். கற்றல் அடைவுகளுக்கு முக்கியத்துவம் அளித்து உருவாக்கும் கற்றல் செயல்பாடுகளில் மாணவரின் தீவிரப் பங்களிப்பு உறுதி செய்யப்படுகிறது. விமர்சனபூர்வமான சிந்தனை, பகுத்தறிவு, கற்றலின் பிரதிபலிப்பு, வெளியீடு, ஒருவருக்கொருவருடனான அறிவு போன்றவை கற்றல் அடைவுகளுக்கு முக்கியத்துவம் அளிக்கும் கற்றலின் தனித்தன்மைகளாகும்.

## தொடர்ச்சியான ஒருங்கிணைந்த மதிப்பீடு (CCE)

தொடர்ச்சியான ஒருங்கிணைந்த மதிப்பீட்டு முறையை நாம் பின்பற்ற வேண்டும். குழந்தையிடம் முறையாக நடைபெறும் ஒரு செயல்முறையே கற்றல், அதனாலேயே திறன்களும் அறிவும் எந்த அளவு பெற்றார்கள் என்பதைப் பரிசோதிக்கும் மதிப்பீட்டுச் செயல்முறையும் தொடர்ச்சியாக நடைபெற வேண்டும். ஒருங்கிணைந்த மதிப்பீடு என்பதன் பொருளாவது குழந்தையின் அறிவாற்றலானது சமூக உணர்வு மண்டலங்களின் தொடர்ச்சியான மதிப்பீடாகும்.

## தரமதிப்பீட்டு முறை

தொடர்ச்சியான ஒருங்கிணைந்த மதிப்பீட்டிற்கு தர மதிப்பீட்டு முறை பயன்படுத்தப்படுகிறது. எட்டாம் வகுப்பு வரையிலான தரமதிப்பீட்டிற்கு 5 புள்ளி தரம் பயன்படுத்தப்படுகிறது. 5 புள்ளி தர மதிப்பீட்டின் புள்ளிகளும் சதவீதமும் தரமும் கீழே தரப்பட்டுள்ளன.

| தர மதிப்பீட்டுச் சதவீதம் | தரம் |
|---|---|
| 75 - 100 | A |
| 60 - 74 | B |
| 45 - 59 | C |
| 33 - 44 | D |
| 33 க்குக் கீழ் | E |

## தொடர் மதிப்பீட்டில் மொழிப்பாடத்தின் கற்றல் செயல்முறையை மதிப்பிடுவது எவ்வாறு என்பதைப் பரிசோதிப்போம்.

மொழிப் பாடத்தில் உள்ளடக்கத்தின் கருத்துகள் கிடைப்பது போன்றே வெளியீட்டு வடிவங்களும் அவை பற்றிய அறிவும், மொழித் திறன்களின் வளர்ச்சியும் குழந்தைகளுக்கு உருவாகிறது என்பதும் முக்கியமானதாகும். அவ்வாறாயின் மதிப்பீட்டுக் குறிப்புகளைப் பயன்படுத்தி எவ்வாறு கற்றல் செயல்முறையை மதிப்பிட வேண்டும்.

- **பங்களிப்பு**

கற்றல் செயல்பாட்டில் குழந்தைகளின் ஆர்வம் குழுச் செயல்பாட்டிலுள்ள பங்களிப்பு, வெவ்வேறு மொழிக் கற்றல் உறைவிடங்கள். ( நூலகம், ஒப்படைப்பு நிறைவு செய்தல்) வாயிலாக அறிவாக்கம் செய்யும் முறை ஆகியவற்றைக் கருத்தில் கொள்ள வேண்டும்.

- **கருத்துகள்/ அறிவு**

மொழியின் உள்ளடக்கம் குறித்த அறிவு வெளியீட்டு வடிவத்தின் அமைப்பு, சிறந்த மதிப்பீட்டுக் குறிப்புகள், மொழித்திறன் ஆகியவற்றில் மாணவன் எந்த நிலையில் உள்ளான் என்பதையே ஆசிரியை மதிப்பிட வேண்டும்.

- **திறன்கள்**

கேட்டல், பேசுதல், வாசித்தல், எழுதுதல், படைப்புத்திறன் ஆகியவற்றில் குழந்தையின் முன்னேற்றத்தை மதிப்பிட்டு பின்னூட்டம் அளிக்கப்படுகிறது. பல்வேறு மொழி வெளியீட்டுப் பகுதிகள், மொழிக்கூறுகல், கருத்துப் பரிமாற்றம் இவற்றில் குழந்தையின் வெளியீட்டு முறையும் கருத்தில் கொள்ள வேண்டும்.

- **நிகழ்த்துதல்/ வெளியீடு**

மொழியில் கருத்து வெளியீட்டிற்கு பல்வேறு வாய்ப்புகள் உள்ளன. குழந்தையின் படைப்புத் திறன் போன்றே பிற வெளியீடுகளும் முக்கியமானவையாகும். ( மொழிதல், பாடுதல், நடத்தல், ஓவியம், பேச்சு) உச்சரிப்புத் தெளிவு, ஒழுங்கு இவற்றின் அடிப்படையில் ஆசிரியைப் பின்னூட்டம் அளிக்க வேண்டும்.

- **பதிவு செய்தல்/ தயாரித்தல்**

செயல்பாடுகளைச் செய்தபோது தேவையானவற்றைப் பதிவுசெய்தார்களா? பிறர் புரிந்துகொள்ளும் வகையில் அவை அமைந்துள்ளதா? பதிவுசெய்தவை ஒழுங்காகவும் முறையாகவும் செய்யப்பட்டுள்ளதா? வகுப்பில் கலந்துரையாடிய பிறகு மேம்படுத்தப்பட்டுள்ளதா? பிழையின்றி படைப்புகளை வெளியிட முடிந்ததா? ஆகியவற்றையும் ஆசிரியை மதிப்பிட வேண்டும்.

ஆசிரியர் கையேடு வகுப்பு - 4

படைப்பாக்கத் திறனை கவனமாக அளவிட வேண்டும். குழந்தைகளின் கற்பனையானது பல வகைமைகளையுடையதும் விசித்திரமானவைகளுமாகவே இருக்கும். அதிக ஈடுபாட்டுடன் குழந்தையை அணுகும் போது மட்டுமே அவர்களது விளக்கம், சிந்தனை ஆகியவை நமக்குக் கிடைக்கப்பெறும். படங்கள் போன்றவற்றையும் வரையும் வேளையில் அவை முழுமைபெற வேண்டும் எனக் கட்டாயப்படுத்த வேண்டியதில்லை. குழந்தையின் விளக்கங்களைக் கேட்டு ஊக்குவிப்பதே நல்லது. அதிகமாக எழுதப்பட்ட படைப்புகளில் கற்பனை இல்லாமல் இருக்கலாம், ஆனால் சில வேளைகளில் இரண்டு வரிகள் மட்டுமே எழுதப்பட்ட ஒரு படைப்பில் ஒரு திறனாளியின் பிரதிபலிப்பைக் காணமுடியும். இதனை மனதில் கொண்டு மட்டுமே படைப்புச் செயல்பாடுகளை மதிப்பிட வேண்டும்.

- **அலகு மதிப்பீடு**

ஒரு அலகில் வெவ்வேறு கற்றல் அடைவுகளைக் கொண்ட செயல்பாடுகள் ஒன்றுக்கொன்று தொடர்புடையவையாக கொடுக்கப்பட்டுள்ளன. ஒரு அலகில் குழந்தையின் கற்றலை மதிப்பிடுதன் வாயிலாக இந்த ஒருங்கிணைந்த அறிவினை ( எல்லா கற்றல் அடைவுகளையும் உட்படுத்தி) மதிப்பிட வேண்டும். வாய்மொழி மதிப்பீடு, வினாடி வினா, திறந்த புத்தக மதிப்பீடு, வினாக்கள் தயாரித்தல், விடைக்குறிப்புகள் கண்டுபிடித்தல், புதிய படைப்புகளை மதிப்பிடுதல் ஆகியவை அலகு மதிப்

பீட்டிற்கு உட்படுத்தலாம். குறிப்பிட்ட அலகிலுள்ள கற்றல் அடைவுகளை அடைந்துள்ளார்களா என்பதை மதிப்பிடுவதற்குத் தர அளவுகோல் குறிப்பிடு பட்டியல் ஆகியவற்றைப் பயன்படுத்த லாம். அலகு மதிப்பீடானது கற்றல் செயல்பாட்டுடன் இயல்பாகவே நடைபெற வேண்டும்.

### வினாக்கள் தயாரித்தல் வழிமுறைகள்

- ஒவ்வொரு பாடப்பகுதியோடு தொடர்புடைய குறிப்பிட்ட கற்றல் அடைவுகளை எந்த அளவு அடைய முடிந்தது என்பதை மதிப்பிடுவதற்கான வினாக்களை உட்படுத்த வேண்டும்.
- பாடப்புத்தகத்திலுள்ள அறிவு, அனுபவம் ஆகியவற்றுடன் தொடர்புடைய வினாக்களைத் தயாரிக்க வேண்டும்.
- மொழிக்கூறுகள், மொழித்திறன்கள், வெளியீட்டு வடிவங்கள், உள்ளடக்கம் வேறுபட்ட படைப் புகள் ஆகியவற்றிற்கு முக்கியத்துவம் அளிக்க வேண்டும்.

  வினாத்தாள் தயாரிப்பதற்கு முன்னரே வினா வடிவமைப்பினைத் தயாரிக்க வேண்டும். இவற்றில்

  1. கற்றல் அடைவிற்கான மதிப்பெண்
  2. உள்ளடக்கத்திற்கான மதிப்பெண்
  3. வினா வகைகளுக்கான மதிப்பெண்
  4. பல்வேறு சிந்தனைத் திறன்களுக்கான மதிப்பெண் என்பதைத் தெளிவுபடுத்த வேண்டும்.

- வினாத்தாளில் பல்விடை வினாக்களும் விளக்க வினாக்களும் அமைதல் வேண்டும். ஒரு புள் ளியை உடைய இரண்டு பல்விடை வினா வகைகளும், மூன்று புள்ளிகளை உடைய விளக்க மாக விடை எழுத வேண்டிய வினாக்களும் அடங்கியவை இப்போது வழங்கப்பட்டு வருகின்றன.
- பல்வேறு சிந்தனை திறன்களை கடைபிடிக்கும் வேளையில் கருத்து உட்கொள்ளும் சிந்த னைத் திறனுக்கு 60% மும் கருத்துப் பயன்பாடு தொடர்பான சிந்தனைத் திறன்களுக்கு 40% என்ற அடைப்படையில் மதிப்பெண் வழங்கப்பட வேண்டும்.
- **பல்விடை வினாக்களுக்கு 15– 20% மதிப்பெண்கள் வழங்கலாம்.**
- எல்லா தரத்திலும் உள்ள குழந்தைகளின் வெவ்வேறு தலங்களில் நிலைபெறும் கற்றல் அடை வுகளை அறிந்துகொள்வதற்கு தரநிர்ணயக் குறிப்புகளைக் கீழே குறிப்பிட்டுள்ள முறையில் பயன்படுத்தலாம். அதற்காக ஒவ்வொரு வினாவையும் a/b/c/d/e என்ற குறிப்புகளின் அடிப்ப டையில் தர நிர்ணயக் குறிப்புகளைப் பதிவு செய்யலாம்.

| குறிப்புகள் | தரநிர்ணய நிலை | புள்ளிகள் |
|---|---|---|
| a | உயர்நிலை | 5 புள்ளிகள் |
| b | சிறந்த நிலை | 4 புள்ளிகள் |
| c | சராசரிக்கு மேல் | 3 புள்ளிகள் |
| d | சராசரி | 2 புள்ளிகள் |
| e | சராசரிக்கு கீழே | 1 புள்ளி |

- தரநிர்ணயக் குறிப்புகளின் அடிப்படையில் ஒவ்வொரு கிளஸ்டர் வினாவிற்கும் 5/4/3/2/1 என்ற முறையில் புள்ளிகளைக் கணக்கிட்டு a/b/c/d/e என்னும் குறிப்புகளை அளித்து எல்லா வினாக்

களுக்கும் கிடைக்கும் மொத்த புள்ளிகளைக் கீழே தரப்பட்டிருக்கும் 5 புள்ளி சதவீதம் அட்டவணையைப் பயன்படுத்தி ஒவ்வொரு பாடத்திற்கும் கிடைத்த TE யை ஒட்டு மொத்தத் தர நிர்ணயத்திற்குக் கணக்கிடலாம்.

| தரநிர்ணயக் புள்ளிகள் | தரம் |
|---|---|
| 75 - 100 | A |
| 60 - 74 | B |
| 45 - 59 | C |
| 33 - 44 | D |
| 33 - க்குக் கீழ் | E |

**1. அலகுகள், கற்றல் அடைவுகள் ஆகியவற்றின் மதிப்பெண்கள்**

| அலகுகள் | கற்றல் அடைவுகள் (எண்) | தரநிர்ணயப் புள்ளிகள் | தரநிர்ணயப் புள்ளிகள் (%) |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

2. சிந்தனைத் திறனுக்கான மதிப்பெண்கள்

| சிந்தனைத் திறன்கள் | தரநிர்ணயக் புள்ளிகள் | தரநிர்ணயப் புள்ளிகள் |
|---|---|---|
| கருத்து- அறிவுபெறுதல்- உட்கொள்ளுதல் ஆகியவற்றிற்குத் தேவையான சிந்தனைத் திறன்கள் | | |
| கருத்துப் பயன்பாட்டிற்குத் தேவையான சிந்தனைத் திறன்கள் | | |

3. பல்வேறு வினா மாதிரிகளுக்கான மதிப்பெண்

| பல்வேறு வினா மாதிரிகள் | தரநிர்ணயப் புள்ளி | தரநிர்ணயப் புள்ளி % |
|---|---|---|
| பல்விடை வினா | | 15- 20 |
| விளக்க வினா | | 80 –85 |

## 2.10 பிரதிபலிப்புச் சிந்தனைக் குறிப்புகள்

கற்றல் அடைவுகளை எல்லா குழந்தைகளிடமும் கிடைக்கச் செய்தல் என்னும் நோக்கத்துடன் செயல்பாடுகள் அளிக்கும் வேளையில் ஆசிரியர் சிலவற்றைக் கருத்தில் கொள்ள வேண்டும். ஒவ் வொரு கற்றல் அடைவிற்கும் அது நோக்கமாகக் கொள்ளும் தரநிர்ணயக் குறிப்புகளைப் பகுப் பாய்வு செய்ய வேண்டும். கருத்துகளின் அடிப்படையிலான தரநிர்ணயக் குறிப்புகள் ஆகியவற் றைப் புரிந்து கொண்டு பதிவு செய்ய வேண்டும். இதன் அடிப்படையிலேயே மதிப்பீடு செய்ய வேண்டும், குழந்தைகளின் வெளியீடுகளைக் குறித்து ஆசிரியைக்கு வேறுபட்ட அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ள வேண்டியதாக இருக்கும். அது சில வேளைகளில் செயல்பாடுகளில் ஈடுபட்ட குழந்தைகளின் திறமைகளின் குறிப்புகளாகலாம். அல்லது தான் அளித்த செயல்பாட்டின் நிறை களோ குறைகளோ ஆகலாம். பிற ஆசிரியைகளுக்கு முன்பாக எஸ் ஆர் ஜி யில் தனது அனுபவ மென்னும் நிலையில் வெளியிடும் போது சிறந்ததாக அமைந்தால் அதனை எல்லோரும் பயன்ப டுத்தலாம். குறையுடையவையாக இருந்தால் பிற ஆசிரியைகளின் உதவியுடன் புதிய செயல்பாட்டு முறையினை உருவாக்கலாம்.

## 2.11 பள்ளி அனுபவ நிகழ்வின் ஆயத்தம்

- பகுப்பாய்வு மதிப்பீடு
- நிபுணர்களின் வகுப்பு
- ஆசிரியர் பயிற்றாளரின் வகுப்பு
- சக மாணவரின் வகுப்பு

பள்ளி அனுபவ நிகழ்ச்சிக்கு ஆயத்தமாகும் வேளையில் ஆசிரியர் பயிற்றாளர், நிபுணர், சக மாண வர் என்றிவ்வாறு மூன்று பகுப்பாய்வு வகுப்பினை ஒவ்வொரு மாணவரும் பார்ப்பதுடன் வகுப்பு பகுப்பாய்வு வரைவினைப் பயன்படுத்தி மதிப்பிடவும் வேண்டும். ஒவ்வொரு நிலையிலும் ஆசி ரியை பகுப்பாய்வு செய்து மேலும் மேம்படுத்துவதற்கான செய்முறை அறிவுரைகளை நடைமு றைப்படுத்துவதற்கு இந்தச் செயல்பாடு உதவும்.

இந்த வகுப்புகளின் டி.எம் ஆசிரிய மாணவர் தயாரிக்க வேண்டும். ஆசியரியப் பயிற்றாளர், நிபுண ரின் வகுப்பு ஆகியவற்றைப் பகுப்பாய்வு செய்ததன் அடிப்படையில் முன்னரே தயாரித்த கற்பித் தல் முறையிலான பகுப்பாய்வு, அலகுத் திட்டமிடலின் மாதிரி இவற்றைக் கருத்தில் கொண்டு ஒவ் வொரு ஆசிரிய மாணவரும் பாடத்திட்டமிடல் நடத்தி ஆய்வுக்கூடப் பள்ளியில் வகுப்புகளை நடத்த வேண்டும். சகமாணவர்கள் வகுப்புப் பகுப்பாய்வு வரைவினைப் பயன்படுத்தி இவற்றை மதிப்பிட்டு நிறை குறைகளை எடுத்துரைப்பதுடன் மாற்று அறிவுரைகளையும் வழங்க வேண்டும்.

? பள்ளியில் ஆசிரிய மாணவர்கள் என்னென்ன செயல்பாடுகளை நடத்த வேண்டும். இச்செயல்பாடுகளை நடத்துவதற்கான ஆயத்தங்கள் எவை?

## 2. 12 மொழி வகுப்பிற்கான கற்றல் கருவிகள் (TLM)

முன்னரே தீர்மானித்த பாடபுத்தகங்களுக்குப் பதிலாக பல்வேறு உயிரூட்டமான பாடப்பகுதிகளுக்கு மொழியின் ஒருங்கிணைந்த பார்வையில் முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. வெளியீட்டு வடிவங் களாகவே மொழி நிலைகொள்கிறது எனும் கருத்தினை அது முன்வைக்கிறது. மாணவரும் கற்றல் கருவிகளுக்கும் இடையே உள்ள பழக்கம் வழியாக மாணவருக்குப் புதிய அறிவினை உருவாக்கி எடுக்க இயலும். அறிவிப்பு, சுவரொட்டி, புத்தகங்கள், படங்கள், பல்வேறு இதழ்கள், தினசரிகள் ஆகியவை மொழி வகுப்பின் கற்றல் கருவியாக மாறும்.

## 2.13 ஐசிடி வாய்ப்பினைப் பயன்படுத்துதல்

சர்வதேச அளவிலான பொதுப் பள்ளிக்கூடங்களையே நாம் நோக்கமாகக் கொள்கிறோம். தொழில் நுட்பத்தின் வாய்ப்புகளைப் பெருமளவில் பயன்படுத்தினால் மட்டுமே நோக்கினை அடைய இயலும். அதற்கேற்பப் பள்ளிக்கூடங்களில் முழுவதுமாக உயர் தொழில்நுட்பத்திற்குட்பட்ட கருவிகள் நிறுவப்பட்டுள்ளன. ஆரம்ப வகுப்புகளிலும் இதுபோன்ற கருவிகள் வந்துவிட்டன. எனவே கீழே கூறப்படும் செயல்பாடுகளை நிபுணர்களின் உதவியுடன் சுயமாகச் செய்து பயிற்சி பெற வேண்டும்.

- சமக்கிரா போர்ட்டலின் வழியாக ஆசிரியர் குறிப்பேட்டினைப் பரிசோதிக்கவும், வளங்களைக் கண்டுபிடிப்பதற்குமான பயிற்சிபெற வேண்டும்.
- வெளியிடுவதற்கான செயல்பாடுகளைத் தயாரிக்கவும்.
- கற்றலுக்குத் துணை செய்யும் காணொளிகளைப் பதிவிறக்கம் செய்து மேம்படுத்துவதற்குப் பயிற்சி பெறுதல் வேண்டும்.

## 2. 14 தினவிழாக்களும் மொழியை உட்கொள்ளலும்

தினவிழாக்கள் தொடர்பாக மொழியை வளரச்செய்வதற்கான பல்வேறு செயல்பாடுகள் பள்ளிக்கூடங்களில் நடைபெற்று வருகின்றன. எல்லா தின விழாக்களையும் மொழிச் செயல்பாடுகளாக மாற்றலாம். பலவகையான செயல்பாடுகளை அளிக்க வேண்டும். தினவிழா கொண்டாட்டத்தின் நிகழ்ச்சிகளைப் பரிசோதிக்கலாம்.

### ஜூன் 19 வாசிப்பு நாள்

வாசிப்பு வாரம் வாசிப்புப் பண்பாடு ஆகியவற்றை வளரச் செய்வதற்கு வருடத்தின் முதல் நிகழ்வாகக் காண வேண்டும்.

எல்லா மாணவர்களையும் சிறந்த வாசகர்களாக மாற்ற வேண்டுமென்பதே நோக்கம். சில செயல்பாட்டு வாய்ப்புகள் கீழே தரப்பட்டுள்ளன.

இவைமட்டுமன்றி வேறு பல செயல்பாடுகளும் ஆகலாம். ஒவ்வொரு வகுப்பிற்கும் செயல்பாட்டுத் திட்டம் வேண்டும்.

தொடக்க, நடுநிலை வகுப்புகளின் தரத்தினை மனதில் கொண்டு பொருத்தமான செயல்பாடுகளைப் பயன்படுத்த வேண்டும்.

### நோக்கங்கள்

- பள்ளியுடன் தொடர்புடையவர்களிடம் வாசிப்புப் பழக்கத்தை வளரச் செய்ய வேண்டும்.
- வகுப்பு வாசிப்புக் குழு, தாய்மார்களின் வாசிப்பு மன்றம் ஆகியவை உருவாக்குதல்.
- வாசிப்பின் பல்வேறு நிலைகளை அறிந்து கொள்ளுதல்.
- வாசிப்பு அனுபவங்களைப் பகிர்ந்து கொள்வதற்குப் பல்வேறு உத்திகளை உருவாக்குதல்.
- ரசிக்கும் முறையிலான வாசிப்பில் திறன் பெற வேண்டும்.
- தமிழ்மொழியிலுள்ள பல்வேறு இலக்கியத் துறைகளை அறிமுகமாதல்.
- தினவிழாக்கள் தொடர்பாக வாசிப்பிற்கான வாய்ப்பினைக் கண்டுபிடிக்கவும்.
- தொடக்கநிலையில் மாணவர்களுக்குத் தேவையான வாசிப்பு நூல்களைக் கண்டுபிடிக்கவும்.
- வாசிப்பு நூல்களை பிரபலமாக்கவும்
- வகுப்பு நூலகத்தின் பயன்பாட்டைப் பரிசோதிக்கவும்.

## செயல்பாடுகள் (முதல் பதிவு)

- **வகுப்புப் பிரதிநிதிகளின் கூட்டம்**

ஒரு வகுப்பிலிருந்து இரண்டு பிரதிநிதிகள் ( ஆண், பெண்)

கூட்டத்திலிருந்து வாசிப்பு தினவிழாவின் செயல்பாடுகளை விவாதித்து விளக்கங்களைத் தீர்மானிக்க வண்டும், வாசிப்பினைக் கண்காணிக்கும் குழுவாகவும் இவர்கள் செயல்படுவர்.

- **வகுப்பு வாசிப்புக் குழுக்களை உருவாக்குதல்**

ஐந்து பேர் அடங்கிய குழு. ஒரு வாரத்தில் எத்தனை புத்தகங்களை வாசிக்க இயலும்.?

வாசிப்புக் குறிப்பினை எவ்வாறு தயாரிக்கலாம் போன்றவற்றைக் கலந்துரையாடுகிறார்கள்.

ஒரு மாதத்தின் நோக்கங்களைத் தீர்மானிக்கிறார்கள். வாசிப்பு அனுபவங்களை ஒவ்வொரு குழுவிலுமுள்ள பிரதிநிதி பொதுவாகப் பகிர்ந்து கொள்கிறார். எதிர் கருத்துகள் ஊக்குவிப்பு. இது புத்தக அறிமுகமாகும்.

- **வாசிப்பு விழாவின் துவக்க விழா**

துவக்க விழாவின் கூட்டத்தில் பங்குபெற்ற எல்லோரும் ஒரு புதிய புத்தகத்தை வாசித்த அனுபவத்தைப் பகிர்ந்து கொள்ள வேண்டும். வாசிப்புக் குறிப்பின் வெளியீடு.

ஆசிரியரின் புத்தகத்தை அறிமுகம் செய்தல். வாசிப்பு வாரச் செய்திகள். வாசிப்பு விழாவின் செயல்பாட்டுத் திட்டங்களை வெளியிடுதல்.

தாய்மார்களுக்குப் புத்தகத்தினை அளித்து தாய் வாசிப்பு மன்றம் உருவாக்குதல்.

வாசித்த புத்தகங்களின் வெளியீடு போன்ற பல்வேறு நிகழ்ச்சிகளை ஆலோசிக்கலாம்.

- **புத்தகக் கலந்துரையாடல்**

மாதத்தில் ஒன்று வீதம் மாதத்தின் கடைசி வாரத் திங்கட்கிழமை

எல்லோருக்கும் வாய்ப்பு கிடைக்க வேண்டும். வாசித்த புத்தகத்தை விரும்புவதற்கான காரணம் அதன் செய்தி, கதை மாந்தர் விமர்சனம், முக்கிய கருத்துகள், அது எவ்வாறு தாக்கம் செலுத்தியது போன்றவற்றை வெளியிடலாம். குறிப்பிட்ட புத்தகத்தை அந்த மாதத்தில் வாசித்த எல்லோரும் கலந்துரையாடலை நடத்த வேண்டும், ஆசிரியையும் அந்தப் புத்தகத்தை வாசித்திருக்க வேண்டும்.

கலந்துரையாடலில் பங்கு பெற்று மாணவர்கள் கண்டுபிடிக்காத ஏதேனும் சூழல்கள் இருந்தால் அதனைச் சுட்டிக்காட்ட வேண்டும்.

- **தினசரி வெளியீடுகளும் வாசிப்பும்**

தினசரி வெளியாகின்ற படைப்புகளை மதிப்பிட வேண்டும். எதிர் கருத்துகளை அறிக்கைப் பலகையில் வெளியிட வேண்டும். வாசிப்பு வாரச் செயல்பாடு தொடரவேண்டும்.

- **வாசிப்பும் வெளியீடும்**

வாசித்த நூல்களின் அடிப்படையில், நாடகம், கதைப்பிரசங்கம், பிற அரங்க வெளியீடுகள், காட்சிகள், இன்லான்ட் மாகசீன், இதழ்கள் போன்றவை

- **படைப்பாளர்களை அறிமுகம் செய்தல்**

காலைக்கூட்டத்தில் ஒரு நிகழ்வு, படைப்புகள், நன்கொடைகள், தனித்தன்மைகள் ஆகியவற்றை அறிந்து கொள்ள வேண்டும். படைப்பாளரின் புகைப்படம் காட்சிப்படுத்த வேண்டும். இந்தப் புகைப் படத்தினை பிறகு படக் கலைக் காட்சிக் கூடத்தில் வைக்கலாம். எல்லோரது பங்களிப்பு, அறிமுகம் செய்ய வேண்டிய குறிப்புகள் இவற்றைத் தொகுத்துச் சிறு புத்தகம் தயாரிக்க வேண்டும். (எங்க ளுக்கு விருப்பமான படைப்பாளர்கள்) வெளியிடுபவர் படைப்பாளரின் ஒரு புத்தகமாவது வாசித்தி ருக்க வேண்டும். படைப்பை வெளியிடுதல். படைப்பாளர்களின் பிறப்பு, இறப்பு நாள் கொண்டாட் டங்கள் தொடர்பாக ( ஒவ்வொரு மாதம் ) ஜூலை, ஆகஸ்ட்.....)

- **இலக்கியப் பண்பாட்டுக் கலைக்காட்சிக் கூடம் தயாரித்தல்**

- **இரசிக்கும் வகையிலான வாசிப்பு**

சுயமாக பயிற்சிபெறுதல், வெளியீடு, ஒருவருக்கொருவர் மதிப்பிடுதல், செப்டம்பர் மாதம்

- **வாசிப்புப் புத்தகங்களைப் பரவலாக்கும்**

ஒன்று, இரண்டு வகுப்புகளுக்கான வாசிப்பு நூல்களைச் சேகரித்தல்.

குழந்தைகள், பெற்றோர், வட்டாரப் படைப்பாளர்கள், ஆசிரியர்கள் இவர்களுடன் ஈடுபாடுடைய படைப்பு பணிமனை ஒருங்கமைத்தல், படைப்புகளைச் சுழல் பிணைப்பு செய்து குழந்தைகளின் வாசிப்புப் புத்தகமாகப் பயன்படுத்துதல்.

- **வாசிப்பின் முன்னேற்றத்தை மதிப்பிடுதல்.**

வெளியீட்டு பலகை, ஒருவருக்கொருவர் மதிப்பிடுதல், வாசிப்பு வினாப் போர், வாசிப்புக் குறிப்பு, இரசனைக் குறிப்பு இவற்றின் தரத்தினை உயரச் செய்வதற்கான நிகழ்ச்சிகள் வாசிப்பின் தலங் களை அறிந்து கொள்ளுதல்.

விமர்சன பூர்வமான வாசிப்பினை அறிமுகப்படுத்திய பின்பு குறிப்புகளின் தரம்

வாசிப்புப் பின்னூட்டம் அளித்தல்

- **பிற தினவிழாக்களும் வாசிப்பும்**

தினவிழாக்கள் தொடர்பான வாசிப்பினை ஊக்குவிப்பதற்கான உத்திகள் (வினாப் போர், குறிப்பு, வெளியீடுகள்)

- **பத்திரிகை வாசிப்பு**

**நோக்கம்:** ஒவ்வொரு நாளும் பள்ளிகளில் வெவ்வேறு முறையில் பத்திரிகையை வாசிக்கும் முறைகளை நடைமுறைப்படுத்துதல், ஊடகப் பகுப்பாய்வு, செய்திகளுக்கு எதிர் கருத்து தெரிவித் தல் ஆகியவற்றிற்கான வாய்ப்புகளை உருவாக்க வேண்டும். சிறப்பியல்புகள், பல்வகைமை, முக் கியத்துவம், வெளியிடும் முறை, கருத்துப் பரிமாற்றத் திறன் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு பத்திரிகை வாசித்தலை மதிப்பிட்டு ஊக்குவிக்க வேண்டும். காலைக் கூட்டத்தில் பத்திரிக்கை வினாப் போர் நடத்தலாம்.

வாரத்திற்கு ஒரு முறை வகுப்பில் பத்திரிகை வெளியிட வேண்டும்.

- **வகுப்பு நூலகத்தின் வடிவமைப்பு**

பலவகையிலான முறைகளைப் பரிசோதித்தல் மாதிரிகளைப் பரவலாக்குதல், திறந்த நூலகம்.

- **நூலகத்தைத் தீவிரமாகச் செயல்படுத்துதல்**

புத்தகம் வழங்கும் பதிவேடு, குழந்தை நூலகர்கள், வகுப்பு அளவிலான வாசிப்பு முன்னேற்றத் தைக் கண்காணித்தல், புத்தக வெளியீடு, நூற்பட்டியல் உருவாக்கம், நூல்களைத் தரம், பொருள் அடிப்படையில் வகைப்படுத்துதல்.

- **மின்– வாசிப்பின் வாய்ப்புகளைக் கண்டுபிடித்தல்**

விக்கிப்பீடியா, விக்கி நூலகம் அறிமுகமாதல், இணையத்திலிருந்து தகவல்களை சேகரிக்கும் திறனை வளரச்செய்தல், வாசிப்புக் குழுவின் தலைமையில் வலைப்பூக்களைத் தொடங்குதல்.

மின் தாள்கள் அறிமுகமாதல்.

- **வாசிப்பில் பின்தங்கியவர்களை வாசிக்கச் செய்து மேம்படுத்துதல்**

சகவாசிப்பின் வாய்ப்பினைப் பயன்படுத்துதல்.

- **தாய்மார்களின் வாசிப்பு மன்றம் உருவாக்குதல்**

வகுப்புப் பெற்றோர் ஆசிரியர் கூட்டத்தில் தீர்மானம் எடுக்க வேண்டும. வாசிப்பின் அனுபவங்க ளைப் பகிர்ந்துகொள்ளும் வாய்பளிக்க வேண்டும். மாதம் ஒரு முறை காலைக்கூட்டத்தில் அவர்க ளில் ஒருவர் புத்தகம் அறிமுகம் செய்ய வேண்டும்.

- **வாசிப்புக் குறிப்புகளின் இதழ்**

வாசிப்பு வாரத்தின் செயல்பாடு சிறந்த குறிப்புகளுக்குப் பரிசளித்தல்.

ஜூன் 19 ற்கு வாசிப்பு நாளில் தொடங்கி ஒரு வருட காலம் தொடர்ந்து நடைபெறும் வாசிப்பினை வளப்படுத்தும் நிகழ்ச்சிகளின் குறிப்புகளே மேலே தரப்பட்டுள்ளன. பள்ளி அக்காடமிக் மாஸ்டர் பிளானில் உட்படுத்த வேண்டிய செயல்பாட்டுக் குறிப்புகளே இவை. வாசிப்பு முக்கியமாக நடைமு றைப்படுத்த வேண்டிய செயல்பாடாகும். இவற்றுள் பள்ளிகளுக்குப் பொருத்தமான மாற்றங்கள் செய்யலாம்.

- பல்வேறு குழுவில் ஜூலை மாதம் முதல் பிப்ரவரி வரை மொழி தொடர்பாக ஒரு நாளைக் கண்டுபிடித்து அதனைப் பள்ளியில் எவ்வாறு நடைமுறைப்படுத்தலாம் என ஒரு செயல்பாட்டு மாதிரி பதிவு தயாரிக்கவும்.

## 2.15 பள்ளி அனுபவ நிகழ்வின் உதவி அமைப்புகள்

### நெறியாளர் ஆசிரியர்

ஆசிரிய மாணவர்களை நெறிப்படுத்தும் முறையில் பள்ளி உள்ளிடைப் பயிற்சி நடைபெறுகிறது. ஒரு நபரின் திறன்கள் வாய்ப்புகள் குறைகள் ஆகியவற்றைப் புரிந்துகொண்டு அவர்களுக்குப் பெற்றோரைப் போன்று உதவி அளித்தும், திருத்தம் செய்தும் மேம்படுத்தியும் வளரச் செய்வதே நெறிப்படுத்துதல். அனுபவங்கள் உடைய ஆசிரியரின் உதவி அறிவுரை மேற்பார்வை ஆகியவற் றின் வழியாக ஆசிரிய மாணவர்கள் அனுபவங்களை இங்கிருந்து பெற்றுக்கொள்கிறார்கள்.

ஆசிரியர் கையேடு, பாடப்புத்தகம், பணித்திட்டம் ஆகியவற்றைப் பரிசோதிப்பதுடன் ஒவ்வொரு மாதத்திற்குரிய அலகுகளும் அவற்றின் ஒருங்கிணைந்த திட்டத்தையும் பரிசோதிக்க வேண்டும். முன்னரே அளித்த மாதிரியைப் போன்று கற்பித்தல் குறிப்பேட்டையும் உருவாக்கவும்.

## 2. 16 பள்ளி அனுபவ நிகழ்ச்சிகளின் மதிப்பீடு

பள்ளி அனுபவ நிகழ்ச்சிகளின் பகுதியாக ஆசிரிய மாணவர்களின் மனப்பாங்குகள், கருத்துகள், ஆசிரியத் திறன்கள் ஆகியவற்றை மதிப்பிட வேண்டும். நெறிப்படுத்துகின்ற ஆசிரியர், தலைமை ஆசிரியர், ஆசிரியப் பயிற்றாளர் ஆகியோரின் குழுவே இதனை மதிப்பிடுவர். பள்ளியில் நடத் தப்படும் வகுப்பு உற்றுநோக்கல் நெறியாளருடன் இணைந்து நடத்தப்படும் செயல்பாடுகள், வகுப் புத் திட்டமிடல் மாணவர்களுடனான ஈடுபாடு, பள்ளிச்செயல்பாடுகளில் ஈடுபடுதல் போன்று எல்லா பகுதிகளையும் உட்படுத்தி மதிப்பீடு நடைபெறும். ஒவ்வொரு வாரத்திலும் ஆசிரியர் பயிற்சி நிறு வனத்தில் கருத்தரங்க வடிவத்தில் ஒவ்வொரு நிறுவன பள்ளி அனுபவ நிகழ்வுகளை மதிப்பிட வேண்டும்.

## பிரதிபலிப்புகள் - புரிதல்கள்

இந்த அலகுவாயிலாகக் கடந்து சென்றபோது உங்களுக்குக் கிடைத்த கருத்துகள் எவை? கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்கான விடைகளைப் பாருங்கள்.

1. ஒரு மொழி ஆசிரியருக்கு /ஆசிரியைக்கு அமைந்திருக்க வேண்டிய திறன்கள் எவை?
2. மொழித் திறன்களின் வளர்ச்சிக்குத் துணைபுரியும் வகையில் தற்போது பள்ளிக்கூடங்களில் நடைபெறுகின்ற முக்கியமான செயல்பாடுகள் எவை?
3. பள்ளிக்கூடங்களில் நடைபெறும் திறன் சோதனைச் செயல்பாடுகளில் (ஓவியம் தீட்டுதல் முகாம், நடித்தல், மேடை, உருவாக்குதல் போன்றவை.) உங்களுக்கு எந்தெந்தச் செயல்பாடுகளின் திறனாளியாகத் தலைமை தாங்க இயலும்.
4. கருத்துகளைப் புரிந்து வாசித்தல், ஆழமான வாசிப்பு போன்றவற்றை ஊக்குவிக்க ஏதேனும் இரண்டு செயல்பாடுகளைக் கூறவும்.
5. தினக் கொண்டாட்டங்கள் மொழிச் செயல்பாடுகளாகும். ஏதேனும் ஒரு தினக் கொண்டாட்டம் தொடர்பாக வகுப்பில் அளிக்க வேண்டிய செயல்பாடுகளின் பட்டியல் தயாரிக்கவும்.
6. மொழி வகுப்பில் பயன்படுத்த இயலுகின்ற ஏதேனும் கற்றல் கருவிகளைப் பரிந்துரைக்கவும் (மூன்று, நான்கு வகுப்புகளில் கேரளப் பாடநூலிலிருந்து பொருத்தமான ஏதேனும் அலகிற்கு)

## இந்த அலகிலிருந்து எனக்குக் கிடைத்த கருத்துகளும் புரிதல்களும்

## சுய மதிப்பீட்டுக் குறிப்பு

| எண் | குறிப்புகள்/கூற்றுகள் | முழுமையாக | பகுதியாக | மேலும் தெளிவு படுத்த வேண்டியவை |
|---|---|---|---|---|
| 1. | மொழி ஆசிரியருக்குள்ள திறன்களுக்கு ஏற்ப சுயமாக நவீனப்படுத்துவதற்கான அறிவினை நான் பெற்றுள்ளேன். | | | |
| 2. | எனது பள்ளி அனுபவ நிகழ்வின் போது ஒவ்வொருநாளும் பள்ளியில் நடைபெற்ற எல்லாச் செயல்பாடுகளிலும் ஈடுபடுவதற்கான அறிவு எனக்குக் கிடைத்துள்ளது. | | | |
| 3. | தர மேம்பாட்டிற்காக இன்று பள்ளிக் கூடத்தில் நடைபெறும் பல்வேறு நிகழ்ச்சிகளின் தொடர்ச்சி வளர்ச்சி ஆகியவை எனது பாடத்திட்டமிடலில் பிரதிபலிக்கும். | | | |
| 4. | அலகுகளைக் கற்பித்தல் அணுகுமுறையுடன் அலசி ஆராயும் திறன் எனக்கு உண்டு. | | | |
| 5. | பாடப் பரிமாற்றத்திற்குப் பொருத்தமான கற்றல் உத்திகளைப் பெற்றுக் கொள்ளவும் அதற்குத் தேவையான கற்றல் கருவிகளை உருவாக்கவும் இயலும். | | | |
| 6. | தகுதி வரைவு உட்பட்ட மதிப்பீட்டு வரைவு, மதிப்பீட்டு முறை ஆகியவற்றை நான் அறிந்து கொண்டுள்ளேன். | | | |

மேலே அளிக்கப்பட்ட குறிப்புகளுக்கு ஏற்ப உங்களது கருத்துகளைத் தரவரிசைப் படுத்தவும். பெரும்பான்மையோர் மேலும் தெளிவுப்படுத்த வேண்டும் என்ற குறிப்பினை எழுதுவதாக இருந்தால் அந்தப்பகுதியினை மேலும் கலந்துரையாடலுக்கு உட்படுத்தவும்.

## அலகு 3

# மொழியும் தொழில்நுட்பமும்

### முன்னுரை

தகவல் தொழில் நுட்பம் நாள்தோறும் வளர்ச்சி பெற்று ஆற்றலடைந்து வருகிறது. மொழி வளர்ச்சியிலும் இத்தகைய தொழில்நுட்பத்தின் தாக்கத்தைக் காணமுடியும். மொழிக்கற்றலை மிகச்சிறப்பாகவும் திறன்படவும் செயல்படுத்த அறிவியல் தொழில் நுட்பம் இன்றியமையாததாகிவிட்டது. வகுப்பறைகள் ஹைடெக் வகுப்பறைகளாக மாறிக் கொண்டிருக்கின்றன. அதற்கேற்ப கற்றல் முறையும் ஹைடெக் ஆகவேண்டும். அதற்குத் தேவையான தொழில்நுட்பத்தை அடைவதும் நடைமுறைப் படுத்துவதும் மாணவர்களிடையே கொண்டு செல்ல வேண்டியதும் ஆசிரியர்களின் கடமையாகும். ஹைடெக் வகுப்புகளை நடத்துவதற்கும் அதன் வழியாகப் பாடத்திட்டப் பரிமாற்றத்திற்குத் தேவையான மின் செய்திகள் கண்டடைவதற்கும் பங்கீடு செய்வதற்கும் தம்மை ஆயத்தப்படுத்திக் கொள்ள வேண்டும். நவீன ஊடக வாய்ப்புகளைப் பாடத்திட்டப் பரிமாற்றத்திற்கு உகந்த நிலையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். தகவல் தொழில் நுட்ப வசதிகளையும் நவீன ஊடக வாய்ப்புகளையும் மொழிகற்பித்தலில் பயன்படுத்த வேண்டும் என்ற நோக்கத்தில் மொழியும் தொழில்நுட்பமும் என்னும் இவ்வலகு வடிவமைக்கப்பட்டுள்ளது.

காலந்தோறும் மொழி கடந்த வந்த பாதையையும் நாம் அறிந்துகொள்ள வேண்டும். எழுத்துகளின் தேவை, முக்கியத்துவம், எழுத்துச் சீர்திருத்தத்திற்கான தேவை, எழுத்துகளை எழுதும் முறை, கூட்டெழுத்துகள் உருவாகும் முறை இவை குறித்த அறிவும் நமக்குத் தேவை. புளோக் ( வலைப்பூக்கள்) உருவாக்கல் படக்காட்சிகள் தயாரித்தல் வடிவமைப்பு, வெளியீட்டில் கையாள வேண்டிய நுணுக்கம் போன்றவற்றிலும் அறிவும் திறனும் பெற்றிருக்க வேண்டும்.

டி எல் எட் முதல் பருவத்திலும் இரண்டாம் பருவத்திலும் தகவல் தொழில் நுட்பப் பகுதியில் (107, 207) படித்த பாடங்களை எவ்வாறு செயல்படுத்தலாம் என்பதை எடுத்துரைப்பதும் இவ்வலகின் நோக்கமாகும். 107, 207 தாள்களின் வாயிலாக அடைந்த தொழில் நுட்பங்களை மொழிக் கற்பித்தலில் எவ்வாறு பயன்படுத்தலாம் என்பதும் இவ்வலகின் நோக்கமாகும்.

### எழுத்து வளர்ச்சியின் வரலாறு

மொழி என்றால் மொழியப்படுவது. அதாவது பேசப்படுவதற்கு உரியதே மொழி. அம்மொழியை எழுதுவதற்கான முயற்சி ஏற்பட்ட போது எழுத்து மொழியும் நடைமுறைக்கு வந்தது. எழுத்து மொழிக்கு அடிப்படையாக இருந்தது. படங்களோ, படங்களிலிருந்து உருவான பட எழுத்தோ ஆகலாம். படம் பயன்பாட்டிற்கு உதவியபோது எழுத்து என அறியப்பட்டது. ஆரம்பகாலத்தில் பட எழுத்து, அந்தப் படம் காட்டும் பொருளையே குறிப்பிட்டது. பட எழுத்திலிருந்து இப்போதைய எழுத்திற்கான வளர்ச்சி படிநிலை வளர்ச்சியாக இருந்தது. வரைமொழி மனிதனின் அன்றாட வாழ்க்கையில் இன்றியமையாதது எனினும் மனித வரலாற்றின் பிந்திய காலகட்டத்தில்தான் எழுதும்திறன் அவனுக்கு கைவரப் பெற்றது.

ஆதிகாலத்தில் கருத்துப் பரிமாற்றத்திற்குப் படங்களையே மக்கள் பயன்படுத்தினர். சில படங்களையும் குறியீடுகளையும் பயன்படுத்தியே அவன் கருத்துகளையும் எண்ணங்களையும் பரிமாற்றம் செய்தான். மெல்ல மெல்ல பல்வேறு காலகட்டங்களைக் கடந்து இன்றைய நிலையை அடைந்தான். ஒவ்வொரு கூறையும் குறிப்பிட்ட குறியீடுகளால் எழுதும் திறன் பெற்றபின் வாய்மொழியும் வரை மொழியும் அறிவியல்பூர்வமாக இணைந்தது. ஒலிகள் குறியீடுகளாக மாறியபோது அக் குறியீடுகள் எழுத்துகளாக அங்கீகரிக்கப்பட்டன.

உலக எழுத்து வளர்ச்சியைக் கீழ்வருமாறு விளக்கலாம்




வட இந்தியாவிலும் தென்னிந்தியாவிலும் பின்னர் கேரளத்திலும் உண்டான எழுத்துகளைத் தெரிந் துகொள்வோம்.

**பிராமி:** ஹரப்பாவிலும் மோகஞ்சதாரோவிலும் உள்ள முத்திரைகளில் காணப்படும் சிந்து எழுத்து களே பழங்கால பிராமி எழுத்துகளாக உருப்பெற்றன. பிராமி எழுத்துகள் இடமிருந்து வலமாக எழு தப்படுகின்றன. இவ் எழுத்து முறை கி. மு நான்காம் நூற்றாண்டின் முற்பகுதியில் நடைமுறைக்கு வந்தது.

**தமிழ் பிராமி ( தென் பிராமி):** கி. மு இரண்டாம் நூற்றாண்டிற்கும் கி. பி ஐந்தாம் நூற்றாண்டிற் கும் இடையே தோன்றியது. பிராகிருதமும் தமிழும் கலந்தது இதன் மொழி.

**வட்டெழுத்து, கிரந்தம், தமிழ் :** தென்னிந்தியாவிலிருந்து கிடைக்கப்பெற்ற பழமையான சாசனங்களில் வட்டெழுத்து, கிரந்தம், தமிழ் என்னும் மூன்று வகையான எழுத்து முறைகள் காணப்படுகின்றன. வட்டெழுத்திற்குத் தென் மலையாளம் என்ற பெயரும் உண்டு. மிகவும் பழமையான வட்டெழுத்து சாசனம் கி. பி. எட்டாம் நூற்றாண்டின் முற்பகுதியில் தோன்றியிருக்கலாம் எனக் கருதப்படுகிறது.

வட்டெழுத்து மாதிரி



**வட்டெழுத்து**

**கோலெழுத்து :** வட்டெழுத்தின் இன்னொரு வகையே கோலெழுத்து. வட்டெழுத்து, கிரந்த எழுத்து, தமிழ் என்னும் எழுத்துத்துகளின் கலவைதான் கோலெழுத்து.

**கோலெழுத்து**



**மலையாண்மை :** வட்டெழுத்திலிருந்து வளர்ச்சி பெற்ற (மலையாளம், தமிழ்) மலையாண்மை என்னும் எழுத்து வகை 1819 வரை அரசு தொடர்பான ஆவணங்களில் பயன்படுத்தப்பட்டு வந்தது.

**திராவிட எழுத்து :** திராவிட எழுத்துமுறை பிராமி எழுத்து முறையிலிருந்து தோன்றியதாகக் கருதப்படுகின்றது. தெற்கு வடக்கு என்னும் வேறுபாடின்றி இந்தியாவின் தேசிய எழுத்து என்னும் பதவி பிராமிக்கு இருந்தது.

தமிழ் உயிரெழுத்துக்கள் மெய்யெழுத்துக்கள் உயிர் மெய் எழுத்துகள்.

**உயிர் எழுத்துக்கள்**

அ, ஆ, இ, ஈ, உ, ஊ, எ, ஏ, ஐ, ஒ, ஓ,ஔ ஃ

**மெய்யெழுத்துகள்**

க், ங், ச், ஞ், ட், ண், த், ந், ப், ம், ய், ர், ல், வ், ழ், ள், ற்,ன்

12 உயிரும் 18 மெய்யுடன் சேரும் போது 216 உயிர்மெய் எழுத்துக்கள் கிடைக்கும்.

கான்ஸ்டான்டின் ஜோசப் பெஸ்கி என்ற இயற்பெயரையுடைய வீரமாமுனிவரே எழுத்துச் சீர்த்திருத்தம் செய்தார். எ, ஒ என்ற உயர்க் குறிலுக்குப் புள்ளி இருந்தன. அவற்றை நீக்கி ஏ, ஓ என்ற நெடில் வடிவத்தை ஆக்கினார். உயிர் மெய்க் குறிலுக்கு உயிர்மெய் நெடிலுக்கும் முறையே ெ, ே என்ற வடிவங்களைத் தோற்றுவித்தார். லை, னை ஆகிய எழுத்துகள் பிற்காலத்தில், லை, னை, ணை, ளை எனவும் னா, ணா ஆகிய எழுத்துக்கள் னா, ணா, எனவும் மாற்றம் பெற்றுள்ளன.

மேலும் சில லிபி வடிவங்களை மாற்றி அமைத்து கு நு சு, ஞு ஆகிய வரிசையை ஒரே வடிவத்தையுடைய லிபியை அமைக்க முடியும். இவ்வாறு எளிமையாகச் சில உயிர் மெய் எழுத்துகளை எழுத இயலும். இவ்வாறான மாற்றங்கள் அச்சிடும் போதும் தட்டச்சு செய்யும் போதுமுள்ள பிரச்சினைகளைக் குறைக்க இயலும்.

## செயல்பாடுகள்

லிபியின் பரிணாமத்தைக் குறித்து கலந்துரையாடினீர்களல்லவா? இப்போதும் எழுதும் வேளையிலும் அச்சிடும் போதும் பிரச்சினைகள் உண்டல்லவா? லிபியின் மாற்றங்கள் மேலும் தேவையா? கண்டுபிடிப்புகள் அறிவுரைகளைப் பதிவு செய்யவும்.

செயல்திட்டம் பழங்கால வரிவடிவங்கள் அமைந்த இதழ்களின் பக்கங்களைச் சேகரித்து தற்போதைய இதழ்களின் பக்கங்களையும் ஒப்பிட்டு எழுதும் முறை. லிபிகளின் வேறுபாடு, மொழிரீதியான வேறுபாடு ஆகியவைக் குறித்து பகுப்பாய்வு செய்யவும்.

### எழுத்துகளை எழுதும் முறை

எழுத்துகளை எழுதத் தொடங்குவதற்கு முன்பாக ஒரு பக்குவம் அதாவது ஆயத்தம் தேவைப்படுகிறது. எடுத்துக்காட்டாக எழுத்துகளில் உள்ள நுட்பமான வேறுபாடுகளை அறிந்து எழுதவேண்டியிருக்கிறது. ( மு, மு, ஒ, ஓ, க,ச, த, ந) சிறிய எழுத்துக்களை எழுதுவதற்கு குழந்தைகளின் கைவிரல்களின் நுண்ணிய தசை நார்கள் போதிய வலிமை, இணைந்து இயங்கும் திறன் ஆகியவற்றைப் பெற்றிருத்தல் வேண்டும். கோடுகளை ஓரளவு சரியாக வரையக் கற்ற பின்னர் மட்டுமே சதுரம் வட்டம் ஆகியவற்றை எழுதப் பழக வேண்டும். வளைவு கோடுகள் வளைந்து முடித்த சுழிகள் ஆகியவற்றை எழுதிய பின்னர் அதன் மேலே மீண்டும் மீண்டும் எழுதச் செய்ய வேண்டும். இத்தகைய பயிற்சிகள் அ, ஆ, இ, ஈ, எ, ஏ, ப, ட போன்ற எழுத்துகளில் பயன்படுகின்றன.

1. நிலைகோடுகள் ( உ.ம்) முழுநீளம் ( ப, ய) பாதி நீளம் ( க, ச்)
2. இடைக்கோடுகள் ( உ. ம்) முழுநீளம் ட, ய, ப) பாதி நீளம் ( க ச த)
3. சுழிகள் ( அ, ஐ பூ ே)
4. வளைவுக்கோடுகள் ( மூ, ரு, ே.ெ )
5. ஒற்றும் சிறு வட்டங்கள் ( க ஃ ஈ ) ஆகியவை தனித்தனியாக அறிமுகப்படுத்தலாம். பின்னர்

இந்தக் கோடுகளை ஓர் ஒழுங்கில் சேர்த்து எழுத்துகளை உருவாக்குவது எளிதாகும். உ. ம் ( ட, ய, ப, ம, ய, அ, ஆ)

## தெளிவு

எழுத்துக்களைத் தனித் தனியாக எழுதுதல் வேண்டும். சங்கிலி போன்ற ஒன்றோடொன்று சேர்த்து எழுதினால் தெளிவில்லாமல் போகலாம். சிலர் இரண்டு எழுத்துக்களைச் சேர்த்து சுட்டெழுத்துகள் எழுதுவர், அவ்வாறு எழுதுவதும் தவறாகும்.

எழுத்தின் வளைவுகளைத் தெளிவாகக் குறித்தல் வேண்டும். மு என்பதற்கும் மூ என்பதற்கும் தெளிவாக வேறுபாடு காட்டும் வகையில் எழுத்து அமையாவிடில் தெளிவிருக்காது. ஒவ்வோர் எழுத்தின் வளைவு, சுழிவு மேற்கோடு ஆகியவற்றை நன்கு கவனித்து எழுத்தின் சீரான அமைப் பில் எழுதுதல் வேண்டும். எழுத்துகளின் முனை முறியாமல் எழுதுதல் வேண்டும்.

### அளவும் அழகும்

எழுத்துகள் ஒரே அளவினவாக இருந்தால் பார்ப்பதற்கு அழகாக இருக்கும். ஒரு வரியில் சில எழுத்துகள் பெரியனவாகவும் சில எழுத்துகள் சிறியனவாகவும் அமைதல் கூடாது. ஆனால் இரண்டு கோடுகளுக்குள் எழுதும் பயிற்சி அளித்தால் ஒரே அளவினதாக எழுத்துகள் அமையும்.

வேண்டாத சுருள்களைச் சேர்த்து எழுதுதலும் மேல்விலங்கு, கீழ்விலங்கு, கொம்புகளை ஒரே வித மாக எழுதாமையும் அழகைக் கெடுப்பவையாகும். சிலர் புள்ளிகளைச் சிறுவட்டங்களாக எழுது வதுண்டு. இடப்பக்கம் சாய்த்து எழுதாது வலப்பக்கம் சாய்த்து அல்லது நேராக எழுத வேண்டும்.

மாணவர்கள் எழுதுகின்ற போதும் பிற எழுத்துப் பயிற்சிகள் பெறுகின்ற போதும் பிழைபட எழுதக் கூடும். அப்பிழைகள் ஏற்படும் காரணங்களை அறிந்து ஆசிரியர் அவற்றை உடனே திருத்துதல் வேண்டும். ஆசிரியர் பிழைகள் ஏற்படுவதற்கான காரணத்தையும் எவ்வகையான பிழைகள் ஏற்ப டுகின்றன என்பதையும் அவற்றைத் திருத்தும் முறைகளையும் அறிந்திருக்க வேண்டும். சில சொற் களை ஒலிக்கும் வேளையில் திருத்தமாக ஒலிக்காமல் இருந்தாலும் மாணவர்களுக்குப் பிழைகள் ஏற்படும்.

வாளைப் பளம் என்பது தவறானது. வாழைப்பழம் என்றே ஒலிக்கவும் எழுதவும் வேண்டும். இது போன்றே தாளம் பூ, தாழம்பூ, வனக்கம், வணக்கம் கனை எய்தான், கணை எய்தான் ஆகியவற் றைச் சான்றாகக் கூறலாம்.

சொற்களைச் சிதைத்துக் கொச்சையாகப் பேசுவதும் பிழைகள் ஏற்படக் காரணமாகின்றன. தாழ்வா ரம் என்பதைத் தாவரம் என எழுதுதல், பாகற்காய் என்பதைப் பாவக்காய் என்பதும். தலையணை என்பதைத் தலகாணி என்பதும் திருத்தமான சொற்களை அறியாததால் வருவனவாம்.

### பொருள் வேறுபாடு அறியாமை

சில சொற்களில் ர, ற, ல, ள, ழ ஆகிய எழுத்துகளை அமைத்து எழுதும் பொழுது பொருள் வேறு பாடு அறியாமையால் மாணவர் பிழைபட எழுதுதல் கூடும். எழுத்து மாறினால் பொருள் வேறுப டும். ஒரு சில சொற்களை எடுத்துக்காட்டாக கூறலாம்.

கனை – நெருக்கம், ஒலி

கணை – அம்பு

களை – நீக்கு

கழை – மூங்கில்

செரு – போர்

செறு – வயல்

மொழிக்கு முதலில் வரும் எழுத்துகளையும் வராத எழுத்துகளையும் அறியாமையால் பிழைகள் ஏற்படுவதுண்டு. ஈரம் என்பதை யீரம் என்றும் நகம் என்பதை ஙகம் எனவும் எழுதுவதும் உண்டு.

மொழிக்கு இறுதியில் வராத எழுத்துகளையும் மாணவர் அறிதல் வேண்டும். இல்லாவிடில் பயிர் என்பதை பயிற் எனவும் வந்தான் என்பதை வந்தாந் என்றும் பிழைபட எழுதுவர். எழுத்துகளின் வரிவடிவத்தை நன்கு உணராமையாலும் பிழைகள் ஏற்படலாம்.

கொ என்னும் எழுத்தில் கெ என்பதை ஒரு வரியிலும் ா என்பதை அடுத்த வரியிலும் தவறாக எழு துவர்.

இவ்வாறு பிழைகளை அவ்வப்போது சுட்டிக்காட்டி நீக்குவதாக இருந்தால் பிழையின்றி சிறப்பாக எழுதுவதற்கு இயலும் என்பதில் ஐயமில்லை.

(நற்றமிழ் கற்பிக்கும் முறைகள்)

**செயல்பாடு**

எழுத்துகளை எழுதவும் உச்சரிப்பதற்கும் சரியான முறைகளைத் தொடக்கப் பள்ளி வகுப்புக ளிலேயே குழந்தைகளைப் புரிந்து கொள்ளச் செய்வதற்கு என்னென்ன வாய்ப்புகளைப் பயன் படுத்தலாம்.

கலந்துரையாடல்

கண்டுபிடித்தல்

டிரை அவுட்

## மொழிக் கம்பியூட்டிங் (இயற்கை மொழிச் செயலாக்கம்)

மொழியின் நுட்பத்தை இந்த அளவு புரிந்து கொண்டு ஒருவருக்கு மொழிக் கம்பியூட்டிங்கைப் பயன்படுத்த இயலும். அதாவது மொழிக் கம்பியூட்டிங்கைச் சரியான முறையில் பயன்படுத்த வேண் டுமாயின் மொழியின் இதுபோன்ற நுட்பங்களையும் அறிந்திருக்க வேண்டும்.

## தமிழ் கம்பியூட்டிங்

கணினிகளில் தமிழ் செயலாக்கம் செய்வதையே தமிழ் கம்பியூட்டிங் என்று கூறுகின்றனர். தமிழ் மொழி தொடர்பாக நடைபெறும் மென்பொருள் வளர்ச்சிச் செயல்பாடுகளையும் இவ்வாறு கூற லாம். கணினியில் தமிழ் தட்டச்சு செய்தல், காட்சிப்படுத்துதல் சொற்களைத் தேர்வு செய்தல், அகர வரிசைப்படுத்துதல், தமிழ் மொழியைப் பேசுதல் போன்று ஆங்கில மொழியினைப் பயன்படுத்தி கணினியில் என்னென்ன செய்ய இயலுமோ அவற்றையெல்லாம் தமிழ் மொழியிலும் செயலாக்கம் செய்யும் நோக்கமே தமிழ் கம்பியூட்டிங்

தமிழ் கம்பியூட்டிங்கின் தகவல்களை தாள் 07 ( தகவல் தொழில்நுட்பக் கல்வி – வாய்ப்புகளும் பயன்பாடும்) அலகு இரண்டில் அளிக்கப்பட்டுள்ளது. தமிழ் கம்பியூட்டிங், விசைப்பலகையில் தாய் மொழியை முறைப்படுத்தும் முறை இன்ஸ்கிரிப்டு, விசைப் பலகையின் மாதிரி போன்ற தலைப்புக ளில் உட்பட்டவற்றைப் பயன்படுத்த வேண்டும்.

## ஸீரோ, விட்த் ஜோய்னர்

இன்ஸ்கிரிப்ட் விசைப் பலகையில் எழுத்துக்களின் குறியீடுகளைப் பயன்படுத்துவதற்கே இந்தப் பொத்தான்கள் பயன்படுத்தப்படுகின்றன. தை என தட்டச்சு செய்ய வேண்டுமாயின் த + ை எனத் தட்டச்சு செய்ய வேண்டும். தொ எனத் தட்டச்சு செய்ய வேண்டுமாயின் த +ெ ா என இரண்டு பொத்தான்களை அழுத்த வேண்டும்.

## நவீன ஊடகங்களும் மொழியும்

தேவையான தகவல்களை ஏதேனும் ஒரு எண்ணுரு ஊடகம் வாயிலாக உடனடியாகப் பெறுவதற்கும் ஒருவருக்கொருவர் பரிமாற்றம் செய்வதின் வாயிலாகவும் தகவல்களைப் பரிமாறிக் கொள்ள உதவுவதும் முழுமையான பங்களிப்புப் பண்புகளையும் உடைய ஊடகங்களையே நவீன ஊடகங்கள் என அழைக்கின்றனர். எண்ணுரு தகவல் தொழில்நுட்பம் வழியாக ஒருவருக்கொருவர் பரிமாற்றம் இல்லாதிருப்பது வரையிலும் தொலைக்காட்சி, கதைப் படங்கள், இதழ்கள், நூல்கள் ஆகியவற்றை நவீன ஊடகங்களுள் உட்படுத்த இயலாது. சமூக வலைத்தளங்கள் (முகநூல், டிவிட்டர், வாட்ஸ் அப் போன்றவை) வலைப்பூக்கள், விக்கிப்பீடியா போன்ற ஊடகங்களும் நவீன ஊடகங்களுள் உட்படும்.

## சமூக வலைத்தளங்கள்

இணைய தளங்களும் தகவல் தொழில்நுட்பங்களும் வழியாக உள்ள நேரடித் தகவல் பரிமாற்றங்களும் அன்றாடச் செய்திகளை அளித்தலுமே சமூக ஊடகங்கள் வாயிலாக நடைபெறுகின்றன. அறிவாக்கம், பரிமாற்றம், கருத்து விவாதங்கள் ஒவ்வொருவரின் கருத்து ஆய்வுகள், பிரச்சாரங்கள், திரைப்படம், புத்தக விமரிசனங்கள் போன்றவற்றை மட்டுமன்றி மனதில் உள்ளவற்றையெல்லாம் பிறருடன் பகிரங்கமாகக் கூறுவதற்கும் பகிர்ந்து கொள்வதற்கும் உதவுகின்ற ஒரு மேடையாக இன்று சமூக ஊடகங்கள் மாறியுள்ளன. இணையத்துடனான கணினி, தொலைபேசி, வரைப்பட்டிகை, மடி கணினி ஆகியவற்றின் வாயிலாக ஒரு நபருக்கு வீட்டில் அலுவலகத்தில் உலகில் எங்கிருந்தாலும் அவர்களுடன் நட்பினைப் பகிர்ந்து கொள்ளவும் கருத்துப் பரிமாற்றம் செய்யவும் இயலும்.

## சமூக வலைத்தளங்கள் - வரலாறு

இன்றைய சமூக ஊடகத்தின் முதல் வடிவம் 1994 இல் உருவான ஜியோஸிசிட் எனக் கூறலாம். நுகர்வோருக்குச் சுயமாகவே வலைத்தளங்களை உருவாக்கவும் பிரச்சாரம் செய்வதற்குமான வாய்ப்பினை ஜியோஸிசிட் அளித்திருந்தது. 1997 இல் சிக்ஸ்டிகிரீஸ் கோம் (sixdegrees.com) செயல்படத் தொடங்கியது. தனிநபர்களுக்குச் சொந்தமாக கோப்புகளை உருவாக்கவும் நண்பர்களின் பெயர்களை அட்டவணைப்படுத்துவதற்குமான வாய்ப்பினை சிக்ஸ்டிகிரீஸ் கோம் அளித்திருந்தது. ஸ்டான்ட் போர்டு பல்கலைக் கழகத்திலுள்ள ஆய்வு மாணவர்களான லாறிபேஜூம், செர்ஜிபறிறும் 1998 ல் கூகிள் தொடங்கிய போது இணையத்தின் உலகில் அது ஒரு புது அத்தியாயமாக மாறியது. அதன் பிறகு புகழ்பெற்ற போப் ஜஸ்டின் டிம்பர் லேக்கின் தலைமையில் 2003 ஆகஸ்டில் மைஸ்பேஸ் .காம் (my space.com) என்ற வலைத்தளத்தின் வருகையானது வட அமெரிக்காவில் அதிகமானோர் பார்வையிடும் ஒன்றாக மாறியது. 2004 ஜனவரியில் கூகிள் ஓர்கிட் (Orkut) தொடங்கியது. அது அதிகப் பிரச்சாரத்தைப் பெற்று சிறிதுகாலம் உலகையே தன்னுள் அடக்கியது.

2004 பிப்ரவரியில் ஹார்வார்டு பல்கலைக்கழக மாணவர்களாகிய மார்க்ஸ், சுக்கர் பர்க், எட்வாடோஸாவரின், டஸ்டின் மோஸ்கோவிட்ஸ், கிறிஸ் ஹியூக்ஸ் ஆகியோர் சேர்ந்து முகநூலைத் (Facebook) தொடங்கினர். முகநூலின் வருகையுடன் சமூக ஊடகத்திற்குப் புத்துணர்வு ஏற்பட்டது. 2005 பிப்ரவரி 14 ஆம் நாள் ஸ்டீவ் சென், சார்ல்ஸ் ஹார்ளி, ஜாவேத் கரீம் ஆகியோர் இணைந்து யூடியூப்

(Youtube) பினை ஆரம்பித்ததுடன் வீடியோ ஸ்டிரீமிங் சமூக ஊடகம் ஆரம்பிக்கப்பட்டதுடன் மக்களின் ஆர்வத்தைப் பெறவும் செய்தது. 2006 மார்ச் மாதம் ஜாக்டோசி என்பவரால் டிவிட்டர் (twiter.com) தொடங்கப்பட்டது. டிவிட்ஸ் (Tweets) என்று அழைக்கப்படும் இணையம் எஸ் எம் எஸ் — டிவிட்டர் எனக் கூறலாம். ஸ்கைப், யாகு, கூகிள் டோக் என்பவற்றின் வாயிலாக மக்களுக்கு காணொளி மாநாடு நடத்துவதற்கும் ஒருவருக்கொருவர் பார்த்து பேசுவதற்குமான வாய்ப்பு கிடைத்தது.

### முகநூலும் கல்வி வாய்ப்புகளும்

சுமார் நூறு கோடி பேர் முகநூலில் உறுப்பினர்களாக உள்ளனர், மார்க் சுக்கர்பர்க் தனது பல்கலைக் கழக மாணவர்களுக்கு சங்கமிப்பதற்கான மேடை என்னும் நிலையில் முகநூலை உருவாக்கினார். கல்வித்துறையில் முகநூலுக்குத் தற்போதும் முடிவில்லாத வாய்ப்புகள் உள்ளன. கேரளம் மிகவும் அடர்த்தியான தொலைத்தொடர்புடைய ஒரு மாநிலம். இணையத் தொடர்புகளிலும் கேரள மாநிலம் பின்னால் அல்ல. இவ்வாறு சாதகமான சூழலை கல்வித்துறையில் எவ்வாறெல்லாம் பயன்படுத்த இயலும் என்பதை ஆலோசிக்க வேண்டும். ஆசிரிய மாணவர்கள் இதனைக் குறித்துக் கலந்துரையாடல், கருத்தரங்கம் ஆகியவற்றை நடத்தலாம்.

### வலை ஒளி

Broad Cast Yourself என்ற வலை ஒளி என்னும் கருத்துருவம் உலகையே தலைகீழாக மாற்றியது உல்லாசத்திற்கும் அறிவிற்கும் வாய்ப்பிற்கும் ஒரு கற்றல் கருவியாகவும் வலை ஒளியைப் பயன்படுத்தலாம். கல்விக்குப் பயன்படுகின்ற பொருள்களுடன் தொடர்புடைய சிறு ஆவணப் படங்களைத் தயாரித்து வெளியிடுவதற்கு ஆசிரியருக்கும் மாணவர்களுக்கும் இயலவேண்டும். பதிவுசெய்த எல்லோருக்கும் பத்து நிமிடம் உள்ள காணொளித் துண்டுகளை வலை ஒளியில் பதிவேற்றம் செய்யலாம்.

### கீச்சகம் (டிவிட்டர்)

உலகிலேயே மிகப்பெரிய நுண் வலைப் பூத்தளம் என (மைக்ரோ புளோகிங் சைட்) டிவிட்டர் அழைக்கப்படுகிறது. ஒவ்வொரு நாளும் 3.5 கோடி தகவல்கள் டிவிட்டர் வழியாகப் பரிமாறப்படுகிறது. உலகில் மிகக் கூடுதல் மக்கள் பயன்படுத்துகின்ற பத்து வலைத்தளங்களுள் ஒன்று டிவிட்டர். அன்றாட வாழ்வின் நெருக்கடியில் மிகவும் சுருக்கமான சொற்களில் தகவல் அனுப்பலாம் என்பதே இதன் தனித்தன்மையாகும். திரைப்பட நடிகர்கள், அரசியல்வாதிகள், சமூகசேவகர்கள், மாணவர்கள் ஆசிரியர் போன்று எல்லோருக்கும் பயன்படுத்தலாம், டிவிட் செய்யலாம், உங்களது கோப்பு பக்கத்துடன் சேர்க்கப்பட்டுள்ளவர்களுக்கு டிவிட்டர் செய்தி கிடைக்கும். விளக்கமான ஒரு தகவல் உங்கள் வலைப்பூவிலோ வலைத்தளத்திலோ அளித்து அதன் வலைத்தள விலாசத்தைக் ஹைப்பர் தொடர்பாக அளித்து தகவலினைத் தெரிவிக்கலாம்.

### வாட்ஸ் ஆப் (புலனம்)

பல்வேறு தளங்கில் செயல்படும் திறன் பேசிகளில் (Smart phone) பயன்படுத்தும் கருத்துப் பரிமாற்ற முறையே புலனம் (Whats app). இணையத்தின் தொடர்புடன் இது செயல்படுகிறது. எழுத்துத் தகவல்கள், மட்டுமன்றி படங்கள், காணொளிகள், ஒலித்தகவல்கள் போன்றவற்றையெல்லாம் இவை வாயிலாகப் பரிமாறிக்கொள்ள இயலும்.

2009 இல் அமெரிக்கரான பிறயான் ஆக்டன், ஜான் கியூம் ஆகியோர் சேர்ந்து வாட் ஆப்பினை உருவாக்கினர். இது முழுமையாக இலவசமாகப் பயன்படுத்தும் ஒன்றாகும். முகநூலிலும், கூகிளும் செய்வது போன்று நுகர்வோரின் தகவல்களை வாட்ஸ் அப் சேகரிப்பதில்லை.

மாணவர்களுக்கு அதிகத் தகவல்களைச் சேகரிப்பதற்கும் பகிர்ந்துகொள்வதற்கும் கற்றல் கருவிகளை ஆசிரியர்களுக்குப் பரிமாறிக் கொள்ளவும் பெற்றோருக்கு தேவையான அறிவுரைகள் வழங்கவும் அவர்களுடன் தொடர்பு கொள்ளவும் வாட்ஸ் ஆப் பரவலாக கல்வி நிறுவனங்களில் பயன்படுத்தப்படுகிறது.

## தொலைவரி

குறுந் தகவல் சேவைக்குட்பட்டதே ஆன்டிரோயிட், வின்டோஸ் போன்ற செல்பேசித் தளங்களிலும், வின்டோஸ், லினக்ஸ் ஆகிய மேசைப்பதிவுத் தளங்களிலும் தொலைவரி கிடைக்கப்பெறும். புகைப்படங்கள், காணொளிகள், ஸ்டிக்கர், ஆவணப் படங்கள் போன்று எவ்வித கோப்புகளையும் இதன் வழியாகப் பரிமாறிக் கொள்ளலாம்.

## படவரி

இலவசமாகப் படங்கள், காணொளிகள் ஆகியவற்றைப் பகிர்ந்து கொள்வதற்கு 2010 அக்டோபரில் வெளியான ஒரு சமூக ஊடக வலைத்தளமே இன்ஸ்டாகிராம். நுகர்வோருக்கு புகைப்படங்கள் எடுப்பதற்கும் தேவையான எண் மின் மாற்றங்களைச் செய்வதற்கும் பயன்படுகிறது. இன்ஸ்டாகிராம் போன்ற சமூகத் தொடர்புத் தளங்கள் வாயிலாகப் பதிவேற்றமும் செய்யலாம்.

## நவீன ஊடகங்களின் மொழி

- உள வெளியீட்டிற்கான வாயில் அல்லவா மொழி. நவீன ஊடகங்கள் அதற்கான வழிகளை எளிமையாக்குகிறது. உள வெளியீடு என்பது இலக்கியப் படைப்போ சமூக/ தனிநபர் பிரச்சனைகளின் எதிர் வினைகளோ ஆகலாம். மொழி அறிவை எந்த அளவு பெற்றுள்ளார்கள் என்பதை இது போன்ற படைப்பில் எந்த அளவு பின்பற்றப்படுகிறது என்பதிலிருந்து அறிந்து கொள்ளலாம்.

- சமூக விமர்சனத்திற்கு வழிவகுப்பதாக மொழி மாறுகின்ற காட்சியே நவீன ஊடகத்துறையில் உள்ளது. சமூக பிரச்சினைகளில் சுய நிலைபாட்டை வெளிப்படுத்துவதற்கு டிரோள்களும் முகநூல் பதிவுகளும் மிகவும் பயன்படுகின்றன. இது போன்றவற்றிற்குத் திரைப்படக் காட்சிகள், அரசியல் நிகழ்வுகள் இவற்றைப் பின்புலமாகப் பயன்படுத்துவது உண்டு. சுருங்கிய சொற்களில் குறியீட்டு முக்கியத்துவத்துடன் நிகழ்வுகளைக் கூறும் திறன் இதற்குத் தேவையாகும். சொற்களின் தேர்வு, பொருத்தம், மொழி வெளியீட்டு முறை ஆகியவை இவற்றில் முக்கியமானவையாகும்.

- காணொளி நிகழ்வுகளுக்கு ஓசை கொடுத்தல் என்பது தொழில் நுட்பத்தை அறிந்து கொண்ட எல்லோருக்கும் இயலுவதாகும். மொழியின் தாக்கம் இல்லாதவர் கூட தகவல்களை அளிப்பதுண்டு, உச்சரிப்புப் பிழை, ஓசை முறையாக அமையாமை, வாக்கிய அமைப்பிலுள்ள பிரச்சினை ஆகியவற்றையும் தீர்வு செய்து நல்ல முறையில் மொழியைப் பயன்படுத்தினால் இதன் வாய்ப்புகள் அதிகரிக்கும்.

- நல்ல தினம், காலை வணக்கம் போன்று எப்போது வேண்டுமானாலும் பயன்படுத்தவும் வாழ்த்துகள் தெரிவிக்கவும் ஏராளம் வாழ்த்துப் படங்கள் இன்று கிடைக்கின்றன. இவற்றிலுள்ள மொழியானது பெரும்பாலும் உணர்ச்சிகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டவையாக இருக்கும், நல்ல மொழி வழக்கம் இருந்தால் மட்டுமே இதுபோன்ற வாழ்த்துக்களைத் தயாரிக்கவும் ரசிக்கவும் இயலும்.

இவ்வாறு படைப்பாற்றலின் பல்வேறு தலங்கள் வழியாகக் கடந்து சென்று தொழில்நுட்பத்தின் உதவியுடன் அவற்றை வெளியிடவும் ரசிக்கவும் வாய்ப்பு கிடைக்கும் போது நவீன ஊடகங்கள் வாயிலாக மொழியும் தொழில் நுட்பமும் வளர்ச்சி அடையும்.

## வலைப்பூ (Blogs) அவரவரே வெளியிட்டாளர்கள்

வலைப்பூக்கள் அவை எழுதப்படும் காலத்தின் மறுபக்கமாகும். பிறர் எவரும் கூறாதது, காணாமல் இருப்பது, பதிவு செய்யப்படாதது போன்று பலவகைமையினை உடைய பல்வேறு பொருளில் படைப்புகளை உருவாக்குபவரின் பிரச்சாரம் செய்யப்படாத ஒரு துறையே புளோக் விருப்பமான தலைப்புகள் வலைப்பூ வாசிப்பவரைத் தேடிவரும் தொழில்நுட்பத்தின் காலகட்டமே இது.

வலைப்பூவின் உருவாக்கம் அதற்குப் பதிவான ஊடகங்கள் என்னும் நிலையிலேயே உள்ளன. வெளியிடப்படும் உள்ளடக்கம் வாசகரை அடைதல் அதன் உண்மைத்தன்மை ஆகிய காரணிகளை உள்ளடக்கியது.

- உள்ளடக்கம் மக்களின் கவனத்தில் வருவதுடன் வலைப்பூ சேவைகளும் ஆய்வு மென்பொருள்களும் (மனித ஈடுபாடின்றி தொழில் நுட்பத்துடன் பகுப்பாய்வு செய்யும் போது உள்ளடக்கத்திற்கு முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது.
- நாம் கையாளும் தலைப்புகளை நவீன ஊடகங்கள் பிற வலைப்பூக்கள் ஆகியவை வெளியிட்டுள்ள தலைப்புகளுடன் தொடர்புபடுத்தும் உயர் தொழில் நுட்பங்கள்.
- உள்ளடக்கமானது இவ்வாறு ஒன்றோடொன்று தொடர்பு கொண்டிருக்கும் கருத்துகளின் உறைவிடமாதலால் நமக்கு கிடைக்கும் தொகுப்புகள் வலைப்பூ உட்பட்ட ஊடகங்களுக்குப் பரம்பரையான ஊடகங்களை விட வலுவினையும் கருத்துப் பரிமாற்றத் திறனையும் கிடைக்கச் செய்கிறது.

வலைப்பூக்கள் படைப்பாளரைப் பொறுத்த வரையில் தங்களது உயிருள்ள புத்தகங்களாகும். அங்கே எழுத்து ஒரு தனிச் செயல்பாடல்ல. வாசித்தல் என்பது ஒரு சமூகக் கலையாக மாறுகிறது. முற்றிலும் உயிரூட்டமான சுற்றுப்புறங்களில் படைப்பாளன் தனது மனதினுள் ஒரு வாசலைத் திறந்து வைத்துள்ளான். வாசித்தலும் எழுதுதலும் மறுவாழ்வு போன்றே தொடர்ச்சியாக நடைபெறுகிறது. வலைப்பூவானது ஆக்கபூர்வமான வாசிப்பின் ஒரு தளமும் ஆகும். ஒவ்வொரு புதிய வலைப்பூவும் வலைப்பூக்களை உயிரூட்டமாக நிலைநிறுத்துகின்ற ஒரு வளர்ச்சியாகும். வளர்ச்சியின் தொடர்ச்சியுமாகும்.

## வலைப்பூக்களின் வாய்ப்புகள்

இணையத்தில் இலவசமாக கிடைக்கும் வலைத் தளப் பக்கத்தில் நமக்கு விருப்பமான பொருளில் சுதந்திரமாகவும் உரிமையுடனும் கருத்துகளை வெளியிடும் ஊடக முறையே வலைப்பூக்கள்.

பல்வேறு பொருள்களை (தலைப்புகள்) குறித்த செய்திகள் விளக்கங்கள் தனிநபர் ஆய்வுகள் போன்றவை வலைப்பூக்களில் முக்கியமாகக் காணப்படும். 1997 இல் பீட்டர் ஜோண் பார்கர் வெப் லோக் (Web log) என்ற சொல்லை முதன் முதலாகப் பயன்படுத்தினார். வலைப்பூ என்ற சொல் வெப் லோக் என்ற இரு சொற்கள் இணைந்து உருவானவையாகும். இவை ஒன்றோடொன்று இணைக்கப்பட்ட வலைப்பூவின் பிளோகோஸ்பியர் என அழைப்பர். புளோகிங் செய்பவரை புளோகர்கள் என அழைக்கின்றனர். வலைப்பூவில் வெளியிடும் கருத்துகளை/ தகவல்களை வலைப்பூ பதிவு என்று கூறுவர்.

ஒருங்கிணைந்த எழுத்துகள் தமிழில் கிடைக்கத் தொடங்கிய போது வலைப்பூக்களும் பிரச்சாரத்திற்கு வந்தன. அரசியல், பண்பாடு, கேலிச்சித்திரம், சமையல், பயணம், விளக்கங்கள், திரைப்பட

விமர்சனம், புத்தக விமர்சனம் போன்று பல்வேறு வகையான படைப்புகளை உள்ளடக்கியதே தமிழ் வலைப்பூக்கள். சுய படைப்புகளும் இன்று வலைப்பூக்கள் வழியாக வாசகரைச் சென்றடைகிறது. முதல் வலைப்பூ நூலாக 'அடைக்கப்பட்ட கதவுகளின் முன்னால்' என்பதைக் கூறலாம்.

மின் அஞ்சல் உருவாக்குவது போலவே எளிமையான முறையில் வலைப்பூவை உருவாக்கலாம். blogger.com போன்றவை வலைப்பூ சேவகர்களாகும், wordpress.com கூகிளின் கட்டுப்பாட்டிற் குள்ளானதாகும். மட்டுமன்றி பெருமளவில் பிரச்சாரமுடையதும் இதுவேயாகும்.

வலைப்பூக்களை உருவாக்குவதன் முதல் நிலை மேற்கூறிய ஏதேனும் சேவை மையங்களில் பதிவு செய்து யூசர் ஐ. டி, கடவுச்சொல் ஆகியவற்றை உருவாக்க வேண்டும். கணக்கினை உருவாக்கி உள்நுழைந்து நமது கணக்கில் அறிவுரைக்கு ஏற்ப முன்னோக்கிச் சென்றால் மூன்று அல்லது நான்கு கிளிக் செய்யும் போது வலைப்பூவை உருவாக்கலாம். வலைப்பூக்களை உருவாக்குவது தொடர் பான அறிவுரைகளும் உதவிகளும் அடங்கிய பல்வேறு வலைப்பூக்கள் உள்ளன. வலைப்பூக்க ளில் உள் நுழைந்து நமக்குப் படைப்புகளை பதிவேற்றம் செய்யலாம். மற்றொருவர் தயாரித்த வலைப் பூவினை வாசிப்பதற்கு வலைப்பூவின் விலாசம் மட்டுமே போதுமானது. இதன் வாயிலாக கருத்துக ளைப் பதிவுசெய்வதற்கான வாய்ப்பும் கிடைக்கும்.

**செயல்பாடுகள்**

- ? சிறந்த கல்வி தொடர்பான வலைப்பூக்களைக் கண்டுபிடித்து அவற்றிலிருந்து தேவை யான கற்றல் வளங்களைக் கண்டுபிடித்து பதிவிறக்கம் செய்து சேமிக்கவும்.
- ? சுயமாக வலைப்பூவினை உருவாக்கி கற்றல் வளங்களைப் பதிவேற்றம் செய்ய வேண்டும்.
- ? நவீன ஊடகங்கள்- அவற்றின் வாய்ப்புகளும் வரையறைகளும் என்னும் பொருளில் கருத்தரங்கம் நடத்தவும்.

## தமிழ் விக்கிப்பீடியா மையம்

ஜனநாயகமும் சுதந்திரமான ஒரு live (நேரலை) கலைக்களஞ்சியம் விக்கிப்பீடியா.

### விக்கி என்றால் என்ன?

தொழில் நுட்ப அறிவு இல்லாதவர்களுக்கும் தகவல்களைச் சேர்க்கவும் நீக்கவும், மாற்றம் செய்வ தற்குமான சுதந்திரமும் வசதியும் அளிக்கும் வலைத்தளங்களே விக்கி ஆகும். எளிமையான கணினி மொழியைப் பயன்படுத்தி விக்கியில் உள்ள பக்கங்கள் படைக்கப்படுகிறது என்பதால் இவற்றில் எல்லோருக்கும் பங்குபெற இயலும். விக்கிப் பக்கங்களைப் படைக்கவோ, மாற்றங்கள் செய்யவோ, வலைத்தள உலாவி அன்றி மற்றொரு மென்பொருளும் தேவையில்லை என்பதே இதனை முக்கி யமாகக் கவர்கிறது.

### விக்கிப்பீடியாவினால் எவற்றையெல்லாம் உருவாக்கலாம்/ உருவாக்க இயலாது.

- விக்கிப் பீடியா ஒரு live (நேரலை) கலைக்களஞ்சியம் போன்று இதற்கு பதிப்புகள் இல்லை.
- live (நேரலை) கலைக்களஞ்சியமாதலால் இவற்றில் பொருள்களின் எண்ணிக்கை இறுதியாகி விடக்கூடாது.
- 100% சரியானவை என்பதற்கப்பால் கலைக்களஞ்சியப் பண்புகளையுடையவையே விக்கிப்பீ டியாவிற்குப் பொருத்தமாக இருக்கும்.

- விக்கிப்பீடியாவை எவருக்கு வேண்டுமானாலும் திருத்தம் செய்யும் சுதந்திரம் உண்டு. எனவே ஒரு கட்டுரையின் உள்ளடகத்தைக் குறித்து உறுதி செய்வதற்கு விக்கிப்பீடியாவால் இயலாது.
- விக்கிப்பீடியாவிலுள்ள தகவல்கள்-— ஆவணப்படத்தின் அடிப்படையில் சுதந்திரமாகப் பயன் படுத்தலாம்.

### விக்கிப்பீடியாவில் யார் யாருக்கு எழுதலாம்.

- பள்ளி மாணவர்கள் முதல் அறிவியலாளர்கள் வரையிலும் விக்கிப் பீடியாவில் எழுதுகிறார் கள்.
- அவரவர் அவரவது துறைகளைக் குறித்து எழுதலாம்.

  எ. கா. தொடக்கப் பள்ளி ஆசிரியர் பள்ளியைக் குறித்து, விவசாயி வேளாண்மையைக் குறித்து
- விக்கிப்பீடியாவில் எழுதுபவையாவும் சரியாக அமைய வேண்டும் என்ற கட்டாயம் வேண் டாம். பின்னால் வருபவர்கள் பிழைநீக்கவும், இணைக்கவும் செய்வார்கள்.

## தமிழ் விக்கிப்பீடியா

அமெரிக்க பல்கலைக்கழகத்தில் ஆய்வு மாணவனான வினோத் மேனோன் விக்கிப்பீடியாவை தொடங்கினார் (2002 டிசம்பர் 21). ஒருங்குறி வருகையுடன் இதற்குப் பிரச்சாரம் கிடைத்தது.

### விக்கிநூலகம்

கடந்தகால விலை உயர்ந்த புத்தகங்களைச் சேகரிக்கும் விக்கியாகும். விக்கி நூலகம் வெளியீட்டு உரிமையின் காலாவதி கழிந்த நூல்களும் விக்கிப்பீடியாவில் உள்ளன.

## விக்கி அகராதி

சொற்கள், உச்சரிப்புகள், பல பொருள் சொற்கள், எதிர்ச்சொற்கள், வாக்கியங்கள், மொழி பெயர்ப்பு கள் ஆகியவை அடங்கியதே விக்கி அகராதி.

### கற்றல் கற்பித்தல் தேவைகளுக்கான வலைத்தளங்கள்

## மின் பாடசாலை

டிஜிட்டல் இந்தியா காம்பயின் தகவல் தொழில் நுட்பக் கற்றல் கற்பித்தல் செயல்முறையைப் பெரு மளவில் பயன்படுத்துவதற்கு மனிதவள வளர்ச்சித் துறையின் அறிவுரைப்படி என்.சி.இ.ஆர்.டி யின் தலைமையில் உருவான வலைத்தளமே மின் பாடசாலை ஆகும்.

நமக்குக் கிடைக்கின்ற எல்லா கல்வி வளங்களையும் (பாடப்புத்தகம், ஒலி ஊடகம்) தினசரிகள், பிற எண்ணுரு வளங்கள்) காட்சிப்படுத்துவதையும் பரவலாக்குவதையும் இது நோக்கமாகக் கொள்கிறது.

மாணவர்களுக்கும், ஆசிரியருக்கும் ஆசிரியப் பயிற்றாளர்களுக்கும் பெற்றோருக்கும் தேவையான வழிமுறைகளையும் வாசிப்பு நூல்களையும் மின் பாடசாலை அளிக்கிறது. இதன் வலைத்தளத்தை யும் ஆப்பையும் சிறந்த முறையில் பயன்படுத்தலாம். அதனுடன் பயன்டுத்த வேண்டிய ஒன்றே — e- Pathashala

## சமக்கிரா போர்ட்டல்

அறிவாக்கத்தின் வாய்ப்புகளை பெருமளவில் பயன்படுத்தி ஐசிடி யின் வாயிலாகச் செயல்பாட்டு முறையிலான வகுப்பறையை நடைமுறைப்படுத்துவதற்கு உதவும் வகையில் எண் மின் கற்றல் வளங்கள் அவற்றைப் பரிமாற்றம் செய்வதற்கான செயல்பாட்டு வடிவங்கள் அடங்கிய கல்வி வலைத்

தளமே சமக்கிரா முதல் வகுப்பிலிருந்து பன்னிரண்டாம் வகுப்பு வரையிலுமுள்ள கல்விச் செயல் பாடுகளை ஒருங்கிணைக்கவும் முறைப்படுத்தவும் தகவல் தொழில்நுட்ப வளர்ச்சிக்கு ஏற்ப தொடர்ந்து நவீனப்படுத்தவும் இயலுகின்ற அமைப்புமாகும். பாடத்திட்டமிடல், பரிமாற்றம், மதிப்பீடு, மேற்பார்வை போன்று எல்லாப் பாட ஏற்பாட்டுச் செயல்பாடுகளும் சமக்கிராவில் அளிக்கும் திட்டமிடல் மாதிரிக ளுக்கு அப்பால் ஆசிரியர் படைப்பாற்றல் தொடர்பாக தயாரிக்கும் பாடத்திட்டமிடல், வளங்கள் ஆகியவற்றைப் போர்ட்டல் வழியாகப் பகிர்ந்து கொள்ளும் வாய்ப்பும் அளிக்கப்படுகிறது.

மாணவர்களுக்கு என தயாரிக்கப்பட்ட துணை வளங்கள், பார்வைத் தொடர்புகள் ஒப்படைப்புகள், கருத்தரங்கக் கட்டுரைகள், சுயமாகத் தயாரித்த கட்டுரைகள், இலக்கியப் படைப்புகளின் வெளியீடு, சுய மதிப்பீட்டிற்கும் ஒருவருக்கொருவர் மதிப்பிடுவதற்குமான கற்றல் பொருள்கள் ஆகியவை இவற்றில் உள்ளன. இதற்காக சமக்ரா போர்ட்டலில் ஒரு ஸ்டுடன்ட் லேணிங் மானேஜ்மென்ட் சிஸ் டம் என்று அழைக்கப்படும் மூடில் (Moodle) இணைக்கப்பட்டுள்ளது. சமக்ராவிலுள்ள வளங்க ளைப் பார்வையிடவும் தேவையானவற்றைப் பதிவிறக்கம் செய்யவும் இயலும். மட்டுமன்றி ஆசிரி யருக்கும், நிபுணர்களுக்கும் உள்நுழைந்து வளங்களை உட்படுத்துவதற்குமான வாய்ப்புகள் உள்ளன.

இவ்வாறு பல்வேறு வலைத்தளங்கள் உள்ளன. அதுபோன்றே கற்றல் வளங்களைத் தயாரிப்பதற்கு உதவுகின்ற மென்பொருள்களும் உள்ளன. அவற்றைக் கண்டுபிடித்து மொழி கற்பித்தல் செயல்மு றைகளுக்குப் பயன்படுத்தவும்.

**செயல்பாடுகள்**

? இரண்டாம் பருவத்தில் தகவல் தொழில்நுட்பமும் கற்றல் கற்பித்தல் செயல்முறையும் ஆகிய தாள்களின் முதல் அலகில் எண்மின் வளங்களை மேம்படுத்துவதற்கான கலந் துரையாடல் பகுதியில் அளிக்கப்பட்டிருக்கும் அன்றாடப் பாடத்திட்டமிடல் மின் பாடத் திட்டமிடல் ஆகியவற்றை மாதிரியாகக் கொண்டு தமிழ்ப் பாடப்பகுதிகளுக்கு எண் மின் பாடத்திட்டமிடல் குறிப்புத் தயாரிக்கவும்.

? மொழி வகுப்புகளைக் கையாளுவதற்கு எந்தெந்த வலைத்தளங்களை எவ்வாறு பயன் படுத்தலாம் என்பதன் அடிப்படையில் கலந்துரையாடல் நடத்தவும். கலந்துரையாடல் குறிப்பு தயாரிக்கவும் (விளக்கமாகத் தாள் 207 இல் அளிக்கப்பட்டுள்ளன)

? தொடக்க நிலை வகுப்புகளில் தமிழ்ப் பாடப்பகுதிகளைப் பரிமாற்றம் செய்வதற்குத் தேவையான எண்மின் வளங்களைப் பட்டியலிட்டுக் கிடைப்பவற்றைச் சேகரிக்கவும் வேண்டும்.

? மின் - வளங்களை உருவாக்குவதற்காக பணிமனை நடத்த வேண்டும்.

## துணை நூல்கள்

1. கலைக் களஞ்சியம்
2. நல்ல தமிழ் எழுத வேண்டுமா? அ. கி. பரந்தாமனார்.
3. மொழியியல் ரா. சீனிவாசன்
4. மொழியியல் தெ பொ. மீ
5. சைபர் கிரைம் - யுவகிருஷ்ணா கிழக்குப் பதிப்பகம்
6. ஆசிரியர் கையேடு வகுப்பு 8 (2015)

## இந்த அலகிலிருந்து எனக்கு ஏற்பட்ட அறிவும் புரிதல்களும்
## சுயமதிப்பீட்டுக் குறிப்புகள்

| எண் | குறிப்புகள்/கூற்றுகள் | முழுமையாக | பகுதியாக | மேலும் தெளிவுபடுத்த வேண்டும் |
|---|---|---|---|---|
| 1. | எழுத்து உருவான சூழல், எழுத்தின் அமைப்பு எழுத்தில் ஏற்பட்ட மாற்றங்கள் ஆகியவற்றைப் புரிந்துகொண்டு மாணவர்களுக்கு எழுத்தை அறிமுகம் செய்யும் வேளையில் இந்த அறிவினைப் பயன்படுத்தவும் வேண்டும். | | | |
| 2. | உயர் தொழில் நுட்ப வகுப்பறைக்குப் பொருத்தமான முறையில் கற்றல் செயல் பாடுகளையும் கற்றல் கருவிகளையும் எனக்கு உருவாக்க இயலும். | | | |
| 3. | பாட ஏற்பாட்டுப் பரிமாற்றத்திற்கு உதவும் வகையில் கணினி சார்ந்த வளங்களைக் கண்டறியவும் அவற்றைப் பகிர்ந்து கொள்வதற்கான தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தவும் எனக்கு இயலும். | | | |
| 4. | தொழில் நுட்பச் செயல்பாடுகளுக்கு உதவும் வளங்கள் தயாரிப்பதற்கான அறிவு உண்டு. | | | |
| 5. | எனக்கு ‘சமக்ரா’ உட்பட்டக் கல்வி வலைத் தளங்களைக் குறித்த அறிவும் உண்டு. | | | |

மேலே தரப்பட்டுள்ள குறிப்புகளுக்கு ஏற்ப உங்களது கருத்துகளைத் தரப்படுத்தவும். பெரும்பான்மையோடும் மேலும் தெளிவுபடுத்த வேண்டும் என்ற குறிப்பினை அளிப்பதாக இருந்தால் அந்தப் பகுதிகளை மீண்டும் கலந்துரையாடலுக்கு உட்படுத்த வேண்டும்.